# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

பிப்ரவரி - 2017
பருவம் 3    புனல் 29

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## தடுப்பூசி

மிக மிக அவசியம்



# ஜல்லிக்கட்டு

## பன்னாட்டு நிறுவனங்களின் பின்னணி

# ஜனநாயகத்தின் முட்டாள்தனம்

## தோழர் பெரியார்



சின்னா பின்னப்பட்டு சீரழிந்து கிடக்கும் ஒரு நாடோ சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், கண்டிப்பாய் அந்த நாட்டிற்கு ஜனநாயகம் என்பது அதாவது அந்த ஜனங்களாலேயே அந்த சமூகத்தை ஆட்சி செய்து, முற்போக்கடையச் செய்வது என்பது முடியவே முடியாது...

...இந்திய நாட்டிலுள்ள மனித சமூகத்தில் சுமார் 6 கோடி மக்கள் தீண்டாதவர்களாக - மனிதர்களால் தொடக் கூடாதவர்களாக-அநேக விஷயங்களில் மனித உரிமைகளை அனுபவிக்கக் கூடாதவர்களாக - தெருவில் நடக்கவோ, குளத்தில் தண்ணீர் அருந்தவோ பொதுக் கோயில், மடம், சத்திரம், சாவடி என்பவைகளில் பிரவேசிக்கவோ சில பொது இடங்களில் சென்று படிக்கவோ, சில பொது இடங்களில் சென்று கூலிவேலை, உத்தி யோகம் முதலிய வைகள் செய்யவோ தடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கொடுமை செய்யப்பட்டவர்களாகயிருக் கின்றார்கள் என்பதில் சிறிதும் ஆட்சேபணையே இல்லை என்பது உலக மறிந்த விஷயமாகும். ஒரு சமயம் 6 கோடி என்கின்ற எண்ணிக்கையில் சிறிது வித்தியாசமிருப்பதாக யாராவது சொல்லியிருக்க லாமே அல்லாமல், இந்த மாதிரி கொடுமைப் படுத்தப்பட்ட மனித சமூகம் இந்தியாவில், இந்துக்கள் என்பவர்களுக்குள் இல்லை என்று யாரும் சொன்னதேயில்லை.

ஆகவே, சற்றேறக் குறைய இந்துக்கள் என்பவர்களில் 3-ல் 1-பங்கு ஜனங்கள், இந்த நிலையில் வெகுகாலமாய் இருந்து வருகின்றதையறிந்தும், இவர் களுக்கு எவ்வித விடுதலையும் இல்லாமலேயே இப்படிச் செய்யப்பட்ட கூட்டாத்தாராலேயே, இந்தியா வுக்கு ஜனநாயக ஆட்சி கேட்டுக் கொண்டு வரப் படுகின்றது.

ஜனநாயக ஆட்சி 'வழியில்' சுமார் 20, 30 வருஷகாலமாக நடக்க சந்தர்ப்பம் கிடைத்து, நடந்து வந்தும், இன்று வரை இந்தமாதிரி ஜனநாயகத் தத்துவம், இந்த 6 கோடி மக்கள் கொண்ட சமூகத்திற்கு ஒரு காரியமும் செய்ய முன்வரவேயில்லை. வேறு யாராவது அவர்களுக்கு ஏதாவது செய்வதாயிருந்தாலும் எந்தக் காரியத்திற்கும் இவர்கள் சம்மதிப்பதும் இல்லை. இவர்களை மீறி ஏதாவது சிறிது நடந்தாலும், நடப்பதாயிருந்தாலும் அது இந்திய ஜனநாயகத்தின் தத்துவத்தின் பலனா யில்லாமல், பிரிட்டிஷ் தனி நாயகத்தின் தயவால் என்றே சொல்லும் படியாகவே நடந்து வந்திருக்கின்றன. வந்துகொண்டே யிருக்கின்றன.

மற்றும், இந்தமாதிரி தாழ்த்தப்பட்டு கொடுமை செய்யப்பட்ட 6 கோடி சமூகமானது இன்றையதினம் எங்காவது, ஏதாவது ஒருவித சௌகரியத்தை வழக்கத்திற்கு விரோதமாய் அனுபவிக்கிறார்கள் என்று சொல்லப் படுமானால், அது ஜனநாயகத் தடையையும் பலத்தையும் மீறி, ஜன நாயகத்தை 'தனிநாயகம்' தோற்கடித்த, ஆதிக்கம் செலுத்தியதின் பயனாய் நடக்கின்றதே யல்லாமல் வேறில்லை என்று உறுதியாய்ச் சொல்லுவோம். வெளிப்படையாய்ச் சொல்ல வேண்டுமானால் பார்ப்பாருக்கோ, சைவருக்கோ, சைவ வேளாளருக்கோ மற்றும் தங்களை "பிரம்ம, க்ஷத்திரிய வைசிய சற்சூத்திர" என்று எண்ணிக்கொண்டிருக்கும் மேல் ஜாதிக்கோ இந்த வெள்ளைக்கார அரசாங்கம் "எமனாக"த்தோன்றியபோதிலும், மேல் கண்ட கொடுமை களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டி ருக்கும் இந்தக் கொடுமைப் படுத்தப்பட்ட 6 கோடி மக்களுக்கு, இந்த வெள்ளைக்கார அரசாங்கம் "சர்வ தயாபரரும், காருண்ய மூர்த்தியுமான கடவுளால்" அனுப்பப்பட்டது என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதில் சந்தேகமும் இல்லை. அதில் ஒரு அதிசயமும் இல்லை.

அன்றியும், இன்று இனியும் கேட்கப்படும் ஜனநாயகச் சுதந்திரங்கள் கூட மேற்கண்ட தாழ்த்தப்பட்டு கொடுமை செய்யப்பட்டமக்களை இனியும் தலையெடுக்க வொட்டாமல் செய்யவேண்டும் என்கின்ற ஆசையைக் கொண்டு தான் கேட்கப்படுகின்றது என்பதை மறுக்கவோ, ஆட்சேபணை சொல்லவோ போதிய காரணம் கிடையா தென்றே தைரியமாய்ச் சொல்லுவோம். இன்று அவர்கள் அனுபவிக்கும் தொல்லைகளில் முக்கியமானது என்ன வென்றால், மற்ற மக்களைப்போல் விகிதாசாரம் தாங்கள் படிக்க முடியாதது, மற்றமக்களைப் போல் தங்கள் விகிதாசாரம் தாங்கள் சம்பாதிக்க முடியாதது, மற்ற மக்களைப்போல் தங்கள் விகிதாசாரம் அரசியல் சுதந்திரங் களை அனுபவிக்க உத்தியோக வகையரா பெற முடியாதது முதலியவைகளாகும்.

இந்தமூன்றும் எந்த ஜனநாயக ஆட்சியிலாவது, ஏதாவது ஒரு பரிகாரத்திற்கு இடம் இருக்கின்றதா? என்று பார்த்தால், பரிகாரம் கேட்பதே தேசத்துரோகமாகவும் ஜனநாயக தத்துவத்திற்கு விரோதமாகவும் பாவிக்கப் படுகின்றது. இதைப்பற்றி யாரும், எந்த ஜனநாயகவாதியும்,

- இதன் தொடர்ச்சி பின்அட்டை உள்பக்கம்

# ஜல்லிக்கட்டு: பன்னாட்டு நிறுவனங்களின் பின்னணி

ஞாலன்

பொங்கலுக்கு முன்பாக 8 ஜன 2017 அன்று, மெரினாவில் நடத்திய அடையாள ஊர்வலமே ஜல்லிக்கட்டுப் போராட்டத்திற்கான இந்த ஆண்டுத் தொடக்கம். அடுத்து 13 ஜன 2017 அன்று, மெரினாவில் ஜல்லிக்கட்டு ஆதரவு மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. இவ்விரண்டும் தொண்டு நிறுவனமான பிக்கி (BiCCI- Biodiversity Conservation Council of India) மற்றும் Care & Welfare தொண்டர்களால் அவர்களது சமூக வலைப்பின்னலில் உள்ள வலைதள மாணவர்கள் - இளைஞர்களால் நடத்தப்பட்டதே. பொங்கலுக்குப் பின் மதுரை அலங்காநல்லூரில் நடத்தப்பட்ட ஊர்வலம், விடிய விடிய அறப்போராட்டம் எல்லாம் பிக்கியால் ஏற்பாடு செய்யப்பட்டதே. ஆனால், வலைதள நண்பர்கள் தாமாக சேர்ந்து, தொடங்கி நடத்தியது என்ற பொய்யை ஊடகங்களைப் போன்றே பலரும் திரும்பத் திரும்பப் பரப்புகிறார்கள்.

நாம் தமிழர் கட்சி, மே 17 இயக்கம், ம.க.இ.க. என பலரும் கூட ஜல்லிக்கட்டுப் போராட்டம் பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களால் திட்டமிட்டுத் தூண்டப்பட்டது என்பதைக் குறிப்பிட மறுக்கிறார்கள். தொண்டு நிறுவனத் திட்டமிடல், செயல்பாடு வலிமையுடையதாக இருக்கிறது என ஒத்துக்கொள்ள வேண்டியதாகிவிடும் என்பதால் மறைக்கிறார்களோ? ஆனால் இதைக் குறிப்பிட்டு தொண்டு நிறுவனங்களை அம்பலப்படுத்தி மக்களிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டிய தேவை இப்பொழுது உள்ளது. ஆளும்கும்பல் மீதுள்ள தமது வெறுப்பை வெளிகாட்ட ஒரு வடிகாலாக இப்படி அரசியலற்ற முறையில் மாணவர்கள் - மக்கள் தொண்டு அமைப்புகள் பின்னே எதிர்காலத்தில் திரளாமல் தடுக்க வேண்டிய கடமையும் உள்ளது.

ஐக்கிய நாடுகள் (United Nation) அவை, சுற்றுச்சூழல் - இயற்கை பாதுகாப்பு பற்றி பல ஆண்டுகளாகத் திட்டமிடுவதும், அறிக்கைகள் வெளியிடுவதும் மாநாடுகள் நடத்துவதும் நமக்குத் தெரிந்ததே. இதனடிப்படையில் பல்லுயிர் பாதுகாப்பு மாநாடு - Convention on Biological Diversity (CBD) திட்டத்தை 1992ல் ‘ரியோ எர்த் சம்மிட்’ மூலம் முன் வைத்து இதுவரை 168 நாடுகள் ஏற்றுக் கையெழுத் திட்டுள்ளன.196 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தியாவும் இதில் கையெழுத்திட்டு பல்லுயிர் பாதுகாப்பிற்கான சட்ட மசோதாவை 2002 ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது.



UN-CBD அமைப்பு, COP திட்டம் Aichi இலக்கு என இயற்கை - உயிரியல் பாதுகாப்பு பற்றி தொடர்ந்து வலியுறுத்தி வழிநடத்தி வருகிறது. இதே துறையில் 30 ஆண்டுகளாக கவனம் செலுத்திவரும் Conservation International ( C I ) என்ற தொண்டு அமைப்பும் இதில் இணைந்து முக்கியப் பங்காற்றி வருகிறது. இத் திட்டத்திற்காக CEPF என்பது நிதி நிர்வாக பணிபுரியும் நிறுவனமாகும். CI-Corporate Partners பட்டியலில் வால்மார்ட், கொக்கோ கோலா, ஷெல், மான்சாண்டோ, நெஸ்ட்லே பொன்ற பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகள் உள்ளன.

(http://www.conservation.org/partners/Pages/default.aspx

பல நாட்டு அரசு அமைப்புகளும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் இதில் அங்கம் வகித்தாலும் இயற்கை - பல்லுயிர் பாதுகாப்பு ஆய்விலும், பணியிலும் CI போன்ற தொண்டு நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த வலைப்பின்னலில் உள்ள தொண்டு நிறுவனங்கள் ஏற்றுக் கொண்ட ஓர் ஆய்வறிக்கையின்படி, இவ்வுலகில் இயற்கை வளம், மிருகங்கள் அதிகம் உள்ள பகுதிகள் தனியே கண்டறியப்பட்டன.

இவை உலக வரைபடத்தில் நாடு, இனம், மதம், மொழி, பண்பாடு கடந்த அளவில் hotspot இடங்கள் என அழைக்கப்படுகின்றன. இவர்கள் பணிபுரிய கவனம் செலுத்தி வரும் பகுதிகளே hotspot ஆகும். இந்தியாவில் இரு பெரும் பகுதிகள் குறிப்பிடப் பட்டுள்ளன. அவை 1. North - East Himalayas என சில வடகிழக்கு மாநிலங்கள் 2.Western Ghats என சில தென் மாநிலங்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கோவை, மதுரை, திருநெல்வேலி என சில பகுதிகள் மட்டுமே அடக்கம்.

பிக்கி என்பது Conservation International (CI) என்ற உலக hotspot திட்டத்தின் கீழ் செயல்படுவதாகவும், UNCBD விதிமுறைப்படி செயல்படுவதாகவும் சொல்கிறது. ஆனால் நிதி ஆதாரம் பற்றிய விவரம் இல்லை. CEPF மூலம் நிதி பெறும் தொண்டு நிறுவனமாக இருக்கலாம் அல்லது வேறு வழியிலும் இருக்கலாம். ஆனால் வெளிநாட்டு நிதி பெறும் பன்னாட்டு வலைப்பின்னலில் உள்ள தொண்டு நிறுவனமேபிக்கியாகும்.

(http://biccindia.org/biodiversity/bio-diversity-hotspots/)

தமிழ்நாட்டில் இயற்கை - பல்லுயிர் பாதுகாப்பு என்பதில் அவர்கள் ஆய்வு செய்து கண்டுபிடித்தது நாட்டுமாடு இனப்பெருக்க (breed) அழிவாகும். இதுவே இயற்கை விவசாயம், மரபு விந்தணு, ஏ2 பால் போன்ற கூறுகளை உள்ளடக்கிய தாகும்.நாட்டுமாடு இனப்பெருக்கத்தில் கோயில் காளை, பொலிகாளை என்ற பெயரில் உள்ள காளைகளுக்கும், ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, எருது விடுதல் போன்ற விளையாட்டுகளுக்கும் இடையே உள்ள சிறிய தொடர்பை கண்டறிகிறார்கள். இவ்விளையாட்டுகள் பீட்டா வின் முன்முயற்சியால் தடையாகியுள்ளன. அதனால் பாதிக்கப்பட்டுள்ள வர்களும் போராடி வருபவர்களும் நிறையபேர் இருந்தனர்.

ஜல்லிக்கட்டுக் காளையை வளர்ப்பவர்களும், மதுரை சுற்று வட்டாரங்களில் இப்போட்டியால் அதிகம் ஆதாயமடைபவர்களும் தேவர் சாதியினர்; மற்ற மாவட்டங்களில் மஞ்சு விரட்டு, ஏறுதழுவுதல், எருது விடுதல், ரேக்ளா பந்தயம் மூலம் அதிகம் ஆதாயமடைபவர்கள் மற்ற இடைநிலை சாதியினர் என்பதையும் அறிந்து முக்கியமான நபர்களை இணைக்கின்றனர்.

கோம்பை நாய் இனப்பெருக்க மையம் வைத்திருப்பவரும், நாட்டு நாய் இனப்பெருக்கம்-வளர்ப்பு பற்றி ஊக்குவிக்கும் பல அமைப்புகளின் அங்கத்தினருமான சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஸ்ரீநிவாஸ் ரத்தினசாமி பிக்கி யின் தலைவர். இவர் சைதாப்பேட்டையில் நடத்திவந்த நாட்டு நாய் இனவிருத்தி மையம் 2015 மே மாதம் மூடப்பட்டதற்கு பீட்டாவே காரணம்.

காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி நிறுவன நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி என்பவரே பிக்கியின் நிர்வாக அறங்காவலரும் ஆவார். திருப்பூர்-ஈரோடு அருகே குட்டபாளை யத்தில் இவருடைய காங்கேயம் காளை இனப் பெருக்க பண்ணை உள்ளது. இவரது பல ஏக்கர் விவசாயமும், பால் - கால்நடை உற்பத்தியும் நலிவடைந்ததற்கு ஜல்லிக்கட்டு தடையும், ஜெர்சி பசு இறக்குமதியும், செயற்கை கருத்தரிப்பு புகுத்தலும் காரணம்.

மேலும், அறம் (ARHAM - Activist for Righteous Harmony of Animals Movement) அமைப்பின் பாலகுமார் சோமு, பாண்டியன் சரஸ்வதி யாதவ் கல்லூரி நிர்வாக இயக்குனர் வரதராஜன் பாண்டியன், மீன்-மஷ்ரூம்-பால் பண்ணை அதிபரான ஓ.சரவண குமார், தொழிலதிபர் கோமக்கம்பேடு ஹிமாக்கிரன் அனுகுலா, பட்டதாரியும் சிவகங்கை - புலிக்குளம் நாட்டுமாடு இனவிருத்தி செய்யும் கால்நடை பண்ணை முதலாளியுமான இராஜா மார்த் தாண்டன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக இயக்குநர் சுந்தர் கணேசன் ஆகியோர் பிக்கி யின் நிர்வாக உறுப்பினர்கள். இவர்கள் பீட்டாவால் பல வகைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டு அல்லது பாதிப்பை உணர்ந்து ஒரே புள்ளியில் இணைந்தவர்கள். இவர்களுடன் Care & Welfare, Bhumi NGO, தோழன், அறப்போர் இயக்கம், Lite the Lights, மற்றும் பெயர் குறிப்பிடப்படாத பல தொண்டு நிறுவனங்களும் இணைக்கப்பட்டன.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டுப் பேரவைத் தலைவர் பி.ராஜசேகரன் மற்றும் வீர விளையாட்டுக் கழக மாநிலத் தலைவர் திருச்சி இராஜேஷ் ஆகியோர் ஆதரவாளர்களாக இணைக்கப்படுகின்றனர். (இதில் நாம் தமிழர் கட்சியின் .சீமான் பிக்கியின் அறங்காவலர் என்று 'அறம்' பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இது உண்மையா என்று அவர்கள்தான் விளக்க வேண்டும்.)

ஹிப் ஹாப் ஆதி, ஆர்.ஜே.பாலாஜி, ராகவா லாரன்சு, ஜி.வி.பிரகாஷ், சிம்பு போன்ற தமிழ்த் திரையுலகினராலும் மாணவர்கள்-இளைஞர்கள்

போராடத் தூண்டப்பட்டனர். இவர்களுள் பலர் பிக்கி யின் வலைப் பின்னலில் இணைந்த ஆதரவாளர்களே!

பிக்கி யின் தன்னார்வத் தொண்டர்கள் 4 வருடங்களாக இது தொடர்பாக பிரச்சாரம் செய்து, கிராமத்து இளைஞர் முதல் நகரத்து மாணவர்கள் வரை ஆயிரக்கணக்கானோரை தங்கள் வலைதள இணைப்பில் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். சோசியல் மீடியாக்களில் நூற்றுக்கணக்கான ட்ரால்ஸ் (Troll cinema போன்று), மீம்ஸ் (Chennai Memes போன்று), பக்கங்கள் (We do Jallikkattu, Save Jallikkattu போன்று) மூலம் ஆயிரக்கணக்கான வலைதளப் பதிவுகள் இட்டு பிரச்சாரம் மேற்கொண்டனர். The Wire, BBC Tamil, bit.ly, Put Chutney, Smile Settai போன்ற வலைதளத்தொலைக்காட்சிகள், பத்திரிக்கைகளில் செய்தியாக்குவதன் மூலம் பரவலாக்கினர்.

இப்படி 4 வருடமாக திட்டமிடப்பட்டு, பலர் இணைக்கப்பட்டு, பரப்புரை செய்துதான் ஜல்லிக்கட்டு போராட்டம் நடந்துள்ளது. திரைப் பிரபலங்கள் ஆளும் கட்சிகளுக்கு ஜால்ராவாக மாறி, அடக்குமுறை வருவதற்கு முன்பே துரோகமிழைத்து ஓடிப்போய், தம்மைத் தற்காத்துக் கொண்டது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை பிக்கி நிர்வாகிகளும், அதன் ஆதரவு தலைவர்களும் அதே துரோகமிழைத்தார்கள் என்பதும்.

நாயகன் (காளை) வில்லன் (பீட்டா) என்ற கதை மரபு சூத்திரத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டைத் தேர்வு செய்துள்ளனர். பலர் இதுபோலவே கர்நாடகாவில் கம்பளா, கேரளாவில் சேத்தாளி-காளபூட்டு, பஞ்சாப்பில் பையில்லகடா எனத் திட்டமிடக் கோருகிறார்கள். Smile Settai என்ற நிகழ்ச்சியில் பிக்கி நிர்வாகிகளே ஜல்லிக்கட்டு ஒரு அடையாளக் குறியீடுதான் என ஒத்துக்கொள்கிறார்கள்.

“நாட்டு மாடு, நாட்டு நாய்க்கு எதிராக பீட்டாவின் நடவடிக்கைகள், ஜெர்சி பசு, ஹெச்.எஃப் பசு, டாபர்மேன் நாய், பொமேரனியன் நாய் போன்று வெளிநாட்டு விலங்கினங்கள் இறக்குமதி செய்வதையும் அவற்றின் செயற்கை விந்தணு இனப்பெருக்க முறையையும் அதிகரித்து, வணிக அளவில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவுவதாகவே உள்ளன.” இது (BiCCI) பிக்கியின் கூற்று.

உலகளவில் உயிரியல் தொழில் நுட்பத்தால் விளைகிற சந்தையே அடுத்து ஆதிக்கம் செலுத்தும். அதற்கான ஆராய்ச்சிக்கும் மூலாதாரத்திற்கும் இயற்கையும், பல்லுயிர்களும் அடிப்படை தேவை. சுய லாபத்திற்காக அவற்றை அழித்து வருவது பன்னாட்டு கார்ப்பரேட்டு கம்பெனிகளே. அவர்களிடமிருந்துதான் அவற்றைக் காப்பாற்றவும் வேண்டியுள்ளது. முதலாளித்துவ சமூகவியலாளர்களும், தொண்டு நிறுவனங்களும் இயற்கை-பல்லுயிர் அழிவின் ஆபத்தைச் சுட்டி, பாதுகாத்து தடுக்கும் பணியை செய்து வருகிறார்கள். அதற்கான நிதியையும் பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களே தருகின்றன. இது நேர் முரணாகத் தோன்றும்.

அதாவது செயற்கை இயற்கை இனப்பெருக்க முரணில் இரு தனி பிரிவுகளாக கார்ப்பரேட் நிறுவனங்கள் பிரிந்து நிற்கவில்லை. பீட்டாவின் செயற்கை இனப்பெருக்க முறை மற்றும் பிக்கியின் இயற்கை இனப்பெருக்க முறை என்கிற முரணை தனக்குள்ளேயே அனுமதித்து எதை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடுகின்றன. கார்ப்பரேட் நிறுவனப் பன்முகத் தன்மை இது. சமூகத்திலுள்ள பல முரண்பாடுகளையும் கார்ப்பரேட்டின் பன்முகத்தன்மையோடே சேர்த்து புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

பீட்டாவும், பிக்கியும் இல்லாமல் நமது இயற்கை விவசாயம், மரபு கருத்தரிப்பு, ஏ2 பால் உற்பத்தி போனறவற்றை மீட்டெடுத்து பாதுகாக்க முடியும். பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு எதிரான போராட்டங்களை வளர்த்தெடுக்கிற கட்சியும், அரசியலும்தான் இளைஞர்களுக்கும் மக்களுக்கும் அடையாளப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடமும் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தை பிக்கி நடத்தியிருந்தாலும், ஜெயலலிதா மறைந்த பிறகு உள்ள ஆளுங்கட்சி அதிமுக-வின் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற சூழலைப் புரிந்து இந்த ஆண்டு கூடுதலாக செயல்பட்டு வெற்றியும் பெற்றுள்ளது. எனினும் மூவாயிரம் பேர் மெரினாவில் கூடுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தோம், இவ்வளவு பேர் கூடுவார்கள் என எதிர்பார்க்கவில்லை என Chutney Chat நிகழ்ச்சியில் பிக்கி நிர்வாகிகள் குறிப்பிடுகிறார்கள்.

போலீசின் காட்டுமிராண்டித் தாக்குதலுக்குப் பின், பிக்கி வலைப்பின்னலில் உள்ளவர்களின் நடவடிக்கைகள்... மரம் நடுவது, மீனவர் இழப்பிற்கு நன்கொடை கேட்பது, போட்டியை அரசு ஆதரவோடு நடத்துவது, நிகழ்ந்ததை எண்ணி புளகாங்கிதம் அடைவது போன்றதாகவே உள்ளன. போலீசின் வன்முறையை பிக்கி நிர்வாகிகள் கண்டிக்கவில்லை; போராடவில்லை.

நாம் தமிழர் கட்சி, மே 17 இயக்கம், ம.க.இ.க. போன்ற ஜனநாயக, புரட்சிகர அமைப்புகள்தான் போலீசின் காட்டுமிராண்டித் தாக்குதலுக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் போராடிக் கொண்டுள்ளனர். இப்போராட்டத்தில் தொண்டு நிறுவனங்களின் கேடுகெட்ட துரோக நடவடிக்கைகளை மாணவர்களும், இளைஞர்களும் ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இனி அரசியல் இலக்கற்ற தொண்டு அமைப்புகளின் பின்னே திரள்வதைத் தவிர்க்க வேண்டும்.

-நன்றி: www.keetru.com

அரசூர் அ.ப.சிவா

# நாலு பேரு நாலு விதமா பேசியது

## பெரியார் இன்றும் என்றும்

கழகங்கள் இல்லாத தமிழகம் என காவிகள் வெளிப்படையாக பேச ஆரம்பித்து விட்டார்கள் பெரியாரியம், திராவிடம் எல்லாம் காலாவதியாகிப் போச்சு என திராவிடக் கட்சிகளின் அரசியலை மேற்கோள்காட்டி ஆங்காங்கே பேச்சு எழுந்து கொண்டிருக்கிற இக்கால கட்டத்தில் அதெல்லாம் தவறு என காட்டியுள்ளது ஓர் நிகழ்வு.

விடியல் ஸ்டாலில் தோழர் இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்.
இதுவரை இங்கு 85 படிகள் ( 2ம் பதிப்பு) இந்நூல் விற்பனை ஆகி உள்ளது. பெரியாரியல் தோழர்களுக்கு இது புதிய செய்தி இல்லை. அதனால் சென்னையில் இளைஞர்கள் மத்தியிலேயே இந்நூலை அதிகம் விற்பனை செய்தோம் என்றார்.




காவி இருள் சூழ்ந்திருக்கிற இந் நேரத்தில் தமிழக இளைஞர்களுக்கு பெரியார் என்ற விடியல் தேவை என்பதை உணர்ந்து இப் பணியை செய்திருக்கிற விடியல் பதிப்பகத்தாருக்கு வாழ்த்துகள்.

இந்த ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சியில் அதிக அளவில் விற்ற புத்தகம் விடியல் பதிப்பகத்தாரின் வெளியீடாக வந்துள்ளது ‘பெரியார் இன்றும் என்றும்’ என்ற பெரியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்புப் புத்தகம். இணையப் பயன்பாடு அதிகரித்துள்ள காலத்தில் படிக்கும் பழக்கம் குறைந்து பார்க்கும், கேட்கும் வடிவில் செய்திகளை கொண்டு போய்ச் சேர்க்கிறது பெரும்பாலான வெகுஜன பத்திரிக் கைகள்.. இப்படிப்பட்ட சூழலில் நடந்த புத்தகக் கண்காட்சியில் 2500 படிகள் விற்று முதலிடத்தை பிடித்திருக்கிறார் பெரியார்.ஏ4 அளவில் நல்ல கட்ட மைப்புடன் உருவாக்கப்பட்ட புத்தகம் இளைய தலைமுறையினரிடம் பெரியாரைப் பெருமளவில் கொண்டுப்போய்ச் சேர்த்திருக்கிறது..
திருப்பூர் புத்தகக் கண்காட்சிக்கு பிப்ரவரி 9 ம் தேதி போனபோது

ரூ. 500 மதிப்புள்ள இந்நூல்ரூ.400ல் கிடைக்கிறது. நூல் பெற நீங்கள் செய்ய வேண்டியது 9789457941, 9443468758, 0422- 2576772 இந்த எண்களுக்கு அழைப்பது மட்டுமே.

## மிக்சரும் தயிர்சோறும்

வீட்டில் வெறும் சோறும் தயிரும் மட்டும் இருக்கும் ஒரு மதிய வேளையில் கடுப்பில் தின்று கொண்டிருக்கும் போது வந்து விட்டார் கலைக் குழு நாரயணன். அடடே .சாப்பிடுவதில கூட அரசியல் என்றார் தட்டை பார்த்தபடி.. ஏற்கனவே சோறும் தயிரும் இருக்கிற கடுப்பில் மிக்சர் வைச்சு தின்னுட்டு இருக்கிகேன். இதுல நீங்க வேற கிண்ட வேண்டாம் என்றேன். உங்க தட்டுல இருக்குங்க தமிழக அரசியல் என்றார்.



எனக்கு உங்க அளவுக்கு அரசியல் அறிவு இல்லை. தெளிவாச் சொல் லுங்க என்றேன். நீங்க என்ன சாப்பிடுறீங்களோ...அதுதாங்க இன்னிக்கு சூழல், அதுல பாருங்க மக்கள் சைடிஷ்சைப் பார்த்த அளவுக்கு மெயின் டிஷ்சைப் பார்க்கலைங்கறதுதான் இங்கே பிரச்சனை. என் தட்டின் வழியே தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தாங்கள் சொல்ல வருவதுதான் என்னவோ சொல்லுங்க இல்லை என்னைச் சாப்பிட உடுங்க என்றேன்.
பன்னீர்செல்வம் மிக்சர் சாப்பிடுறாரு, மிக்சர் சாப்பிடுறாரு அப்படின்னு சொன்னீங்களே... அந்த மிக்சர் தயிர் சோத்துக்கு தொட்டுக்கத்தான் அப்படிங்கறது புரியலையே என் தமிழ்ச்சமூகமே... என்றபடி ஒரு குத்து மிக்சரை அள்ளிப் போட்டபடி கிளம்பி விட்டார். புறாவுக்குப் போரா? அக்கப் போராக அல்லவா உள்ளது?

## என்னது நீங்க எம்.எல்.வா.



கூவத்தூரில் சொகுசுப் பேருந்தில் இந்நாள் எம்.எல்.ஏ க்கள் பவனி வரும் இந்த வேளையில் அரசு விரைவு??!! பேருந்திலிருந்து பஸ் பாஸ் சொல்லாது என்ற காரணத் திற்காக இறக்கி விடப்பட்டிருக் கிறார் திண்டுக்கல் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தோழர். பால பாரதி அவர்கள்.. தோழர்கள் விரைந்து சென்று புகார் செய்து உள்ளார்கள்..
இப்போது என் நினைவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கோவை சூலூர் பாவேந்தர் பேரவையினர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு தோழர்

பாலபாரதி அவர்களை அழைத்து இருந்தார்கள் அப்போது அவர் திண்டுக்கல் சட்ட மன்ற உறுப்பினர். பேருந்தில்தான் வந்திருந்தார் திண்டுக்கல்லிருந்து. நிகழ்வுக்கு வந்ததற்காக தோழர்கள் வழிச்செலவுக்கு கொடுத்த பணத்தை கவரில் இருந்ததை அப்படியே வாங்கி சென்று விட்டேன் 5000 ரூபாய் இருக்கிறது. வழிச்செலவுக்கு எனக்கு இவ்வளவு ஆகாது. உங்கள் வங்கிக் கணக்கு எண் தாருங்கள் திருப்பிப் பணத்தை அனுப்பி விடுகிறேன் என்றாராம். அனுப்ப வேண்டாம் தொகை அதிகமா இருந்தால் எங்கள் சார்பில் உங்களுக்கான புத்தகங்களை வாங்கிக் கொள்ளுங்கள் என சொல்லி விட்டர்கள் பேரவை நண்பர்கள். ஆனாலும் நாம் அந்த நடத்துனரை தவறு சொல்ல முடியாது.. வார்டு கவுன்சிலர்களே 'ஆடி' காரில் வலம் வரும் காலத்தில் சட்ட மன்ற உறுப்பினர் அட்டையை நீட்டிய பின் மயக்கம் வராமல் இருந்ததே பெரிய மன உறுதி .

### மணியாட்டப் போன மாமக்கள்

என்ன தான் இருந்தாலும் மோகன் பகவத் இப்படிச் சொல்லி இருக்க கூடாது.. இந்தியாவில் வாழுகிற கிறிஸ்துவர்கள், இசுலாமியர்கள் அனைவரும் இந்துக்களே என்றிருக்கிறார். இவர் இப்படிச் சொன்னது மயிலாப்பூரில் நிறையக் குடும்பங்கள் ஆடிப் போய் விட்டன.



இருக்காத பின்ன.. ஏற்கனவே டிரம்ப்ட் போடுகிற போட்டில் இருந்தே மீண்டு வரலை. அதுக்குள்ள இவரு வேற இப்படி ஒரு குண்டை தூக்கி போட்டால்... போன வருஷம் மடியில் மண் உருண்டையைக் கட்டிண்டு வாஷிங்டன் விநாயகர் கோவிலுக்கு மணியாட்டப் போன மாமா, அப்புறம் நாலு மாசத்துக்கு முன்னாடி ஐ.ஐ.டியில் படிப்ப முடிச்சுண்டு கையோட விசாலம் மாமி பொண்ணை கல்யாணம் பண்ணிண்டு கம்ப்யூட்டர் வேலைக்கு அமேரிக்காவுக்குப் போன பார்த்தா இவா கதி? மாமா பகவத் சொன்னது போலவே டிரம்ப்ட்டும் அமெரிக்காவில் வாழ்ற எல்லா இந்தியர்களும் கிறித்துவர்கள் தான்னு சொல்லிட்டா.... அதுக்குக்கூட அம்பிகள் அனுசரிச்சுக்கலாம். இந்தியாவுக்கே திருப்பி அனுப்பிட்டா என்ன செய்யறது அப்படிங்கறது தான் ஆத்துல கோலம் போட்டுண்டிருக்க விசாலம் மாமியோட கவலை.. இயேசப்ப்ப்ப்ப்பா..

### கொள்கையில் நிமிர்ந்த குனியமுத்தூர்.

பிப்ரவரி 11 ம் தேதி சனிக்கிழமை தோழர் பெரியார்செல்வத்து குனியமுத்தூர் பொதுக் கூட்டத் - தில் திருமணம் கண்டிப்பா வந்துடுங்க என்றார் கோபி யிலிருந்து மாமா குணசேகரன்.. சரி போகலாம் என குடும்பத் தோரு கிளம்பியாச்சு.. பெரியார் செல்வமும், நதியாவும் கட்டிடப்பொறியாளர்கள். 2015 ம் ஆண்டு பிப்ரவரியில் கருந்திணை சார்பில் திண்டுக்கல்லில் நடந்த காதலர் நாள் விழாவில் காதலர் களாகக் கலந்து கொண்டவர்கள் இன்று வாழ்விணையர்களாக அதுவும் ஆசிரியர் தலைமையில் பொதுக்கூட்டத்தில் எளிய முறையில் மகிழ்வுடன் சென்றோம் கூட்டத்திற்கு. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கீ.வீரமணி தலைமையில் கோவை மாவட்ட, மண்டல நிர்வாகிகள் கலந்து கொண்டு மிகச்சிறப்பாக நடைப் பெற்றது பொதுக்கூட்டமும், கருத்தரங்கமும்.. புதிய கல்வி கொள்கை, நீட் தேர்வு என காவி அரசின் தமிழர் விரோதப் போக்குகளைச் சுட்டிக் காட்டினர் கள் பேச்சாளர்கள்.. ஆசிரியர் வருகைக்கு பின் சுயமரியாதைத் திருமணம் நடைப் பெற்றது. மணமக்கள் இருவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மணமகனின் பெற்றோருக்கே தான் திருமணம் செய்து வைத்த நிகழ்வை, நினைவு கூர்ந்தார் ஆசிரியர் அவர்கள். கோவை குனியமுத்தூர் பகுதி பெரியார் காலத்திலிருந்து அதிக அளவில் தோழர்களைக் கொண்ட பகுதியாகத் திகழ்ந்து வருகிறது. இந்தக் கூட்டம் நடக்க அனுமதி கேட்ட போது காவல் துறை அனுமதி மறுத்ததையும், அவர்களுக்கு குனியமுத்தூர் பகுதியின் திராவிடர் கழகப் பங்களிப்பைப் பற்றி விளக்கும் விதமாக, அப்பகுதியில் பெரியாரும், நடிகவேள் எம்.ஆர்.இராதாவும் பங்கெடுத்த நிகழ்வுகளின் கருப்பு வெள்ளைப் புகைப் படங்கள் அடங்கிய பெரிய தட்டியைச் சுட்டிக்காட்டி ஆசிரியர் அவர்கள் உரையாற்றினார். அப்போதுதான் நடந்தது அந்த நிகழ்வு.



இந்தத் தலைமுறை இளைஞர்களுக்கு அதிகம் அறியப் படாத நிகழ்வு. பொள்ளாச்சி கொள்ளுப்பாளையம் தோழர்கள் முத்து - வீரமணி இணையர்கள் மேடைக்கு வந்தார்கள். தோழர் வீரமணி அவர்கள் தான் கட்டியிருந்த இந்து மதத்தின் இழிவான பெண்ணடிமை தனத்தின் அடையாளமான தாலியை அறுத்து ஏறிந்தார். யாருடைய கட்டாயமும் இல்லாமல் தானே உணர்ந்து தாலியை அகற்றியதாக தோழர் வீரமணி அவர்கள் மேடையில் அறிவித்தார். பொதுக்கூட்ட வடிவங்கள் பழமையாகிப் போன இணைய கால கட்டத்தில் ஒரு சுயமரியாதை திருமணம். ஒரு தாலி அகற்றுதல் என மிகச்சிறப்பாக இருந்தது இந்தப் பொதுக்கூட்டம்.

பெயரில் குனியமுத்தூர். கொள்கையில் நிமிர்த்து நின்றது.

**தி.கருப்புசாமி**, பொள்ளாச்சி

# சிவப்பை அழகென்பது

# நிறவெறி



'சிவப்புநிறம் கொண்டவன் அழகானவன்' இது நம் சமூகத்தின் பொதுவெளியில் உறைந்திருக்கும் சங்கதி. அழகு என்ற சொல்லுக்கு என்ன வரையறை? கண்களாலோ, காதுகளாலோ, மனத்தாலோ அனுபவிக்கும் இனிமையான உணர்வை அழகென்கிறோம். ஆனால், நம் உணர்விலிருந்து பெறுகிற புரிதலைக் காட்டிலும் ஏற்கனவே உருவாக்கப் பட்டிருக்கிற கருத்தைக் கேள்விகளின்றி ஏற்பதே நம் சமூகத்தின் சிக்கலாக இருக்கிறது.

வெள்ளைநிறம் அழகானது என்று யார் சொல்கிறார்கள்? ஏன் சொல்கிறார்கள்? கருப்புநிறம் அழகற்றது என்றால் உலகம் முழுவதும் ஆயத்த ஆடைகளை விற்பனைசெய்யும் பிரபல நிறுவனங்கள் தங்கள் 'மாடலாக' கருப்பின இளைஞர்களைக் காட்சிப்படுத்துகிறார்களே ஏன்?

'அழகானதோற்றம் ஆயிரம் சிபாரிசுக் கடிதங்களுக்குச் சமம்' 'மிடுக்கான தோற்றமும் வசீகரமான முகமுமே உங்கள் வெற்றிக்கான இரகசியம்' என்று விளம்பரப்படுத்துகிற வணிக யுத்திகளும், கோடிகள் புரளுகிற சந்தையும் அதன்பின் உள்ள அரசியலும்தான் அழகின் வரையறையைத் தீர்மானிக்கின்றன.

சனவரி 12 ம் தேதிய தமிழ்இந்துநாளிதழின் செய்தியும் அவ்வப்போது என்.டி.டி.வி யின் செய்திகளின் இடையே ஒளிபரப்பப்படுகின்ற ஒரு அறிவிப்பும் இக்கட்டுரையின் ஆக்கத்திற்கு உந்துதலாக இருந்தன.

என்.டி.டி.வி தொலைக்காட்சி தங்களுடைய தொலைக்காட்சியில் சிவப்பழகுக் களிம்புகளுக்கு (Fairness cream) விளம்பரம் தருவதில்லை என்று அறிவித்திருப்பதுடன் சிவப்பழகுக் களிம்புகள் நிற, இனஅடிப்படையிலான மேலாதிக்கச்சிந்தனையைத் தூண்டக்கூடியது என உறுதிபடச் சொல்லித் தங்களது நிகழ்ச்சிகளின் உடனே தொடர்ந்து இவ்வறிவிப்பைக் காட்சிப்படுத்துகிறது.

7 நாளில் நிறம்மாறும் என்கிற அறிவியல் அறிவிற்குப் புறம்பான கருத்தைப் பரப்ப இடம்தர மறுத்திருப்பதும், சிவப்புநிறம், மட்டுமே அழகான ஆளுமை கொண்டநிறம், கருப்புநிறம் அழகற்ற வரியவர்களின் நிறம் என்பதான கருத்தியல் நிராகரிக்கப்பட்டிருப்பதும் வரவேற்பிற்குரியது.

அமெரிக்காவைச் சேர்ந்த டைலன்ரூப் என்ற 21 வயதுஇளைஞன், 9 கருப்பின மக்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதற்காக மரண தண்டனை பெற்றசெய்தி இந்து நாளிதழில் வெளியாகி உள்ளது அமெரிக்காவின் தெற்கு கரோலினாவில் உள்ள தேவாலயத்தில் பிரார்த் தனையில் இருந்த கருப்பின வெறுப்புணர்வு காரணமாகவே அவர்களைக் கொன்றதாக வாக்கு மூலம் அளித்துள்ளான். தனக்கு அளிக்கப் பட்ட தண்டனையைக் குறைக்க மேல்முறையீடு செய்யப் போவதில்லை எனவும், தான் செய்தது சரி என்பதிலும் அவன் உறுதியாக உள்ளான்.

21 வயதே நிரம்பிய ஒரு இளைஞன் வெறிகொண்டவனாக மக்களைச் சுட்டுக்கொல்லும் இச்செயலை நாம் எப்படிப் புரிந்துகொள்வது? நிறவெறி, இனவெறுப்புணர்வு என்பதன் பின்புலம் என்ன? நிறம்மட்டும்தான்பிரச்சினையா? நிறம் தான் சிக்கல் என்றால் மனிதனுக்கு நிறம் எப்படி வருகிறது

என்பதை அறிவியல் அடிப்படையில் எளிதாகக் கூறமுடியும்

மனிதர்களிடையே காணப்படுகிற நிறவேறுபாடுகளுக்குப் பல்வேறு மரபியல் காரணங்களை ஆய்வாளர்கள் முன்வைக்கும் அதேநேரத்தில், மனிதனின் பரிணாம வளர்ச்சியில் சுற்றுச்சுழலின் தாக்கம் முதன்மையான காரணியாக அறிப்படுகிறது.

அதிகவெப்பம் நிலவுகிற நிலநடுக்கோட்டின் (Equator) அருகில் உள்ள ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா மற்றும் சில ஆசிய நாடுகளைச் சேர்ந்த மனிதர்கள் பழுப்பு மற்றும் கருப்புநிறம் கொண்டவர்களாக இருக்கின்றனர். நிலநடுக் கோட்டிலிருந்து விலகியும் துருவப்பகுதிகளின் அருகிலும் உள்ள மனிதர்கள் வெள்ளை நிறத்தவர்களாக உள்ளனர்.

சூரியனின் கதிர்களில் புறஊதா (Ultra violet) எனப்படும் கதிர்கள் மனிதனின் தோலில் ஊடுறுவி மனிதனுக்கு ஊறுவிளைவிக்கும் தன்மை கொண்டவை. மனிதனின் தோலில் மெலனின் (Melanin) என்னும் ஒரு நிறமி (Pigment) செயல்படுகிறது. இந்த நிறமியே தோலுக்கு கருப்பு மற்றும் பழுப்பு நிறங்களைத் தருகிறது. இந்தநிறமி தோலின் மீது ஒரு திரையைப்போலச் செயல்பட்டுத் தோலை, புறஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து பாது காக்கிறது.

தோல், கண்கள் மற்றும் ரோமத்திற்கு இந்த நிறமிதான் வண்ணத்தைத் தருகிறது. சுற்றுச்சூழலின் தாக்கம் மற்றும் சூரியக்கதிர்களின் வீரியம் இவற்றைப் பொருத்துத் தோலின் நிறம் வெளிரிய தாகவோ அல்லது அடர்நிறமாகவோ அமைகிறது.

நிலநடுக்கோட்டிலிருந்து விலகியிருக்கும் பனிபொழியும் நாடுகளில் வெப்பத்தின் தாக்கமும், புறஊதாக் கதிர்வீச்சும் குறைவு. எனவே அங்குவாழும் மனிதர்களின் தோலில் மெலனின் குறைவாக இருப்பதால் இவர்கள் வெளிரிய நிறத்தவர்களாக இருக்கிறார்கள். எனவே மனிதனின் நிறம் சூழலால் தீர்மானிக்கப்பட்டு மரபு அடிப்படையில் தலைமுறை தலைமுறையாய்க் கடத்தப்படுகிற உயிரியல்பண்பு. இது இயற்கையின் தெரிவு இதுவே அறிவியல் அடிப்படை.

ஆப்ரிக்கக் கண்டத்தில் பரிணமித்த ஆதி மனிதர்கள் 50,000 வருடங்களுக்கு முன்பு ஐரோப்பிய நிலப்பரப்புகளுக்கு வந்தபோது கருப்புநிறம் கொண்டவர்களாக இருந்தனர். தோராயமாக 8000 வருடங்களக்கு முன்புவரை அவர்கள் கருப்புநிறம் கொண்வர்களாகவே வாழ்ந்ததாகவும், பின்பு மெல்லமெல்ல அவர்களின் நிறம் வெளுக்கத் தொடங்கியதாகவும் ஆய்வாளார்கள் தெரிவிக் கின்றனர்.

கருப்புநிறமுடையவர்கள் வெள்ளைநிறம் அடைந்தார்கள் என்பது மட்டுமல்ல வெள்ளைநிறம் கொண்ட மக்கள் வெப்பமண்டலப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தபோது அவர்களின் சந்ததியினர் மெல்லமெல்லக் கருப்புநிறமடைந்தார்கள் என்றும் அறிவியல் கூறுகிறது.

இன்றைய வெள்ளை மனிதனுக்கும் கருப்புமனிதனுக்கும் மூதாதையர் ஒருவரே. மனிதக்குழுக்கள் இடம்பெயர்ந்து, பல்வேறு தட்பவெப்பச்சூழல் நிலைகளில் வாழ்ந்து வந்ததும், அவர்களுக்குள்ளேயே பலதலைமுறைகளாக இனப் பெருக்கம் நடைபெற்றதுமே நிறம் நிலைப் பெற்றதற்கான காரணமாகும்.

தொல்லியல் மற்றும் மரபியல் தொழில் நுட்ப வல்லுனர்கள் மேற்கண்ட கருத்தை உறுதி செய்கிறார்கள். எனவே நிறம் என்பது இயற்கையின் தகவமைப்பு (Adaptation) என்ற நிலையில் கருப்புநிறம் கொண்டவன் எப்படித் தாழ்ந்தவனாகவும் வெள்ளைநிறம் கொண்டவன் உயர்ந்தவனாகவும் மாறினான்?.

வெள்ளைமனிதர்கள் வாழும் ஐரோப்பிய நாடுகள் வளர்ந்த நாடுகளாக இருப்பதற்கும் ஆப்ரிக்க நாடுகள் பின்தங்கியிருப்பதற்கும் மனிதர்களின் நிறம் எவ்விதத்திலும் காரணம் இல்லை. பல்வேறு வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் வளர்ச்சி சாத்தியமாகிறது. இதனை நிறத்துடன் பொருத்தி வெள்ளைநிறம் கொண்ட வர்கள் அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் என்ற கருத்தியல் திட்டமிட்டு நிலை நிறுத்தப்பட்டது.

அய்நூறு வருடங்களுக்கு முன்புவரை அமெரிக்கா செவ்விந்தியர்கள் என்ற பழங்குடி மக்களின் பூமியாக இருந்தது. வேட்டையாடிப் பிழைத்துவந்த பழங்குடிமக்கள் பூமியை விவசாயத்திற்கே பயன்படுத்தவில்லை. பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கடலாடிகளும் போக்கிரித்தனம் கொண்ட செல்வந்தர்களும் அமெரிக்காவில் குடியேறி அங்குவாழ்ந்த செவ் விந்தியர்களைக் கொன்றுக் குவித்துத் தங்களின் அதிகாரத்தை நிலைப்படுத்தினர்.

அந்தப்பூமி அதுவரை தான்சேமித்து வைத்திருந்த செரிவான வளங்களையெல்லாம் ஐரோப்பியக் குடியேறிகளுக்கு (செல்வமாக) வழங்கியது. ஏற்கனவே வளர்ந்த நாடுகளைச் சேர்ந்த ஐரோப்பியக் குடியேறிகள் புதிய நிலப்பரப்பின் வளங்களைப் பயன்படுத்தி மூலதனத்தைத் திரட்டி தொழிற்துறைகளின் வளர்ச்சியை மேம்படுத்தினர்.

போக்கிரித்தனமும் செல்வச்செழிப்பும்மிக்க ஐரோப்பியக்குழுக்கள், கடலாடிகள் மற்றும் மாலுமிகளின் துணையோடு அமெரிக்கா வந்த போது அவர்களிடம் துப்பாக்கி இருந்தது. பழங்குடி மக்களின் வில் அம்புகளை வீழ்த்தியது துப்பாக்கியே தவிர வெள்ளை நிறமுடையவர்களின் வீரமோ விவேகமோ அல்ல! வீழ்ந்தவர்களின் விளைநிலம் இவர்களுக்குச் செல்வத்தைத் தந்தது. இது ஒரு வரலாற்று நிகழ்வு.

வெள்ளைநிறம் கொண்டவனுக்கு இது யதேட்சையாக வாய்க்கப்பெற்றது. எனவே இது ஒரு நிகழ்தகவு (Probability) மட்டுமே. இயற்கையை

எதிர்கொள்ளும் ஒரு தகவமைப்பின் (Adaptation) வெளிப்பாடான நிறம் அறிவின், ஆற்றலின், அதிகாரத்தின் அடையாளமாக மாறியதுதான் வரலாற்றின் பிழை.

ஆப்ரிக்காவில் பல்வேறு ஐரோப்பிய நாடுகள், உள்ளே நுழைந்து அம்மக்களை அடிமைப் படுத்தினர். பல லட்சக்கணக்கான ஆப்ரிக்க மக்கள் , அடிமைகளாக ஐரோப்பியர்களின் குடியேற்ற நாடுகளுக்கு, துன்புறுத்தி, கடத்தப்பட்டனர். இத்தகைய வரலாற்று நிகழ்வுகளால் கருப்புநிறம் கொண்டவன் அதிகாரத்திலும் அறிவிலும் பின்தங்கி யிருந்தான். அடிமையாக இருந்தவன் அடங்க மறுத்து, எதிர்த்து நிற்கும்போது ஆயிரமாண்டு களாக அதிகாரம் செலுத்திவந்தவன் வெறி கொண்டவனாய், மூர்க்கத்தனமாக நடந்து கொள்வது இயல்பே!

பின்தங்கியிருந்த கருப்பின மக்கள் வாழும் ஆப்பிரிக்க நாடுகளிலேயே மொராக்கோ என்கிற நாடு இன்று உலகிலேயே அதிக அளவு பாஸ்பரஸ் உற்பத்தி செய்யும் நாடாக இருக்கிறது. இதைப்போலவே அல்ஜீரியா என்றநாடு அதிக அளவில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடாக வளர்ந்திருக்கிறது. ஆனால் வெள்ளைநிறமக்கள் வாழும், வளர்ச்சியடைந்த அய்ரோப்பிய நாடு களான மால்டோவா, ரொமானியா கொசாவா போன்ற நாடுகள் பெரியஅளவில் வறுமையையும் பொருளாதாரச் சிக்கல்களையும் எதிர் கொண்டுள்ளன.

இரஷ்ய ஒன்றியத்தில் மிகவும் செல்வம் படைத்த நாடாக இருந்தது மால்டோவா. இரஷ்யா உடைந்தபோது மால்டோவாவிலிருந்த டிரான்ஸ் நிஸ்ட்ரிய என்ற பகுதி தன்னைத் தனிநாடாக அறிவித்துக் கொண்டது. பெரும் பான்மையான தொழிற்கூடங்களைக் கொண்ட டிரான்ஸ்ட்ரிய தனியானதால் மால்டோவா இன்று வறுமையில் இருக்கிறது. வரலாற்றின்போக்கு எந்த மனித இனத்தின் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டு விடும்.

வரலாற்றின் அடிப்படையில் கருப்பின மக்கள் (முன்னேற) பலதடைகள் இருந்துள்ளன. அவர்களின் நிறத்தைக் காரணமாக்கி அவர்களது உழைப்பைச் சுரண்டிய வெள்ளை இனம் தன்னை அறிவாளி என்று கூறிக்கொண்டது ஒரு முரண்நகை.

மாற்று நிறத்தவரை, மாற்று இனத்தவரை வெறுப்புடன் பார்ப்பது பழைய கோட்பாடுகளின் சொற்ப அளவிலான நீட்சியாகவே இருக்கிறது. இன்றைய நவீன உலகில் அணுசக்தித் தொழில் நுட்பம், இராணுவப்பலம், பொருளாதார மேம்பாடு இவற்றால் உருவாகிற மேலாதிக்கச் சிந்தனையே முதன்மையாக இருக்கிறது. உலகமயமாக்கல் என்ற தளத்தில் சந்தைவிரிவாக்கமும் வர்த்தக நலனுமே முக்கியக் கோட்பாடுகளாகும். எனவே நட்பும் எதிர்ப்பும் இது சார்ந்தே உருவாகிறது.

# நுகர் கலாச்சாரம்

காதலர் நாள்
நுகர்வு கலாச்சாரம்
கத்தி திரிந்தனர்
இல்லையில்லை
காதலே நுகர்வுதான்
வா....
வந்து நுகர்.....

வாழ்த்து அட்டையின்
ஒட்டியிருந்த பசையில்
உன் உதட்டின் ஈரம்.....

காதலெனும் காட்டாறு
உடைத்துவிடும்
ஜாதிய கரைகளை
துடைத்துவிடும்
ஜாதிய கறைகளை.....

காடு வெட்டி
கோடாரிக்கு
தெரியுமா?
பூ பறிக்க.....

நீ இனிப்பு
சாப்பிட
நான் இனிப்பாய்
சாப்பிட்டேன்



# பெண்ணியப் போராளி பெரியார்

இன்குலாப்

பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் சுயமரியாதை இயக்கம் தமிழகத்தில் ஏற்படுத்திய விளைவுகளைப் பெரியார் அவர்களே பின்வருமாறு மதிப்பீடு செய்கிறார்.

> "சுயமரியாதை இயக்கம் தமிழ்நாடு, மலையாள நாடு, ஆந்திர நாடு ஆகியவைகளைச் சமுதாய இயலில் ஒரு கலக்கு கலக்கிவிட்டிருக்கிறது. மத இயலிலும் மகா பண்டிதர்கள், ஞானிகள், ஆச்சாரியர்கள் என்பவர்களையெல்லாம் மாறிக் கொள்ளச் செய்திருக்கிறது. தோழர் காந்தியாரையே பல கரணங்கள் போடச் செய்துவிட்டது.
>
> பெண்கள் உலகில் உண்மையான சுதந்திர வேட்கையைக் கிளப்பிவிட்டது. கீழ்சாதி, மேல்சாதி யென்பவைகள் ஒடுவதற்கு ஓட்டத்தில் ஒன்றுக் கொன்று பந்தயம் போடுகின்றன. கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும், பைபிளுக்கும், குர்ஆனுக்கும் புதிய வியாக்கியானங்களை செய்யத் தலைப்பட்டு விட்டனர். காங்கிரஸ் தொல்லை இல்லாமல் இருந்திருக்குமானால் இந்தியா பூராவையும் சுயமரியாதை இயக்கம் இன்னும் அதிகமாய் கலக்கி இருக்கும் என்பதோடு, பார்ப்பனியம் அடியோடு மாண்டிருக்கும் என்றே சொல்லலாம்."
>
> -பெரியார் சுயமரியாதை, சமதர்மம் நூல்

பாரதிதாசன் பற்றிய கட்டுரை ஒன்றில் பெரியார் அவர்களின் இக்கூற்றை மேற்கோள் காட்டிய நான் இவ்வாறு என் கருத்தைத் தொடர்ந்தேன்.

பெரியார் கூட ஒன்றையும் சேர்த்துச் சொல்லி இருக்க வேண்டும். பைபிளுக்கும், குர்ஆனுக்கும் புதிய வியாக்கியானங்கள் வந்தன.

அதைவிடக் கூடுதலாகத் திருக்குறளுக்குப் புதிய விளக்கங்கள் தர வேண்டிய கட்டாயத்தை மரபில் ஊறிய தமிழறிஞர்களுக்கு பெரியார் ஏற்படுத்தினார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்துறையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களின் பார்வையில் 'பெண்வழிச் சேறல்' என்ற தலைப்பில் கட்டுரையொன்று படித்தேன்.


> கற்பு, விபசாரம் என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு என்பதும் மற்றவர்களை அடிமையாக்கவும் கட்டுப்படுத்தவும் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சி நிறைந்த தன்மை கொண்டது என்பதும் தானாகவே விளங்கிவிடும்

'பெண் வழிச் சேறல்' என்ற குறள் அதிகாரத்துக்கு மணக்குடவர் பரிமேலழகர் தொடங்கி, பதினேழாம் நூற்றாண்டின் வீரமாமுனிவர் வரை ஒரே மாதிரியான பொருள் கொண்டுதான் உரை எழுதினார்கள்.

பெண் வழியே செல்லுதல் என்பது, பெண்வழிச் சேறல் என்பதன் பொருள், சேறல் செல்லுதல், மனைவியைத்தான் வள்ளுவர் பெண் என்கிறார். இத்தொடருக்கு "இன்பங்காரணமாக மனையாள் வழி ஒழுகுதல்" என்று மணக்குடவரும், "தன் வழி ஒழுகற் பாலளாகிய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்" என்று பரிமேலழகரும் விளக்கம் தருகின்றனர். கிட்டத்தட்ட இந்த உரை விளக்கந் தான் 20 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

பெரியார் அவர்களால் 'பெண் ஏன் அடிமை யானாள்?' என்ற நூல் 1.1.42 ல் பெரியார் சுய மரியாதைப் பிரசார நிறுவனத்தின் சார்பில் வெளி யிடப்பட்டிருக்கிறது. 1982 -ல் பதினான்காவது பதிப்பாக வெளியிடப்பட்ட நூலையே நான் பார்த்தேன். "தந்தை பெரியார் அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது" என்ற ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் இப்பதிப்பின் முன்னுரையில் கூறுகிறார்.

கற்பு, வள்ளுவரும் கற்பும், காதல், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, விபச்சாரம், விதவைகள் நிலைமை, சொத்துரிமை, கர்ப்பத்தடை, பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் எனப் பத்துத் தலைப்புகளில் தம் கருத்தை விவரித்துச் சொல்கிறார்.



"கற்பு" என்ற முதல் அத்தியாயத்தில், கற்பு என்ற சொல்லின் பொருளையும் கருத்தின் பின்னணியையும் விளக்குகிறார். ஆரிய அர்த்தத்தின்படி "கற்பு"என்கிற பதத்திற்குப் பதிவிரதை என்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயம்.

அதாவது பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதியைத் தவிர வேறு எவரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன், பதி என்கிற வார்த்தைக்கு அதிகாரி,

எஜமான், தலைவன் என்கின்ற பொருள் இருப்பதால் அடிமைத் தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்துகின்றன"*(மேற்படி நூல் பக்கம்-14)* என்கிறார்.

*இதை இன்னும் கூர்மையாக அடுத்து விளக்குகிறார்.*

"நாயகன் நாயகி என்கிற சமத்துவமுள்ள பதங்களும் கதைகளிலும், புராணங்களிலும் ஆண், பெண் இச்சைகளை உணர்த்தும் நிலைகளுக்கே மிகுதியும் வழங்கப்படுகின்றன. ஆகவே காமத்தையும் அன்பையும் குறிக்கும் காலங்களில் சமத்துவப் பொருள் கொண்ட நாயகர் - நாயகி, தலைவர் - தலைவி என்ற நிலைக்கு வரும்போது அதைப் பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்படுத்தி, பதி ஆகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ளவேண்டுமென்ற கருத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. (பக் -15)

*இவ்விடத்தில் பெரியாரின் உண்மையைத் தேடும் கூரிய பார்வை, திருக்குறள் குறித்து மௌனம் சாதிக்க இடம் தரவில்லை. "அதாவது குறளில் வாழ்க்கைத் துணை நலத்தைச் சொல்ல வந்த 6-ஆம் அத்தியாயத்திலும், பெண் வழிச் சேரல் என்பதைப் பற்றிச் சொல்ல வந்த 91-வது அத்தியாயத்திலும் மற்றும் சில தனி இடங்களிலும் பெண்கள் விஷயத்தில் மிக்க அடிமைத் தன்மையும் புகுத்தப் பட்டிருப்பதாக எண்ணக்கிடக்கின்றன".*

*மேற்கண்ட நூலின் அச்சுப்படியில் 'பெண்வழிச் சேறல்' என்பது 'சேரல்' என அச்சிடப்பட்டுள்ளது. 'சேறல்' என்பதற்கு, செல்வது என்பது பொருள், 'சேரல்' என்பதற்கு சேர்வது என்பது பொருள். பெரியார் 'சேரல்' என்றே எழுதினாரா என்பதற்கு எந்தக் குறிப்பும் இல்லை.*

*இந்த இரண்டு அதிகாரங்களிலும் பெண் அடிமைத்தனம் வலியுறுத்தப்படுவதை ஆராய வேண்டுகிறார் "கடைசியாக திருவள்ளுவர் ஒரு ஆணாகயில்லாமல் பெண்ணாயிருந்து இக்குறள் எழுதி இருப்பாரானால் இம்மாதிரி கருத்துக்களைக் காட்டி இருப்பாரா என்பதையாவது கவனிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்" என்கிறார்.*

*பெரியாரின் இக்கட்டுரைக்கு ஆன்ற தமிழ்ப் புலவர்கள் விடையிறுக்க முன் வந்ததில் வியப்பொன்றுமில்லை. இந்தப் புலவர்களுக்கும் பெரியார் 'வள்ளுவரும் கற்பும்' என்ற அடுத்த கட்டுரையில் கேள்விகளை முன்வைக்கிறார். இது அக்கால கட்டத்தில் மாபெரும் விவாதங்களைக் கிளப்பியுள்ளது. 'இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி' என்ற முனைவர் பட்டத்துக்கான ஆய்வேட்டில், மகளிர் தொடர்பான ஆய்வுகளைச் சுட்டிச் செல்கிறார் முனைவர் தி.சு. சத்தியம். இந்த ஆய்வுகளில் பேராசிரியர் தொ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் 'வள்ளுவரும் மகளிரும்' என்ற நூல் பற்றி ஆய்வாளர் சுட்டுவது குறிப்பிடத்தக்கது.*

ஒடுக்குமுறைக்கு எதிரான சிந்தனை என்பது, பெண் ஒடுக்குமுறையைப் பொறுத்துக் கொள்ளாதது. பெரியாருடைய சிந்தனை வளர்ச்சியை இந்த நோக்கில் தொடர்ந்து கவனித்தால் அவர் ஒவ்வொரு தளையாக உடைத்தெறிய முயல்வதையே காணலாம்.

*"வள்ளுவர் மகளிரைத் தாழ்த்தவில்லை என்றும் சிறைப்படுத்தவில்லையென்றும், அடிமையாக்க வில்லையென்றும் வாதிடுகின்றார் தொ.பொ.மீனாட்சி சுந்தரனார். பெண்ணுக்குப் பொருட்பாலிலும் பங்குள்ள பாங்கை, துறவிலும் பெண்துணையாகும் இயல்பை விளக்கும் ஆய்வாளர், 'கொழுநன் தொழுதல்', 'தற்கொண்டான்' மற்றும் 'பிறன் பொருளாய்' போன்ற தொடர்களால் பெண் தாழ்த்தப் படாத தன்மையையும், 'வரைவின் மகளிர்' 'பெண்வழிச் சேறல்' போன்ற அதிகாரங்களிலும் அவளின் மாண்பு மறைக்கப்படாத பெற்றியையும் விளக்கமாக ஆராய்கிறார்" என்கிறார் தி.சு.சத்தியம்.*

*தொ.பொ.மீ மட்டுமல்ல, திரு.வி.க., நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார், டாக்டர் மு.வரதராசனார், சாமி.சிதம்பரனார் போன்ற அறிஞர்களும், வள்ளுவரின் பெண்ணிய பெருமையைக் காப்பாற்ற வேண்டிய நெருக்கடிக்கு ஆளானார்கள்.*

*மணக்குடவர் பரிமேலழகரில் இருந்து தொடங்கிய பெண் வழிச் சேறலுக்கான உரை மரபு, இருபதாம் நூற்றாண்டில் மாறியது. பழைய உரை பொருந்தாது என்பதைத் தமிழறிஞர்கள் உணர்ந்து கொண்டார்கள்.*

*திருக்குறள் மீது தமக்கும் 'பக்தி' இருப்பதாக ஓரிடத்தில் கூறிக்கொள்ளும் பெரியார், பெண்ணுரிமை என்ற நோக்கில் திருக்குறள் உட்பட அனைத்து நூல்களும் பெண்களுக்கு அநீதி செய்வதைத் தெளிவாகவே முன் வைக்கிறார்.*

*"பெண்ணைக் கொள்ள ஆணுக்கு உரிமை இருந்தால் ஆணைக் கொள்ள பெண்ணுக்கும் உரிமை வேண்டும். ஆணைத் தொழுது எழ வேண்டும் என்று பெண்ணுக்கு நிபந்தனை என்றால் பெண்ணையும் ஆண் தொழுதெழ வேண்டும்" என்கிறார் பெரியார்.*

பெண்வழிச் சேறலில் வள்ளுவரை நியாயப்படுத்தி தொ.பொ.மீ முன்வைக்கும் கருத்துக் களைக் காணலாம்.

"அறத்தினையும் பொருளையும் கருதாது இணைவிழைச்சு ஒன்றே கருதிப் பெண்களோடு வாழ்தலையே வள்ளுவர் பழிக்கின்றார். அறவழியில் நின்று பொருள் வரும் வழி அறிந்த அறிவுடைய இல்லாளின் அறவுரைகளைத் கேட்டலாகாது எனத் திருவள்ளுவர் கூறுகின்றார் இல்லை. அறம் பொருள் வேண்டாது இணைவிழைச்சு ஒன்றே வேண்டி விழைதலையும் ஏவல் செய்தலையும் அஞ்சுதலையுமே பழிக்கின்றார். 'பேணாது பெண் விழைவான் என்பதற்கு அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பான்' என்று மனக்குடவர் கூறுகின்ற உரையினைக் காண்போம்" என்று தொ.பொ.மீ வாதிடுகிறார்.

தந்தைவழிச் சமூக விழுமியங்களில் ஆழ்ந்த தமிழ்நெஞ்சங்கள், தொ.பொ.மீயின் இந்த வாதத் தால் நிறைவு கொள்ளலாம். இந்த விவாதங்களைப் பெரியார் எப்படி எதிர் கொண்டார் என்பதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை எனினும் அவரது பகுத்தறிவு வழியில் நிற்போருக்கு இந்த விளக்கங்கள் மீது கேட்பதற்கு ஏராளமான கேள்விகள் உண்டு.

அறம் பொருள் பேண ஆடவனுக்குரிய கடமைகள் பெண்களுக்கு விதிக்கப் பட்டுள்ளனவா? இவற்றைச் சுதந்திரமாகச் செய்யும் உரிமை பெண்களுக்கு உண்டா? ஆடவனுக்கு நிகராகப் பெண்ணுக்கும் இக்கடமைகள் இருந்திருந்தால், ஆடவனின் இணைவிழைச்சு (இத்தொடர் இக்காலத்தது) நாட்டத்தை வேட்கையைப் பெண் மறுத்திருப்பாளே, மாறாகத் திருக்குறள் காட்டும் பெண் தலைவி பொருள் நாடிச் செல்லுகின்ற தலை வனைப் பாராட்டுகிறவளாக இல்லை, தடுப்பவ ளாகவே காமத்துப் பாலில் காட்டப்படுகிறாள்.

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. - குறள் 1151
அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிதாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். - குறள் 1160

இப்படிப் போராடுவபவளாகத்தான் தலைவி திருக்குறளில் சித்தரிக்கப்படுகிறாள்.

சங்க இலக்கியங்களை வீரநிலைக் காலம் அல்லது இயற்கை நெறிக்காலம் என்று குறிப்பது இக்கால ஆய்வாளர்களின் மரபு. சங்க காலப் புலவர்களின் பல கண்ணோட்டங்களிலிருந்து திருக்குறள் மாறுபட்டது என்பதைப் பல ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். திருக் குறளில் பரத்தையர்ப் பிரிவை நீக்கி ஊடலுக்கு வழிகாட்டியவர் என்றும், 'மருதத்திணையைத் தூய்மைப் படுத்தியவர்' என்றும் திருவள்ளுவரைத் தொ.பொ.மீ. போன்றவர்கள் பாராட்டுகின்றனர். இப்படிச் சிந்தனை ஒழுங்கை அமைத்துக் கொண்ட வள்ளுவர் பொதுக்கடமைகளுக்கு இடையூறாகும் நோக்கத்திலேயே 'பெண்வழிச் சேறலை'க் கண்டனம் செய்தார் எனில், பரத்தையர் பிரிவைப் போலப் பிரிவாற்றாமையையும் நீக்கி இருத்தல் வேண்டுமல்லவா?

தமிழறிஞர்களின் உரைகள் ஒருபுறமும், பெரியார் எழுதிய கேள்விகள் மறுபுறமும் நீடிக்கின்றன. பெண்ணிய நிலைப்பாட்டில் நின்று, துணிவாகச் சிந்திக்கும் யாரும் பெரியார் கேள்வி களின் நியாயத்தை உணர்ந்து கொள்வார்கள். தமிழ் அறிஞர்கள் சொல்லும் உரை விளக்கங்கள் குறித்துப் பெரியார் இப்படிச் சொன்னார்.

"இனி இதற்கு விசேட உரைகளும் தத்து வார்த்தங்களும் பலப்பல சொல்ல பல வித்து வான்கள் முந்தக்கூடும். ஆனாலும் தத்துவார்த்தமும் விசேட உரையும் சொல்ல முடியாத சப்தங்களும் எழுத்துக்களும் வாக்கியங்களும் செய்யுள்களும் உலகத்தில் கிடைப்பது அரிது என்பது யாவரும் அறிந்ததாகும். ஆதலால் இதற்கு மாத்திரம் தத்துவார்த்தமும் விசேட உரையும் கொண்டு பொருள் கூற வேண்டிய காரணம் அறிவாளிகளால் ஒப்புக் கொள்ளக் கூடியதாகும்".

- பெண் ஏன் அடிமையானாள்? பக்கம் 21

ஒடுக்குமுறைக்கு எதிரான சிந்தனை என்பது, பெண் ஒடுக்குமுறையைப் பொறுத்துக் கொள்ளாதது. பெரியாருடைய சிந்தனை வளர்ச்சியை இந்த நோக்கில் தொடர்ந்து கவனித்தால் அவர் ஒவ்வொரு தளையாக உடைத்தெறிய முயல்வதையே காணலாம். பால்ய மண எதிர்ப்பு, கைம்பெண் மண ஆதரவு, புரோகிதத் திருமண மறுப்பு, சாதி திருமண எதிர்ப்பு, சடங்கு மறுப்பு, தாலி மறுப்பு என்று தொடர்ந்த அவரது முயற்சிகள் ஒரு கட்டத்தில் திருமண மறுப்பு என்ற புள்ளியை நெருங்குவதில் வியப்பு எதுவுமில்லை. திருமணம் தேவையற்றது என்ற கருத்து அவருக்குப் பிற்காலத்தில் தோன்றிய ஒன்றுதான். மணியம்மை யாருடன் அவர் செய்து கொண்ட வாழ்க்கை ஒப்பந்தம் 1949ல். திருமண மறுப்புப் பற்றிய திட்ட வட்டமான கருத்தக்களை 1967 ல் தான் வெளி யிடுகிறார்.

காலச்சுவடு செம்டம்பர் 04 - இதழில் தோழர் இரவிக்குமார் எழுதிய கட்டுரையில்,"திருமணம் என்பதைக் கிரிமினல் குற்றமாக்க வேண்டும் என 1933 முதல் 1973 வரை பலமுறை பேசிய பெரியார்" என்று கூறுகிறார். திருமணம் கிரிமினல் குற்றம் என்று பெரியர் சொன்னதை அவருடைய 'புலனாய்வுக் கட்டுரை' எடுத்தக் காட்டவில்லை. தோழர் விடுதலை இராசேந்திரன் ஒரு கருத்தரங்கில் இந்தக் கால வேறுபாட்டை மிகத் தெளிவாக விளக்கினார்.

பெரியாருடைய செயல்களாக இரவிக்குமார் சுட்டிய எதுவும் இரவிக்குமார் கண்டுபிடித்தது இல்லை. வேறு யாரும் துப்பறிந்து சொன்ன தகவல்களும் இல்லை. அனைத்தும் பெரியாரால் ஒளிவு மறைவு இன்றி முன்வைக்கப்பட்டவை. வெகுகாலத்துக்கு முன்பு பேராசிரியர் க.அறிவழகன்

அவர்களிடம் "பெரியார் ஏன் இப்படி ஒரு திருமணத்தை இந்த வயதில் செய்து கொள்ள வேண்டும்?" என்று கேட்டேன். திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்ததற்கு இந்தத் 'திருமணமும்' ஒரு முதன்மையான காரணம். பேராசிரியர். க.அறிவழகன், பேராசிரியர்.க.அன்பழகனின் தம்பி, மிகத் தீவிரமான தி.மு.க.காரர். இருந்தும் அவர் சொன்ன பதில் இன்றும் என் நினைவில் நிற்கிறது.

"பெரியார் யோக்கியன்"

பெரியாருக்கும் மணியம்மையாருக்கும் ஏற்பட்ட உறவை ஒப்பந்தம் எனலாம். மற்றவர்கள் மணம் என்று சொல்லாம். இதில் யாரும் யாரையும் ஏமாற்றவில்லை. ஒரு புரிதலின் பேரில் ஏற்பட்டது. இதை அவர்கள் மறைக்கவில்லை. மணியம்மையார் ஒரு மனையாளாகிப் பெரியாருக்குத் தொண்டு செய்யவில்லை. தோழர் இரவிக்குமார் சுட்டிக் காட்டுகிற அளவில் நிற்கவுமில்லை. அவர் பெரியாரின் தோளோடு தோள் இணைந்து சமூகப் பணியாற்றியவர். அவர் மறைவுக்குப் பிறகு திராவிடர் கழகத்தின் தலைவியாகிப் பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர்.

இந்த ஒப்பந்தத்தை ஏன் இவர்கள் செய்து கொள்ள வேண்டும் என்ற கேள்வி இன்னும் கேட்கப்படலாம். "திருமணம் கிரிமினல் குற்றமாக்கப்பட வேண்டும்" என்பது உரத்த சிந்தனைக்காக வைக்கப்பட்ட ஒரு கோட்பாடு. திருமணம் தேவையற்றது என்பதற்கான நியாயங்களைப் பெரியார் முன் வைத்தார். தமிழகத்தில் சிந்தனையாளர்களால் பெரிதளவும் இது விவாதிக்கப்படவில்லை எனினும், உலக அளவில் சிந்தனையாளர்களாலும் பெண்ணிய வாதிகளாலும், கூர்மையாக விவாதிக்கப்படுகிறது. சில நாடுகளில் 'மணம்' இல்லாமலேயே ஆண், பெண்கள் சேர்ந்து வாழ்கின்றனர். இந்திய, தமிழகச் சூழல்களில் இது இன்னும் நீண்டகாலமாகலாம். அது வரையிலும் திருமணம் தேவையற்றது என்பது கருதுகோளாக முன் வைக்கப்பட்டு விவாதிக்கப் படுவதை எப்படித் தவிர்க்கமுடியும்?

சில நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறோம் என்பதாலேயே அவற்றை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்பது பொருளில்லை. இந்திய அரசியல்சாசனம், இந்தியா என்கிற நாடு, சட்டமன்றம், நாடாளுமன்றம் இவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டவரில்லை பெரியார். அனால் இவற்றில் இருந்துக் கொண்டே இவற்றுக்கு எதிரான கருத்துக்களையும், போராட்டங்களையும் முன் வைத்தவர். இது நம் எல்லோருக்கும்மான நடை முறைச் சிக்கல்தாம். இருக்கிறோம், மீற முயல்கிறோம், மீறுகிறோம்.

அதிர்ச்சி மதிப்புக்காக மட்டுந்தான் பெரியார் திருமணம் குறித்த இந்தக் கருத்தை வெளியிட்டார் என்றும் தோழர் இரவிக்குமார் எழுதியுள்ளார். 'அதிர்ச்சி மதிப்பு' என்பதை ஒரு விவாதத்துக்காக ஒப்புக் கொள்வதாய் இருந்தாலும், வைதீகத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் ஒரு சமூக அமைப்பின் மாற்றம் கருதிச் சொல்லப்படும் எந்தவொரு கருத்தும் வைதீகவாதிகளுக்கு அதிர்ச்சி அளிப்ப தாகத்தான் இருக்கும்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களும் பிரடெரிக் ஏங்கல்ஸ் அவர்களும், தங்களது நுண்மாண் நுழைபுலத்தினால் கண்ட ஆய்வு முடிவுகள், இருக்கிற நிலைமையின் புரவலர்களுக்கு (Patrons of statusquo) அதிர்ச்சி அளிப்பதாகத்தான் இருந்தன. ஆய்ந்து கண்ட முடிவுகள் என்பதால் எதிரிகள் இக்கருத்தக்களை ஆரத்தழுவிடவில்லை.

தேவதாசிகள் என்போர் விபச்சாரிகள் என்பதும் பெரியாரது கருத்தாக இருந்துள்ளது என்கிறார். எந்தச் சூழலில் இத்தகைய கருத்துக்களைச் சொன்னார் என்பது நமக்குத் தெரியவில்லை. 'பெண் ஏன் அடிமையானால்?' என்ற நூலில் 'விபச்சாரம்' குறித்துப் பெரியார் கூறுவதைத் தோழர்கள் பார்க்க வேண்டும்.

"சாதாரணமாகவே இன்றைய கற்பு, விபச்சாரம் என்னும் வார்த்தைகள் சுதந்திரமும் சமத்துவமும் கொண்ட வாழ்க்கைக்குச் சிறிதும் தேவை யில்லாததேயாகும். ஜீவ சுபாவங்களக்கு இவ் விரண்டு வார்த்தைகளும் சிறிதும் பொருத்தமற்ற தேயாகும். வாழ்க்கை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு மாத்திரம் தேவையுடையதாக இருக்கலாம். ஆன போதிலும் கூட அவையும் இயற்கைக்கு முரணானது என்பதை யாரும் ஒப்புக்கொண்டு தானாக வேண்டும். அதற்கு ஆதாரம் என்ன வென்றால் மேலே சொல்லப்பட்டது போலவே அவ்விரண்டு வார்த்தையின் தத்துவங்களும் பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டு, ஆண்கள் மீது சுமத்தப்பட்டாலும் ஆண்கள் அதற்காக பயப்படவோ, அவமானப்படவோ, கட்டுப் பட்டிருக்கவோ அல்லாமல் அதைப் பற்றி லட்சியம் செய்யாமையுமே ஆகும்".

அடிக்கோடு என்னால் இடப்பட்டது இயற்கைக்கு முரணானது என்பதைப் பின்வருமாறு விளக்குகிறார்

"இயற்கையோடு இனைந்த வாழ்வு எது என்பதையும், எவ்வித நாட்டுப்பற்று, நடப்புப் பற்று, பிறப்புப் பற்று என்பெதெல்லாம் நடுநிலையிலிருந்து தன் அனுபவத்தையும், தன் மனத்தில் தோன்றும் உணர்ச்சியையும், ஆசைகளையும் ஒரு உதாரண மாகவும் வைத்துக் கொண்டு பரிசுத்தமான உண்மையைக் காணுவானேயானால் அப்போதும் கற்பு, விபசாரம் என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு என்பதும் மற்றவர்களை அடிமையாக்கவும் கட்டுப்படுத்தவும் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சி நிறைந்த தன்மை கொண்டது என்பதும் தானாகவே விளங்கிவிடும்."

(மேற்படி நூல் ஏ -53-55)

இப்போதைய திராவிடர் இயக்கச் செயல் பாடுகளில் பெண்கள் பற்றிய மதிப்பீடுகள் பெரும் பாலும் பாலுணர்வு சார்ந்த வக்கிரங்களாகவே வெளிப்படுவதற்கான மூல காரணம் பெரியாரிடம் இருக்கிறது என்கிறார் இரவிக்குமார்.

திராவிட இயக்கத்தவர் என்று சுட்டப் படுவோரின் பெரும்பாலான படைப்புகள், பெரியாரியக் கண்ணோட்டத்தை எந்த அளவுக்கு உள்வாங்கிக் கொண்டன என்ற கேள்வியைத் தோழர் இரவிக்குமார் போன்றோர் எதிர் கொள்ள வேண்டும். புராணங்களில் ஆபாசம் என்று கண்டவற்றைப் பெரியார் அம்பலப்படுத்தம் போது, அவற்றை அவரது ஆபாசங்கள் என்று முத்திரை குத்துவது பெரியாருக்கு நியாயம் செய்வது ஆகாது.

பெரியார் 'வழி வந்தவர்கள்' திரைப்படக் கலையின் மீது ஈடுபாடு கொண்டபோது அம் முயற்சிகளைப் பெரியார் ஆதரிக்கவில்லை என்பதோடு, திரைப்படங்களின் மீது தொடர்ந்து தாக்குதலையும் தொடுத்து வந்தார். அலங்காரப் பதுமைகளாகப் பெண் சித்தரிக்கப் படுவதையும், நடத்தப்படுவதையும் அவர் ஏற்றுக் கொண்ட தில்லை. பெண்கள் நகை மாட்டும் ஸ்டாண்ட் அல்ல என்று அவர் கூறியது மிக எளிமையாகச் சொன்ன ஆழமான பண்பாட்டு விமர்சனம்.

பெரியார் இயக்கத்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் சறுக்கல்களுக்குப் பெரியாரைக் காரணம் காட்டும்போது, அதற்கான சான்றுகளை அளிக்க வேண்டும். எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற போக்கில் சொல்லிச் செல்வது முறையாகாது. திராவிட இயக்கம் உட்படப் பெரும்பாலான இயக்கங்கள் சீரழிந்து போய்த்தான் நிற்கின்றன. இதற்கெல்லாம் யாரைக் காரணம் காட்டுவது? காலச்சுவடுவில் வெளிவரும் படைப்புகள் ஆபாசங் களாக இருக்கின்றன என்று வாசகர் கடிதங்கள் வருகின்றன. இன்று சங்கராச்சாரியாரின் மீது கொலைக் குற்றம் மட்டுமல்லாது பாலியல் வக்கிரம் சார்ந்த குற்றச் சாட்டுகளும் சுமத்தப் படுகின்றன. இவற்றுக்கெல்லாம் பெரியார்தான் காரணம் என்பார்களா?

ஒடுக்கப்பட்ட மக்களின் விழிப்புணர்வுக்கும், விடுதலைக்கும், இந்தியத்துணைக்கண்ட அளவில், வழிகாட்டக் கூடிய கோட்பாடுகள் அம்பேத் கரியமும் பெரியாரியமும். இவற்றின் குறைகளை அல்லது போதாமைகளைச் சுட்டி விமர்சிக்கலாம். ஆனால் அவதூறு பொழிவது ஆதிக்கச் சக்தி களுக்குத்தான் நலம் புரிவதாக அமையும். தோழர் இரவிக்குமாரின் கல்வியின் மீதும், சிந்தனை வெளிப்பாட்டின் மீதும், சமூகக் கட்டுப்பாட்டின் மீதும் எனக்கு மரியாதை உண்டு. நாம் ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசிக் கொள்வது நாம் நேசிக்கும் மக்களுக்கு நலம் சேர்க்காது.

**தொகுப்பு: மே.கா.கிட்டு**

நன்றி: 'இந்துத்துவச் சூழலில் பெரியாரின் தேவை' புதுமலர் பதிப்பகம், ஈரோடு


காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**

எரிதழல்

பெரியார் செல்வி

பிரபாகரன் அழகர்சாமி

கணியூர் தமிழ்ச்செல்வன்

அ.ப. சிவா

செல்லையா முத்துச்சாமி

மே.கா. கிட்டு

சேயூர் செந்தில்குமார்

**சட்ட ஆலோசனைக்குழு:**

வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்

வழக்கறிஞர் க.ஜெயராஜ்

வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி

வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரம் & விற்பனைத் தொடர்பு:**

சி. விஜயன் 94881 79109

ஜீவாநகர் குமார் 99944 77013

கடத்தூர் காந்தி 99428 76665

**ஆன்லைன் சந்தா - நன்கொடை:**

பெரியகுளம் குமரேசன் 99943 65133

**ஆண்டுக்கட்டணத் தொடர்பு:**

திருப்பூர் வேணி 77084 58086

**வடிவமைப்பு:**

முகிழ் மீடியா 97873 20044

**அச்சு:**

க்ரியேட்டிவ் க்ராஃபிக்ஸ், சென்னை

**உரிமை, வெளியீடு, ஆசிரியர்:**

சி.விஜயராகவன் 99762 56821

**பொறுப்பாசிரியர்:**

சி. இராவணன் 97868 89325



இராயல் சேலஞ்ச்

# மறைத்த துரோக வரலாறு




1971 ஆம் ஆண்டு நடந்த இந்திய - பாகிஸ்தான் போரை அடிப்படையாக வைத்து, 'காஸி' என்ற திரைப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் இந்தியா முழுவதும் வெளியாகியுள்ளது. 1971 போரின் விளைவாக, பாகிஸ்தானின் ஒரு பகுதியாகவும், கிழக்கு பாகிஸ்தான் என்றும் அழைக்கப்பட்ட, நாடு 'பங்களாதேஷ்' என்ற தனிநாடாக அறிவிக்கப் பட்டது.

1971 போரில் 'ஐ.என்.எஸ் விக்ராந்த்' என்ற இந்தியக் கடற்படையின் மிக முக்கியமான போர்க் கப்பலைத் தகர்க்கும் திட்டத்தில் பாகிஸ்தான் 'பி.என்.எஸ் காஸி' என்ற நீர்மூழ்கிக்கப்பலை அனுப்பியது. பாகிஸ்தானின் சதியை முறியடிக்க, இந்தியக்கடற்படை முதற்கட்டமாக, 'ஐ.என்.எஸ். விக்ராந்த்' என்ற அந்தக் கடற்படைக்கப்பலை அந்தமான் பகுதிக்குப் பாதுகாப்பாக அனுப்பி விட்டது. இரண்டாம் கட்டமாக, பி.என்.எஸ். காஸியை கடலுக்குள்ளேயே அழிக்க, இந்தியாவின் 'ஐ.என்.எஸ். ராஜ்புத்' ( எஸ் 21 ) என்ற நீர்மூழ்கிக் கப்பலை அனுப்புகிறது. 'ஐ.என்.எஸ்.ராஜ்புத்' நீர்மூழ்கிக்கப்பலில் உயிரைப் பணயம் வைத்துச் சென்ற இந்திய வீரர்கள், பாகிஸ்தானின் பி.என்.எஸ்.காஸியைத் தாக்கி,அழித்து அதில் இருந்த 91 பாகிஸ்தான் வீரர்களையும் கொன்று, இந்திய இராணுவத்துக்குப் பெருமை சேர்க்கின்றனர். இது தான் இந்தப்படத்தின் கதை.

1947 நாடு விடுதலை பெற்றதாக அறிவிக்கப் பட்ட காலத்திலிருந்தும், வெள்ளையர் ஆட்சி காலத்திலிருந்தும் இந்த நாட்டுக்கும் 'இந்தியா' என்று தான் பெயர். ஆனால் இந்தப் படத்தில் பல இடங்களில் 'இந்தியா' என்பதற்குப் பதிலாக 'இந்துஸ்தான்' என்ற சொல்லே பயன்படுத்தப் படுகிறது. இந்திய விடுதலைப் போராட்டங்களோடு ஒன்றிப்போகாத, இந்து மதவெறிக் கும்பலின் முழக்கமான, 'பாரத் மாதாக்கீஜே' இந்தப் படத்தில் விடுதலைப் போராட்டகால முழக்கம்போலக் காட்டப்படுகிறது.

ஆண்டாண்டு காலமாக, பாகிஸ்தான் தீவிரவாதிகளிடமிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றி யவர்கள் கேப்டன் விஜயகாந்தும், சரத்குமாரும், அர்ஜூனும் தான். அந்த வரலாறுகளை எல்லாம் சிரித்துக்கொண்டே கடந்து போய்விட்டோம். இந்தப் படம் சிரிக்கும்படி இல்லாமல், சிறப்பாகவே உள்ளது. எனவேதான் சில வரலாறுகளை இங்கே பேசவேண்டியுள்ளது. பங்களாதேஷ் மக்களின் விடுதலைக்காக நடந்ததாகக்கூறப்படும், 1971 போரைப் பற்றி அடிப்படையான சில செய்திகளைப் பார்ப்போம்.

1947 ல் நாடு விடுதலைபெற்ற காலத்தில், பஞ்சாப் மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வங்காளமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு வங்காளம் இந்தியாவுக்கும், கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுக்கும் பிரிக்கப்பட்டு 'கிழக்குப் பாகிஸ்தான்' என்று அழைக்கப்பட்டது. இரண்டு பகுதிகளிலும் ஒரே 'வங்காளிஇனம்' தான் வாழ்ந்தது. மதம் வேறு வேறாக இருந்தது. 1970 களில்

கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தங்களது வங்க மொழிக்குத் தேசியமொழி அந்தஸ்து வழங்கப் படாததைக் கண்டித்தும், வளர்ச்சித் திட்டங்கள் இல்லாததைக் கண்டித்தும் போராடத் தொடங்கினர்.

இந்திய அரசு இப்படித்தான் வரலாறு சொல்லியுள்ளது. மக்கள், பாகிஸ்தான் அரசுக்கு எதிராக 'முக்திபாகினி' என்ற பெயரில் கொரில்லாப் போரைத் தொடங்கினர். அதை அடக்குவதற்காக, பாகிஸ்தான் இராணுவம் ஆயிரக்கணக்கான தனது மக்களைக் கொன்றுகுவித்தது. இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைப் பாகிஸ்தான் கொன்று விட்டதாக இந்தியா கூறுகிறது. அப்பாவி மக்களைக் காப்பாற்றுவதாகக்கூறிக்கொண்டு இந்தியா அங்கு நுழைந்தது.போர் மூண்டது.

1971 போர் நடைபெற்ற காலத்தில், பாகிஸ் தானின் இராணுவத் தலைவராகவும், அதிபராகவும் முகம்மது யாஹ்யாகான் இருந்தார். இந்தியாவின் பிரதமராக இந்திராகாந்தி இருந்தார். இந்தப் போரில், இந்திரா காந்தியின் நோக்கம், திட்டம் எல்லாம் பங்களாதேஷ் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தருவது என்றுதான் கூறப்பட்டது. ஆனால் அது உண்மை அல்ல. அந்தப் போருக்குப்பின்னால், பேசப்படாத மூன்று முக்கியக் காரணங்கள் இருந்தன.

1. கிழக்கு பாகிஸ்தானில் அரசுக்கு எதிராக ஏற்பட்ட மக்கள் புரட்சியைப் பயன்படுத்தி, பாகிஸ் தானை முற்றிலும் ஒழிக்க வேண்டும். ஒட்டுமொத்த பாகிஸ்தானையும், பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள காஷ்மீர் பகுதியான 'ஆசாத் காஷ்மீரை' மீட்கவேண்டும். ஏனென்றால் இந்திராகாந்தி காஷ்மீரத்தைச் சேர்ந்த பண்டிட் பார்ப்பனர்.

இந்த நோக்கத்திற்கு அப்போது, ஆர்.எஸ்.எஸ் முழுக்க முழுக்க ஒத்துழைப்பைக் கொடுத்தது. போருக்கு முன்பாக, 1971 ஆம் ஆண்டு காஜியா பாத்தில் நடந்த ஜனசங்க தேசிய மாநாட்டில், தேசியச்செயற்குழு உறுப்பினர் பி.ஜி.தேஷ்பாண்டே, "இந்திராஜி... நாட்டை தைரியத்துடன் வழி நடத்துங்கள். நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். பங்களாதேஷ் விடுதலை பெற நீங்கள் உதவினால், எதிர்காலச் சந்ததிகள் உங்களை 'துர்கா'வாக நினைவில் கொள்ளும்" என்று குறிப்பிட்டார். அடல் பிகாரி வாஜ்பாயும் அப்போது இந்திராகாந்திக்கு ஆதரவாக இருந்தார். ஆர்.எஸ்.எஸ் ஸின் அப்போதைய அரசியல் அமைப்பு 'ஜனசங்கம்'.

2. இந்தியாவின் மேற்கு வங்காளம், அதை ஒட்டிய கிழக்கு பாகிஸ்தான் என்ற கிழக்கு வங்காளம் இரண்டு பகுதிகளிலும் பொதுவுடைமை நோக்கிலான புரட்சி ஆயுதப்புரட்சியாக வளர்ந்து கொண்டிருந்தது. இரு பகுதி மக்களும் ஒரே வங்காளிகளாக இணைந்து போராட்டங்களை முன்னெடுக்கும் சூழல் உருவாகிக்கொண்டிருந்தது. இந்த ஆயுதப்புரட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

3. இந்த இரு பகுதிகளிலும் சணல், தேயிலை உற்பத்தி மிக அதிகமாக இருந்தது. பல இலட்சம் கோடி மதிப்புள்ள இந்தத் தொழிலைத் தங்களது கட்டுக்குள் கொண்டுவரத் துடித்துக்கொண்டிருந்த பெருமுதலாளிகளுக்குத் துணைநிற்கவேண்டும். இந்த ஆயுதப் போராட்டங்களை ஒடுக்கினால்தான், இந்தியாவின் பனியாக்கள் இரண்டு பகுதிகளிலும் நிம்மதியாகச் சுரண்டலைத் தொடரமுடியும்.

மேற்கண்ட வெளியில் பேசப்படாத நோக்கங்கள் இருந்தன. இந்திராகாந்தி நினைத்த படியே, இரண்டு வங்காளத்திலும் நடந்த பொது வுடைமை நோக்கிய புரட்சிகள், புரட்சிகரத் தலைமைகள் ஏமாற்றப்பட்டன. வலதுசாரி அமைப்பான 'அவாமிலீக்' கட்சியின் தலைவர் முஜிபூர் ரஹ்மான் விடுதலைப் போராட்டத் தலைவராக அறிவிக்கப்பட்டார். மக்கள் தொடங்கிய முக்திபாகினிப் புரட்சி இந்தியத் தலைமையை அங்கீகரித்தது. புரட்சிகரப் போராட்டம் திசை திருப்பப்பட்டது. பாகிஸ்தான் அரசும், இராணுவமும் வெளியேற்றப்பட்டு, 'பங்களாதேஷ்' உருவானது. பாகிஸ்தானின் இஸ்லாமிய முல்தான்களிடமும், பதான்களிடமும் இருந்த வணிகம் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு, இந்திய பனியா, மார்வாடிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதற்குப் பொதுவுடைமை நாடுகளான இரஷ்யாவும், சீனாவுமே உடந்தையாக இருந்தன. ஆனால் மிக முக்கியமான நோக்கமான 'அகண்ட பாரதம்' உருவாகாமல் போனது. காஷ்மீர மீட்பு நடைபெறாமல் போனது. பாகிஸ்தான் மேல் பாசமாக இருந்த அமெரிக்க, இரஷ்ய, சீன அரசுகள் அதற்கு உடன்படவில்லை. அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன் இரஷ்யாவையும், சீனாவையும் தம்மோடு இணைத்துக் கொண்டு இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

பார்ப்பனர்கள் - இந்துமத அடிப்படை வாதிகள் - இந்தியதேசியப் பெருமுதலாளிகள் - முதலாளித்துவ நாடுகள், பொதுவுடைமை நாடுகள் அனைத்தும் இணைந்து வங்காளிகளின் உண்மையான புரட்சிகர தேசியஇனவிடுதலைப் போராட்டத்தை ஏமாற்றி, திசைதிருப்பி ஒடுக்கினர்.

இவற்றையெல்லாம், போர் நடந்த காலத்திலேயே பொதுவுடைமைக் குழுக்களில் ஒன்றான ட்ராட்ஸ்கியவாதிகள் ஆவணமாகப் பதிவு செய்துள்ளனர். இப்படிப் பல்வேறு துரோகங்களை மறைத்து, தேசபக்திப் போதையை நவீனத் தொழில்நுட்பத்துடன் வழங்கியுள்ளது காஸி திரைப்படம். அண்மையில் 45 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு தேசிய இனவிடுதலைப் போராட்டம் எப்படியெல்லாம் மாற்றிக் காட்டப்படுகிறது என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும்.


**சபேசன்** மெல்போர்ண்,அவுஸ்திரேலியா

# காதலர் தினம் சொல்லக் கூடிய சில தகவல்கள்




தமிழர் வாழ்வில் 'காதலர் தினம்'
என்ற ஒன்று தேவையா?
அல்லது தமிழர் வாழ்வில்
காதல் என்ற ஒன்று இல்லையா?
என்று விதவிதமாகக் கேட்போரையும்
சற்றுக் கவனிப்போம்.

*Valantine* என்ற பெயர் வந்ததற்குச் சுமாராக ஏழு கதைகள் உள்ளன. பின்னாளில் இந்த ஏழு கதைகள் அல்லது சம்பவங்கள் ஒரு கதையாக உள்வாங்கப்பட்டிருக்கலாம். புனித வலன்டைன் என்கின்ற கிறிஸ்தவ பாதிரியார் செய்து வந்த பிரசாரம் காரணமாக, மக்கள் இராணுவத்தில் சேரவேயில்லை என்றும், இதனால் கோபமுற்ற சக்கரவர்த்தி கிளோடியஸ் வலன்டைன் பாதிரியாரை சிறையில் அடைத்ததன் விளைவாக, சிறையில் வலன்டைன் பாதிரியார் இறந்தார் என்றும் அறியப்படுகின்றது. பாதிரியார் இறந்த விதம் குறித்தும் பல உப கதைகள் உண்டு. வலன்டைன் பாதிரியார் பல காதலர்களுக்கு துணை நின்று அவர்களுடைய காதலை நிறைவேற்றி வைத்த படியால், அவர் காதலர்களின் அன்புக்குரிய பாதிரியாராக அறியப்பட்டார். பின்னாளில் புனித வலன்டைன் தினம் காதல் தினமாக அறியப்பட்டது.



புலம் பெயர்ந்த தமிழர்கள் பலர் காதலர் தினத்தைப் பழித்தும், இகழ்ந்தும் பேசி வருவதோடு, அது வெள்ளைக்காரனின் பண்பாடு என்று ஒதுக்கித் தள்ளுவதையும் இன்று நாம் பார்க்கின்றோம். காதலர் தினம் உண்மையில் மேல்நாட்டுப் பண்பாடா? தமிழன் எப்போதும் பேசித்தான் திருமணம் செய்தானா? தமிழனுக்கும் காதலுக்கும் காத தூரமா? என்றெல்லாம் கேள்விகள் எம்மவர் மனதில் எழுந்து கொண்டுதான் உள்ளன.

உண்மையைச் சொல்லப் போனால், காதல் விடயத்தில், காதலர் தின விடயத்தில் மேல் நாட்டவனுக்கு தமிழன் அப்பனல்ல பாட்டனு மாவான்! அந்த அளவிற்குக் காதல் விடயத்தில் புகுந்து விளையாடியவன் தொல்தமிழன்! சங்ககால இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் ஏன் தொல்காப்பியத்திலும் காதலும் காதல் மணமும் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்தக் காதலர் தினத்தை ஒரு சாட்டாக வைத்து எம் பழம் தமிழர் மரபை நாமும் திரும்பிப் பார்ப்போம்!

தொல்காப்பியத்தில் வருகின்ற கற்பு என்கின்ற இடங்களை ஆராய்ந்தால் அது இல்லறம் என்கின்ற பொருளையே குறிக்கின்றது என ஆய்வாளர்கள் கூறுவார்கள். பத்துவிதமான திருமணங்கள் சங்க காலத்தில் நடந்ததாக நாம் அறியக்கூடியதாக உள்ளது.

1. களவுமணம்
2. தொன்றியல் மரபின் மன்றல்
3. பரிசல் கொடுத்து மணத்தல்
4. சேவை மணம்
5. திணைக் கலப்பு மணம்
6. ஏறு தழுவி மணமுடித்தல்
7. மடலேறி மணமுடித்தல்
8. போர் நிகழ்த்தி மணமுடித்தல்
9. துணல்கையாடி மணத்தல்
10. பலதார மணம்



இதில் களவு மணம் குறித்துச் சற்றுக் கவனிப்போம்.

களவியல் குறித்த பொருள் விளக்கச் சிந்தனை ஒரு நீண்ட பரிணாம வளர்ச்சியின் ஊடாகவே நிகழ்ந்துள்ளது. தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் தொடங்கிச் சோழர் கால உரையாசிரியர் வரை இந்த சிந்தனைப் போக்கின் பரிணாமத்தை அறிந்து கொள்ள முடியும்.

தொல்காப்பியர் தமது நூற்பா ஆக்கத்தினை இரண்டு வழிகளில் மேற்கொண்டுள்ளார். முதலாவது-முன்னோர் கருத்தை ஏற்று மொழிவது. இரண்டாவது தாமே படைத்து மொழிவது. களவியலைப் பொறுத்தவரையில் அதன் பொருள் விளக்கத்தை தொல்காப்பியர் தானே படைத்து மொழிந்துள்ளார். ஆகவே தொல்காப்பியர் காலத்து முந்திய களவியல் பற்றிய பொருள் விளதக்கத்தை இப்போது அறிய இயலாமல் உள்ளது.

களவுக் காதல் வாழ்வை பல துறைகளாக அமைத்துச் சுவைபட சங்கப் புலவர்கள் பாடியுள்ளார்கள். காமம் நுகர்வதற்குரிய குமர்ப் பருவமடைந்த எங்கோ பிறந்த தலைவனும் தலைவியும், எதிர்பாராத விதத்தில் ஓரிடத்தில் எதிர்ப்பட்டு, ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கொண்டு காதல் கொள்வதனை, இயற்கைப் புணர்ச்சி என்று அக இலக்கணம் கூறுகின்றது. இவ்வாறு சந்தித்து மனமொன்றிய காதலர்கள், மீண்டும் சந்திக்க வேட்கை கொண்டு, முன்பு சந்தித்த இடத்தில், சந்தித்து மகிழ்ச்சி கொள்வது இடந்தலைப்பாடு என்று அழைக்கப்பட்டது. அந்தக் களவுக்கூடல் தலைவனின் தோழனின் உதவியால் நடைபெறும் என்றால் அது ‘பாங்கற் கூட்டம்’ என்றும், தலைவியின் தோழி வாயிலாக நிகழுமென்றால் அது ‘பாங்கியற் கூட்டம்’ என்றும் வழங்கப்பட்டது.

வேட்கை மிகுதியால், களவுக் காதலர்கள் இரவிலும் பகலிலும் தோழியின் துணையால் சந்தித்து, அளாவுதல் உண்டு. இவ்வாறு பகலில் நடைபெறும் காதலர் கூடல் பகற்குறி என்றும், இரவில் நடைபெறும் களவுக் கூடல் இரவுக்குறி என்றும் வழங்கப்பட்டது.

இங்கே ஒரு விடயத்தை நேயர்கள் கவனிக்க வேண்டும். சங்கக் காலத்துக் களவுக் காதல், கற்பு வாழ்விற்கு ஒரு வாயிலாக அமைந்தது. கற்பு என்பதற்கு, இல்லறம் என்ற பொருளையே தொல்காப்பியர் சொல்வது இங்கு கவனிக்கத்தக்கது. ஆகவே அக் களவுக்காதல் புனிதமானது. சங்கக் காலச் சமுதாயம் களவுக் காதலை மதித்தது. போற்றியது. கற்பு வாழ்வுக்கு அதாவது இல்லற வாழ்விற்கு வழி வகுத்துக் கொடுத்தது. சங்கக் காலக் களவுக் காதலின் நெறியைக் குறித்து

‘களவொழுக்கம் தூயது, களவுக் காதலர் மனமாசற்றவர், மணந்து கொள்ளும் உள்ளத்தவர், களவுக்காதல் வெளிப்பட்ட பின்னரும் வாழ்பவர்’

என்று டாக்டர்- வ.சு.ப. மாணிக்கம் அவர்கள் கூறியதை இங்கே நினைவு கூருகின்றோம்.

களவுக் காதலர் மணம் புரிந்து, இல்லறம் என்னும் நல்லறம் இனிது நடத்தலைப் பற்றிக் கூறுவது கற்பொழுக்கம் ஆகும். அகத்தினைக் கூறும் தூய்மையான அறங்களுள் தலையானது, களவு வழிப்பட்ட கற்பு வாழ்க்கையாகும்.

‘காதல் என்பது இன்பத்துள் பேரின்பம், உணர்ச்சியுள் பேருணர்ச்சி, ஆற்றலுள் பேராற்றல், அடிப்படையுள் பேரடிப்படை எல்லோருக்கும் உரியது. நட்பினுள் இருபாலாரையும் இணைப்பது என்பதைச் சங்கத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள்’ என்று ஆய்வாளர் டாக்டர் -வ சு ப மாணிக்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தமிழன் காதலில் திளைத்த பின்பே இல்லறத்தை நாடியவன் என்பதற்கு, காமத்துப்பால் எழுதிய திருவள்ளுவரும் சாட்சிக்கு நிற்கின்றார். அறத்துப்பாலையும், பொருட்பாலையும் விட, காமத்துப்பாலில் நளினமும் இனிமையும் கூட

இருப்பதை நேயர்கள் அறிவீர்கள். நறுக்குத் தெறித்தாற்போல் காதலைப் பற்றியும், காமத்தைப் பற்றியும் வள்ளுவர் கூறினாலும், அதிலிருக்கும் பொருளோ எல்லை கடந்ததாக உள்ளது.

யான் நோக்குங்காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும் - குறள் 1094

என்ற குறளில், தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்கெதிர் நோக்குகின்றார்கள். தலைவியோ தனக்கே உரிய நாணத்தின் காரணமாக, நிலத்தை நோக்கினாள். தலைவன் பாராதவிடத்து, தலைவி அவனை நோக்கி மெல்லப் புன்முறுவல் செய்தாள். தலைவனுக்குத் தனது உள்ள-விருப்பை, தனது மலரும் முகத்தினால் வெளிப்படுத்தினாள். தலைவனும் தலைவியிடம் தோன்றிய புகுமுகம் புரிதல் மெய்ப்பாட்டால் , அவள் தன்னை மனப் பூர்வமாக விரும்புகின்றாள் என்பதனை அறிந்து கொண்டான் என்று, பார்வையினூடே காதலை படர விடுகின்றார் வள்ளுவர்.

பண்டைத் தமிழனின் காதல் வாழ்க்கை முறை, பின்னர் ஆரியர் ஆக்கிரமிப்பின் பின்னர், மறையத் தொடங்கியது. பெண்ணடிமை மிக்க சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் தமிழன் வாழ்வைச் சீரழிக்க ஆரம்பித்தன.

வள்ளுவர் சுட்டிக்காட்டுகின்ற இன்னுமொரு தலைவியோ, வேறு விதப் பார்வையினால் தன் காதலை வெளிப்படுத்துகின்றாள். தலைவனை நேரடியாக நோக்காது, வேறொரு பொருளை நோக்குவதுபோல், முகம் காட்டிக்கொண்டு, ஒரு விழிப் பார்வையால், தலைவனை நோக்கித் தன்னுள்ளே மகிழ்ந்தாள் என்பதனை,

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒரு கண்
சிறக்கணித்தாள் போல நகும். -குறள் 1095

என்ற குறள் மூலம் வள்ளுவர் அழகாகச் சொல்லிக் காதல் இன்பத்தை வெளிக்கொண்டு வருகிறார்.

பண்டைத் தமிழனின் காதல் வாழ்க்கை முறை, பின்னர் ஆரியர் ஆக்கிரமிப்பின் பின்னர், மறையத் தொடங்கியது. பெண்ணடிமை மிக்க சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் தமிழன் வாழ்வைச் சீரழிக்க ஆரம்பித்தன. பண்டைத் தமிழர் காலத்தில், காதல் எவ்வளவு வலுவாக இருந்தது என்பதற்கு ஒரு காரணத்தை எமது நேயர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். தமிழர்களுக்கு எதிராக எழுதப் பட்ட இராமாயணத்தை, தெள்ளு தமிழில் தேனூறும் சொல்பரப்பி, கம்ப நாடான் மொழி பெயர்த்தான். வால்மீகி இராமாயணத்தில் இல்லாத ஒரு காட்சியை, கம்பன் தனது கம்பராமாயணத்தில் காட்டுகின்றான்.

வில்லை முறித்துச் சீதையை மணப்பதற்காக ராமன் வருகின்றான். வில்லை முறிக்கின்றான். சீதையை மணக்கின்றான். இது வால்மீகி ராமாயணம். கம்பனின் இராமாயணத்திலோ, வில்லை முறிக்க வரும் இராமனை, மேல் மாடத்திலிருந்து சீதை பார்க்கின்றாள். இராமனும் அவளை நோக்குகின்றாள். இருவரது கண்களும் ஒருவரை ஒருவர், முதல் தடவையாக பார்க்கின்றன. காதல் வசப்படுகின்றன. உள்ளக் குறிப்புரைகளைக் கண்களால் பேசிக் கொள்கின்றன. ஒருவரது உள்ளத்தை, ஒருவர் உள்ளம் ஈர்க்கின்றது. இராமன் உள்ளத்தில் சீதையும், சீதை உள்ளத்தில் இராமனும் குடிபுகுந்தனர். தமிழர் காதல் பண்பாட்டின் அடிப்படையான புதுமுகம் புரிதல் மெய்ப்பாடு இங்கே கம்பனால் காட்டப்படுகின்றது. அதனைக் கம்பன் இவ்வாறு எழுதுகின்றார்.

"எண்ணரும் நலத்தினாள் இளையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாமல் உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

"பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்"

- (கம்பராமாயணம் - பாலகாண்டம் செய்யுள் 590 , 592)

தமிழன் காதலிக்காமல் திருமணம் செய்வதில்லை. எனவே கம்பர் இராமயணத்தைத் தமிழாக்கி, தமிழருக்குள் கொண்டு வரும்போது, இப்படி இடையில் ஒரு காதல் காட்சியைப் புகுத்தி, இராமன் சீதைத் திருமணத்தை, ஒரு காதல் வீரத் திருமணமாகக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் அன்று அவருக்கு இருந்தது. இது தமிழரின் காதல் வாழ்விற்கு ஓர் எடுத்துக் காட்டல்லவா?

இன்று நாம் புலம் பெயர்ந்துள்ள வெளி நாடுகளில், காதல் அடையாளமாகக் கொடுக்கப் படும் மலர்கள், எம் தமிழர் வாழ்விலும் பெரும் பங்கு வகித்தன என்பதும் ஒரு வரலாற்று உண்மை! தமிழ்நாட்டில் மலர்கள் மங்கையர் கூந்தலிலும், மனங்களிலும், இல்லங்களிலும் இன்றும்கூட முக்கிய இடத்தை வகித்து வருகின்றன.

அன்புக்குரிய நேயர்களே! தமிழனின் கடல்போன்ற காதல் வாழ்வைச் சொல்வதற்காக, முக்குளித்து ஒரு துளியை மட்டும் இன்று சொல்ல முனைந்தோம். இந்தக் கட்டுரைக்குச் சங்கக் காலப் பாடல்கள், தொல்காப்பியம், திருக்குறள், கம்ப ராமாயணம் போன்றவற்றோடு;, சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள், தொல்தமிழர் சமயம், குறுந்தொகை காட்டும் காதல் வாழ்க்கை போன்ற நூல்களும் உதவின. இது உங்கள் காதல் தீயை இன்னும் கொழுந்து விட்டெரியச் செய்யும் என்று நம்புகின்றோம்.

பொழப்பத்தவன்

# ‘தை எழுச்சி’க்காரர்கள் எங்கே? அய்யம்பட்டி அழைக்கிறது

ஆர்.எஸ்.எஸ் மற்றும் பல இந்து மதவெறிக் கும்பல்களால் போலியாக உருவாக்கப்பட்ட ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் தமிழ்நாட்டில் அனைத்து இயக்கங்களும், கட்சிகளும் பங்கேற்றன. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை ‘அரசியல்படுத்தப் போகிறோம்’ என்றும், இது ‘தைஎழுச்சி’, ‘தமிழ்வசந்தம்’ என்றெல்லாம் அடைமொழிகளைக் கூறி ஜோதியில் அய்க்கியமானார்கள் பல புரட்சியாளர்கள்.

அதாவது, போதையில் இருக்கும் ஒருவனை மாற்ற வேண்டுமானால், தானும் ஒரு ‘ஆஃப்’ ப அடிச்சிட்டு, டாஸ்மாக்ல ஒக்காந்துதான் மாத்து வாங்க போல... அதவிடக் கொடுமையான ஸ்டேட்மெண்ட் ஒன்னக் குடுத்தாங்க... “போராட்டத்தின் போது பெண்களிடம் மாணவர்கள் கண்ணியமாக நடந்து கொண்டார்கள்”.....இதவிட தமிழ்நாட்டு மாணவர்களையும், இளைஞர்களையும், வழக்கமாக மக்கள் பிரச்சனைகளுக்காகப் போராடிவரும் பல்வேறு இயக்கத் தோழர்களையும் கொச்சைப் படுத்தும் வாக்கியம் எதுவுமே இருக்காது.

இதுவரை அனைத்து இயக்கங்களும் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும், ஆண் தோழர்கள், பெண் தோழர்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ளவில்லையா? இந்த வார்த்தையைச் சொல்லிய இயக்கங்களின் தோழர்கள் பெண்களிடம் கண்ணியமாக நடந்துக்கொள்ள வில்லையா? கல்லூரி, கேண்டீன், பீச், பார்க், தியேட்டர், மால்ஸ் என பல பொதுஇடங்களில் ஆண்-பெண் பேதமின்றிப் பழகிவரும் மாணவர்களும், இளைஞர்களும் இதுவரை பெண்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ளவில்லையா? அந்தப் போராட்ட நாளில்தான் திடீரென கண்ணியம் கரைபுரண்டு ஓடியாதா? சரி அதெல்லாம் போகட்டும்...

இப்படியெல்லாம் சொல்லி மாணவர்களை அரசியல்படுத்தப் போகிறோம் என்று போனவர்கள், மெரினாவில் கடைசிநாளில் மாணவர்களும், இளைஞர்களும் அடித்து விரட்டப் பட்டபோது, யாரையுமே காணோமே? அம்பேத்கர் பாலம், ரூதர்புரம் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப் பட்டபோதும், குடிசைகள் கொளுத்தப் பட்ட போதும் ஒருவரையும் காணோமே? எல்லாம் முடிந்த பிறகுதான், கரைக்டா “எஸ்...பாஸ்” என்று ஆஜரானார்கள்.

இன்னும் சில போராளிகளோ, “தலித்துகளிடமிருந்து அப்படி கோரிக்கை வரவில்லை. வந்தால் அதை ஆதரிப்போம். ஆனால் இப்போது நடப்பது ஜல்லிக்கட்டைத் தாண்டிய புரட்சி” என்று பேசி வந்தார்கள். அதாவது தலித் மக்கள் ஜல்லிக்கட்டில் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. அதிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று இவர்களிடம் கோரிக்கை வைக்க வேண்டுமாம். அதன்பிறகுதான் இந்தப் போராளிகள் வந்து காப்பாற்றுவார்களாம். மேலும் பலர், “ஜல்லிக்கட்டில் ஜாதி இருப்பது உண்மைதான். ஆனால் அது நமது பாரம்பரியம், தமிழர் அடையாளம். அதை ஜனநாயகப் படுத்த வேண்டுமே ஒழிய முற்றிலும் அழிந்து போக வேண்டும் எனக்கூற முடியாது” எனக் கூறினர்.

மேற்கண்ட அனைத்துப் போராளிகளுக்கும், புரட்சியாளர்களுக்கும், தினமும் தலமாட்டுல ஏ.கே 47 ஐ வச்சுக்கிட்டே தூங்கிறவங்களுக்கும், 24 மணி நேரமும் எதிரிகளின் ரத்தத்தோட கைநனைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் ஒரு நல்ல சான்ஸ் வந்திருக்கு... தேனி மாவட்டம் போடிக்குப் பக்கத்தில் உள்ள அய்யம்பட்டியில் சக்கிலியர் சமுதாய மக்களை இதுவரை ஜல்லிக்கட்டில் பங்கேற்க விட்டதில்லை. இந்தத் தைஎழுச்சிக்குப் பிறகாவது, தமிழ் வசந்தத்திற்குப் பிறகாவது எங்களுக்கு அப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்றும், நாங்களும் தமிழரின் பாரம்பரியத்தைக் காப்பாற்ற வருகிறோம், எங்களையும் அனுமதிக்க வேண்டும் என்றும் அப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து ஒரு குரல் எழும்பியுள்ளது.

ஆண்டாண்டு காலமாக, அய்யம்பட்டி ஜல்லிக்கட்டில் சக்கிலியர்கள் புறக்கணிக்கப் படுவதை எதிர்த்து, ‘தமிழ்ப்புலிகள் கட்சி’யின் தேனி மாவட்டச் செயலாளர் தோழர் வைரமுத்து அவர்கள், மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அதற்குத் தேனி மாவட்ட நிர்வாகம், அங்குள்ள பிற்படுத்தப்பட்ட ஜாதியினருடன் சேர்ந்து ஒரு அமைதிக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதில் அருந்ததியர்கள் பங்கேற்பை மறுக்கும் நோக்கத்தோடு “உள்ளூர்க்காரர்கள் யாரும் பங்கேற்கக் கூடாது” என கூட்டத்தில் முடிவு செய்துள்ளதாக நீதிமன்றத்தில் பதில் மனுவைத் தாக்கல் செய்துள்ளது. அதை நீதிமன்றமும் ஏற்று கொண்டுள்ளது. ‘அரசியல்படுத்துபவர்கள்’, ‘தை எழுச்சிக்காரர்கள்’, ‘தமிழ்வசந்தக் கம்பெனிகள்’ ‘ஜனநாயகக்காரர்கள்’ அனைவரையும் அய்யம்பட்டி அழைக்கிறது. தமிழ்ப்புலிகள் கட்சியின் நிறுவனர் தோழர் நாகை திருவள்ளுவன் அவர்களையும் அழைக்கிறது.

ஆதாரம்: இண்டியன் எக்ஸ்பிரஸ் 16.02.2017

பல்லடம் தீபா,
நாராயணமூர்த்தி,
திருப்பூர் வேணி

# இந்துமதப் பண்பாட்டுக்கு எதிராக, வாஸ்து பார்க்காமல் வீடு கட்டி வென்றவர்கள்

## உடுமலை சுடரொளி-மலரினியன் நேர்காணல்

தோழர் சுடரொளி. உடுமலைப் பேட்டைக்கு அருகில் கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்தவர். தோழர் மலரினியன் அவரது துணைவர். அவர் உடுமலைப் பேட்டையைச் சேர்ந்தவர். உடுமலையில் 20 ஆண்டுகளாகப் பத்திர எழுத்தாளராக இருக்கிறார். மலரினியன் +2 படிக்கும்போதே அவருடைய நண்பருடைய அப்பா அறவாளி அய்யா அவர்களுடைய தொடர்பு கிடைத்தது. அப்போது அவர்களுடைய வீட்டுக்குப் போகும்போது பெரியாரியல் சம்பந்தமான புத்தகங்களை நிறைய படித்து பெரியாரியலை அறிந்தார். 2007 -ல் இருந்து 10ஆண்டுகளாக பெரியாரியல் கொள்கையில் தீவிரமாக இருந்து கொண்டு இருக்கிறார்.சுடரொளி-மலரினியன் இணையர் விரிவாகப் பேசத் தொடங்கினர்.

**பெரியாரியல் அமைப்புக்கு முன்பு ஏதாவது அமைப்புகளில் இருந்தீர்களா?**

நான் தமிழ் அமைப்புகளில் இருந்தேன். ஆனால், தமிழ் அமைப்புகளுக்கும், பெரியாரியல் அமைப்புகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கிறது. தமிழர் அமைப்புகள் அடையாளப்படுத்து வதற்காக ஒரு மண்டபத்தில் கூடுவார்கள். கவிதைப் போட்டிகளை நடத்துவார்கள். ஏதாவது அறிஞர்களோட பிறந்த நாள் விழா கொண்டாடுவதற்காக 10, 20 பேர் கூடுவார்கள். அங்கேயே ஒருத்தரை ஒருத்தர் பாராட்டிக் கொள்வார்கள். அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ள கவிதைப் போட்டிகளை நடத்துவார்கள். இதில் சமூகத்திற்கு எந்த ஒரு பயன்பாடும் இல்லை. இயக்கங்களில் பெண்விடுதலை, சாதி ஒழிப்பு இவற்றையெல்லாம் பேசுகிறார்கள். ஆனால் நடைமுறைப்படுத்துவது கிடையாது. பெண்விடுதலைன்னு சொல்கிறார்கள். ஆனால், அவர்களுடைய வீடுகளில் பெண்களை அடிமைப்படுத்தித்தான் வைத்து உள்ளார்கள். தங்களுடைய மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் செய்யும்போது, ஒரே சாதியில்தான் பெண் தேடுகிறார்கள். ஒரு அரங்கில் 50 பேர் கூடினால் அவர்களுக்குள்ளேயே மாற்றி, மாற்றி சால்வையைப் போத்திக் கொண்டு பாராட்டு கிறார்கள். அதுதான் ஒரு நிகழ்ச்சி. இதில் சமூகத்திற்கு எந்த ஒரு பயன்பாடும் இல்லை. அங்கு நடக்கும் நிகழ்ச்சி அந்த அரங்கத் தோடே முடிந்து விடுகிறது. இதனால் நான் தமிழ் அமைப்பு களில் இருந்து வெளியே வந்தேன்.



பெரியாரியல் தொடர்பாக பல்லடம் விஜயனின் தொடர்பு ஏற்பட்டது. அதன் மூலமாக நிறைய விவாதம் செய்து, அவர் நிறைய விளக்கம் கொடுத்ததற்குப் பிறகு பெரியாரியல் அமைப்புகளில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். என்னுடைய குடும்பத்தாரும் என்னுடன் இணைந்து முழுமையாக பெரியாரியல் அமைப்புகளில் செயல்படுகிறார்கள்.

**நீங்கள் பெரியாரியல் அமைப்புக்கு வந்த பிறகு வீடு கட்டினீர்களா? உங்களுடைய வீடு எந்த மாதிரி கட்டப்பட்டது?**

பெரியாரியல் அமைப்புக்கு வந்த பிறகுதான் வீடு கட்டினோம். எங்க ளுடைய வீடு வாஸ்து பார்க்காமல் எங்களுடைய இட வசதியைப் பொறுத்து கட்டியுள்ளோம்.

**வீடு கட்டுவதற்கு யாரிடமாவது ஆலோசனை கேட்டீர்களா?**

ஆமாம். நண்பர்களிடமும், உறவினர்களிடமும் ஆலோசனை செய்தோம். ஆனால், ஒவ்வொருத் தரும் ஒவ்வொரு மாதிரி சொன்னார்கள். அடி அளவில் பார்த்து சரியாகக் கட்டணும். நல்ல ஒரு ஜோதிட ரிடம் போய்ப் பார்த்து உங்க ளுடைய ஜாதகத்தைக் கொடுத்து விட்டீர்களானால் உங்களுக்கு எந்தத் திசையில் பார்த்து வீடு கட்டணும் என்று சொல்வார்கள். நீங்கள் அதன்படி கட்டுங்கள். என்பதுதான் பெரும்பாலான ஆலோசனைகளாக இருந்தது. நான் வீடு கட்டுவதற்கு சிக்கனமும், வீடு வலிமையாக இருக்கவும் மட்டுமே ஆலோசனைகளை எதிர்பார்த்தேன். ஆனால், அப்படி எந்த ஒரு ஆலோசனையும் இல்லை. முற்றிலும் மூடநம்பிக்கை நிறைந்த தாக இருந்தது. எனவே, எந்த ஒரு ஆலோசனையையும் நான் ஏற்க வில்லை. என்னுடைய இடவசதி யைப் பார்த்து வீட்டு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டேன்.

**உங்களுடைய இருவரது பெற்றோரும் நீங்கள் வாஸ்து பார்க்காமல் வீடு கட்டுவதை எப்படி எடுத்துக்கொண்டார்கள்?**

எங்களுடைய வீட்டுலையும், மாமியார் வீட்டுலையும் எங்களு - டைய விருப்பத்திற்கு மாறாக அவர்கள் எதுவும் சொல்வதும் இல்லை. செய்வதும் இல்லை உங்களுக்கு எது விருப்பமோ, அதன்படி செய்யுங்கள் என்றுதான் சொன்னார்கள். அதனால் எங்களுக்கு எந்தப் பிரச்சைனையும் இல்லை.

**வாஸ்துக்கு மாறாக வீடு கட்டும்போது எஞ்ஜினியரிடம் ஆலோசனை செய்தீர்களா?**

நம்மளுடைய தோழர் அ.ப.சிவா கட்டிடப் பொறியாளர் என்பதால், நான் அவரிடம் ஆலோசனை செய்தேன். அவரும் சிறப்பாகச் செய்து முடித்து விடலாம் என்று சொன்னார். ஆனால் நான் வேறு ஒரு பொறியாளரை வைத்து வீடு கட்டியிருந்தால் அவருக்கும் நமக்கும் ஒரு முரண்பாடாகவே இருந்து இருக்கும். என்னங்க இப்படிச் சொல்கிறீர்கள். அங்க அது வேண்டாங்கிறீங்க, இங்க இது வேண்டான்னு சொல்றீங்க என்று சொல்வார்கள். பொதுவாகவே எல்லோருக்கும் வீடு கட்டியிருக்கிற மாதிரி வாஸ்து சாஸ்திரத்தைப் பயன்படுத்தி இருப்பார். இப்போ 100 வீடுகள் கட்டியிருந்தால் 99 வீடு வாஸ்து முறைப்படிதான் இருக்கும். நாம் ஒருவர் மாத்திக் கட்டும்போது அவருக்கும் சிரமமாக இருக்கும். ஆனால் நம்மளுடையஉணர்வாளர் அ.ப.சிவா எஞ்ஜினியர் என்பதினால் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

**உங்களுடைய வீடு கட்டிய அமைப்பைப் பற்றிச் சொல்லுங்கள்?**

தெற்குப் பார்த்து வாசல் இருந்தால் நல்ல காற்றோட்டமாக இருக்கும் என்று பொறியாளர் சொன்னார். நான் கூட அவரிடம் தெற்குப் பார்த்து இருந்தால் அதிகமான காற்று காரணமாக மண், தூசி படிந்துவிடும். கிழக்குப் பார்த்து வாசல் இருந்தால்தான் சூரியஒளி வீட்டுக்குள் படும். அப்பத்தான் குடும்பத்திற்கு நல்லது என்று சொல்கிறார்கள் என்றேன். அதற்குப் பொறியாளர் அப்படி எல்லாம் எதுவும் இல்லை. நீங்கள் தெற்குப் பார்த்து கட்டினால் நன்றாக இருக்கும். நீங்கள் கட்டியிருப்பதைப் பார்த்து நிறைய பேருக்கு இந்த மாதிரி வீடு கட்ட வேண்டும் என்று தோன்றும் என்று சொன்னார். ஆனால், இப் பொழுதுதான் எனக்கு வசதியாக இருக்கிறது. கிழக்குப் பார்த்து கட்டியிருந்தால் ஒரு செண்ட் இடத்தை நடைபாதைக்காகவே விட வேண்டியிருந்திருக்கும். ஆனால், நாங்கள் தெற்குப் பார்த்து கட்டியதால் வீட்டுக்கு வெளியே வந்தால் உடனே, நல்ல அகலமான சாலை உள்ளது. கிழக்குப் பார்த்து கட்டியிருந்தால் இடம் வீணாகி யிருக்கும். இப்போது எங்களுக்கு இடமும் வீணாகவில்லை. ரொம்ப - வும் வசதியாகவும் இருக்கிறது.

**வாஸ்து என்பதும் மூடநம்பிக்கையா? அறிவியல் அணுகுமுறை அதில் இல்லையா?**

இது முழுக்க முழுக்க மூடநம்பிக்கைதான். வாஸ்துவில் கழிப்பறையையோ,நூலகத்தைப் பற்றியோ கூறிப்பிடவேயில்லை. 100 சதம் வாஸ்து பார்த்துக் கட்டப் படும் வீடு என்றால், அதில் நூலகமோ, கழிப்பறையோ இல்லாமல்தான் கட்டணும். இல்லாத ஒன்று எப்படி வாஸ்து- வில் வந்தது. நீங்கள் 100 வாஸ்து நிபுணர்களைப் பார்த்தால் ஒவ் - வொருத்தரும் ஒவ்வொரு வித - மாகத்தான் சொல்வார்கள். எப்படி ஜோதிடமும், ஜாதகமும் நாம் எத்தனை பேரிடம் பார்த்தாலும் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரிதான் சொல்வார்களோ அப்படித்தான் வாஸ்துவும். ஆனால், அறிவியல்படி ஒரு நபருக்கு ஒரு வியாதி இருந்தால் நாம் எத்தனை மருத்துவரிடம் போனாலும் அவர்களின் அத்தனை பேரின் பதிலும் ஒரே மாதிரிதான் இருக்கும். ஆனால், நாம் வாஸ்து நிபுணரிடம் போனால் ஒருத்தர் ஜலமூலையில் சமையலறை இருக்க

வேண்டும் என்பார். இன்னொருத்தர் உங்க ஜாதகப்படி இங்கதான் இருக்கவேண்டும் என்பார். இப்படி மாற்றி, மாற்றிச் சொல்லிக் குழப்பிவிடுவார்கள். இது நிச்சயமாக அறிவியலுக்குப் புறம்பான ஒரு மூடநம்பிக்கைதான். வாஸ்து பார்த்து வீடு கட்டியிருந் - தால் கழிப்பிடம் இருக்கக்கூடாது வெளியில்தான் போயிட்டுவர வேண்டும். அப்படியிருக்கும்போது எல்லா வீடுகளிலும் கழிப்பிடம் இருக்கிறது. இப்படிப் பார்க்கும் போது அறிவியல்தான் வெற்றியடைந்திருக்கிறது.

**வாஸ்துவில் எட்டு திசைகளின் சிறப்பம்சங்கள் பற்றி உங்களின் கருத்து என்ன?**

இப்போது என்னோட வீட்டுக்கு வடகிழக்கு மூலைன்னா அது ஜலமூலை. அதே மூலை பக்கத்து வீட்டுக்கு வடமேற்கு மூலை. அது அவுங்களுக்கு வாயுமூலை. எனக்கு குபேரமூலை. ஜலமூலையில்தான் போர் போடணும் அப்படீன்னு சொல்கிறோம். ஆனால் பக்கத்து வீட்டுக்காரர் வந்து அங்கே கழிப்பறை போவார்கள். காம்ப் பவுண்ட்டிற்கு இந்த பக்கம் எனக்கு ஜலமூலை எனக்கு தண்ணீர் இருக்கும். காம்ப்பவுண்டிற்கு அந்தப் பக்கம் அவுங்க கழிவுநீர் இருக்கும். கழிவுநீர் அங்கே வருவதனால்தான் அங்கே ஜலமூலை என்று அந்தக் காலத்தில் கிணத்தோடு தண்ணீர் வரும். அதாவது கழிப்பறையில் இருக்கிற தண்ணீர் எஞ்ஜி இதில்தான் வரும். அது மக்களுக்கு புரியாமல் அங்கேதான் தண்ணீர் வருது இதுதான் ஈசான் இருக்கிற இடம் என்றும் சொல் கிறார்கள். சமயலறையை அக்னி என்றும் ஒருசிலர் அக்னிமூலை அதாவது தென்கிழக்கு மூலையிலும் சமயலறையை வைப்பார் கள். ஒருசிலர் அக்னிமூலை தென் கிழக்கு மூலையிலும் கழிப்பறையைக் கட்டுவார்கள். ஒரு வீட்டுக்கு தென்மேற்கு மூலை கன்னிமூலை என்றும் சொல்வார்கள். அங்கே பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். தென்மேற்கு மூலையை பூஜை அறையாக வைத்து இருப்பார்கள். அதே பக்கத்து வீட்டுக்குப் பார்த்தால் காம்ப்பவுண்டுக்கு அந்தப் பக்கம் தென்கிழக்கு மூலை அக்னி மூலையில் சமையலறையும் வைப்பார்கள். கழிப்பறையையும் வைப்பார்கள். இது எப்படி என்றால் சுவற்றிற்கு இந்த பக்கம் கழிப்பறை சுவற்றிற்கு அந்த பக்கம் பூஜை அறை. இப்படி இருக்கும் குழப்பத்தை இதை எப்படி ஆரோக்கிய வாழ்க்கைக்கு ஏற்ற வாஸ்தாக ஏற்றுக்கொள்ள முடியும் இது மிக மிகக் குழப்பமான செயல்.

**வீடு கட்ட ஆரம்பிக்கிறது செவ்வாய், ஞாயிறு, அக்னிபயம் என்றும், திங்கள் வரவு என்றும், புதன், வியாழன், வெள்ளி சுபம் என்றும், சனி திருட்டு பயம் என்றும் சொல் கிறார்கள். இதில் நீங்கள் எந்த நாளில் வீடு கட்ட ஆரம்பித்தீர்கள்?எந்த நாளில் வீடு திறப்புவிழா செய்தீர்கள்?**

நாங்கள் வீடு கட்டத் துவங்கியது செவ்வாய்க்கிழமை. மார்ச் 8 ஆம் தேதி. மகளிர் தினம். ஒரு ஞாபக மாக இருக்கவேண்டும் என்று அந்த நாளில் தொடங்கினோம். எங்க ளுடைய வீட்டுக்கு ஆகஸ்ட் 17ஆம் தேதி மதியம் 1.30 மணிமுதல் 2 மணி வரை எமகண்ட நேரத்தில்தான் திறப்புவிழா செய்தோம். அஷ்டமி, நவமி நாட்களில் எந்த ஒரு சுப காரியத்தையும் தொடங்கக்கூடாது என்பார்கள். ஆனால் அஷ்டமி அன்றுதான் வீடு திறப்புவிழா செய்தோம். தி.வி.க தலைவர் தோழர் கொளத்தூர்மணி அண்ணன் தான் திறப்புவிழா செய்தார். தோழர் விடுதலை இராஜேந்திரன் மற்றும் நம்ம ளுடைய இயக்கத் தோழர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். எங்களுடைய வீடு ரிப்பன் கட் பண்ணித்தான் திறப்புவிழா செய்தோம். வீட்டில் பால் காய்ச் சுவது, புரோகிதர் அழைத்து வந்து ஓமம் செய்தல் அந்த மாதிரிஎதுவும் செய்யவில்லை. ஒரு சின்ன கருத் தரங்கம் (வீடு கட்டுவது தொடர் பாக) நடத்தி திறப்புவிழா செய்தோம்.

வீடு திறப்புவிழா அன்று நாங்கள் கறிவிருந்து ஏற்பாடு செய்திருந் தோம். அஷ்டமி அன்று அசைவம் சமைக்கக் கூடாதுன்னு சொல் வார்கள்.ஆனால் நாங்கள்அசைவம் தான் செய்தோம். வீட்டுக்கு வாழை மரம் கட்டுவது, வீட்டை அலங்க ரிப்பது, மா இலைத் தோரணம் கட்டுவது போன்ற எதையும் செய்யவில்லை. எங்களுடைய வீட்டுக்கு அருகில் இருப்பவர்கள் கூட நீங்கள் வீடுகட்டும்போதும் வாஸ்து பார்க்காமல் கட்டினீர்கள். திறப்புவிழாவிற்கும் அய்யரைக் கூப்பிடவும் இல்லை. நீங்க செலவுக்குப் பயந்து எல்லாம் இப்படிச் செய்கிறீர்கள். இப்படி யெல்லாம் செய்தால் குடும்பத்திற்கு கஷ்டம் வந்திடும் அப்படீன்னு சொன்னார்கள். ஆனால்,அதைப் பற்றி எனக்கு எந்த ஒரு கவலையும் இல்லை.

**சில புதிய வீடுகளையேக் கூட வாஸ்து சரியில்லை என்று கூறி, வாஸ்துப்படி இடித்து மாற்றிக் கட்டுவது பாதுகாப்பானதா? அதனால் பயன் உள்ளதா?**

நிச்சயமாக அறிவுடையதும் அல்ல. பாதுகாப்பானதும் அல்ல. பயனுள்ளதும் அல்ல. வீடு கட்டு வதற்கு முன்பு அஸ்திவாரம் தோண்டி பீம் வைத்து, கட்டிடம் உறுதியாக இருக்கவேண்டும் என்று பெல்ட் கான்கிரீட் எல்லாம் போட்டு வீடு நன்றாக இருக்க வேண்டும் என்று ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து வடிவமைக் கின்றோம். இதை வாஸ்து பார்த்து இந்த இடத்தில் கதவு இருக்கக் கூடாது, இந்த இடத்தில் ஜன்னல் இருக்கக் கூடாது என்று நாம் அதை இடிக்கும்போது கட்டிடத் தின் உறுதித் தன்மை பாதிக்கப் படுகிறது. அது அந்த இடத்தை மட்டுமில்லாமல் டிரில்லிங் மிஷின் வைத்து உடைக்கும்போது அதனுடைய அதிர்வு முழுமையாக கட்டிடத்தையே பாதிக்கும். இப்படி நாம் மாற்றம் செய்யும்போது ஒரு 25 அல்லது 30 ஆண்டுகள் தாங்கக் கூடிய வீடுகள் ஒரு 10 ஆண்டு களிலேயே ஆயுட்காலம் முடிந்து விடும். ஒரு சின்ன நில அதிர்வு வந்தால் கூட அந்தக் கட்டிடம் தாங்காது. இப்படி வீடுகளை

இடித்துக்கட்டுவது உண்மை யிலேயே பாதுகாப்பானது அல்ல. ஒரு அறிவில்லாத செயல்தான்.

**வீடு கட்டுவதில் வேறு என்ன மூடநம்பிக்கைகள் உள்ளன?**
பார்ப்பனச் சுரண்டல்களை பற்றி தந்தைப் பெரியார் விளக்கமாகவே நமக்குக்குடுத்த பாடம் இருக்கிறது. பக்தி வந்தால் புத்தி போகும். புத்தி வந்தால் பக்தி போகும். என்று (அன்பு என்பது வேறு) பக்தி என்பது நம் மூளையில் போடப் பட்ட விலங்கு. பக்தியினால் புத்தி எப்படிப் போகிறது என்பதைக் கவனியுங்கள். நாம் புதிதாக வீடு கட்டும்போது கொத்தனார் ஒரு செங்கல்லை எடுத்து இரண்டாக உடைக்கிறார்கள். காரணம் அந்த இடத்தில் முழுக்கல்லை வைக்க முடியாது. பாதி கல்லைத்தான் வைக்க முடியும். வீடு கட்டும் உரிமையாளர் ரூ.3/- பெறுமான முள்ள செங்கல்லை உடைத்த உடன் தனது செல்வம் அழிந்து விட்டது போலக் கூச்சலிடுகிறார். அதே போலக் கொஞ்சம் சிமெண்ட் கலவை கீழே சிந்தி னாலும் கோபப்படுகிறார். அதே நபர் வீடு கட்டிமுடித்தவுடன் கிரகப்பிரவேஷம் என்ற பெயரில் ஒரு பார்ப்பானை அழைத்து வருகிறான். வந்த பார்ப்பான் ரூ500 மதிப்புள்ள நெய்யை நெருப்பில் ஊற்றி வீணடிக்கிறான்.செங்கல்லை உடைத்தபோது கூச்சலிட்ட மடையன் ரூ 500/-மதிப்புள்ள நெய்யை வீணடிக்கும்போது பக்தியுடன் கைகூப்பி வணங்கி நிற்கிறான். புத்தி இழந்து. மேலும் பார்ப்பான் சத்துள்ள பூசணிக் காயை இரண்டாக உடைத்து தெருவில் வீசி எறியச் சொல்லு வான். வீட்டின் உரிமையாளன் தலைவணங்கி பார்ப்பான் சொன்னப்படியெல்லாம் செய் வான். கொத்தனார் உடைத்த செங்கல் இரண்டு பாகமும் வீணாகப் போவதில்லை. அடுத்த வரிசை வரும்போது மறு பாதி உபயோகப்படுத்தப்படும். ஆனால் நெருப்பில் ஊற்றிய நெய்யோ, உடைத்த பூசணிக்காயோ எவருக் - கும் எந்த வகையிலும் பயன்படாது. இதேப்போலத்தான் பக்தியின் பெயரால் புத்தி இழந்து நாம் பல காரியங்களைச் செய்து கொண்டி ருக்கிறோம்.

**வாஸ்து பார்த்து வீடு கட்டுவது யாருக்கு இலாபம்? பொறியாளருக்கா? ஜோதிடருக்கா? வீட்டு உரிமையாளருக்கா? இதைப் பற்றி உங்களுடைய கருத்து?**
சில பொறியாளர்கள் வாஸ்து நிபுணராகவும், பொறியாளராகவும் செயல்படுகிறார்கள். இது இலாப நோக்கில் பார்த்து செய்யும்போது இதை இப்படிச் செய்யவேண்டும் என்று பார்த்துக் குடுப்பதற்காக ஒரு கமிஷன் பெற்றுக்கொள் கிறார்கள். பொறியாளர் மட்டும் இருந்துகொண்டு வாஸ்து நிபுணரிடம் போனால் அவங்களுக்கு ஒரு அதிகமான தொகை குடுக்க வேண்டியிருக்கும். வாஸ்து பார்த்தால் வாஸ்து நிபுணருக்கும் இரண்டாவதாக வாஸ்து நிபுணராகவும் இருக்கின்ற பொறியாளருக்குத்தான் இலாபம். ஜோதிடருக்கும் இலாபம். வாஸ்து பார்க்காத வரைக்கும் நம்மளுக்குத்தான் இலாபம்.

**வாஸ்து என்பது எந்த காலத்தில் இருந்து தொடங்கியது? நம்மளுடைய முன்னோர்கள் காலத்தில் இருந்து இருக்கிறதா? இல்லை இடைப்பட்ட காலத்தில் புகுத்தப்பட்டதா?**
வாஸ்து சாஸ்திரம் பல ஆண்டு களுக்கு முன்பே இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் குறுகிய காலத்தில்தான் இது பிரபலப்படுத்தப்பட்டிருக்கின்றது. என்னுடைய அப்பா, தாத்தா காலத்தில் எல்லாம் நாம் இருக்கிற துக்கு ஒரு இருப்பிடம் தேவை. அந்த இடத்தில் நமக்குத் தேவை யான பொருட்கள் எல்லாம் கிடைக்கிறதா என்று பார்த்து ஒரு சிறிய கூடாரங்களை போட்டுத் தான் வாழ்க்கையை வாழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். அதற்குப் பின்பு பணவசதியைப் பொறுத்து வீட்டை, தேவையான அளவிற்கு அதிகப்படுத்திக் கொண்டார்கள். பணம் அதிகமாக,அதிகமாக என்ன செய்வது என்று தெரியாமல் ஜோதிடர்களுக்கு வாஸ்து பார்ப்பது என்று கூறி மூட நம்பிக்கையால் பணத்தைச் செல வழிக்கிறார்கள். அதேபோல் ஜோதிடரும் பணம் இருப்பவர் களைக் குழப்பிவிட்டுத் தேவை யில்லாமல் பயத்தை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து பணம்பறிக்கும் வேலையைச் செய்கிறார்கள். உங்களுடைய வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டுமென்றால் வாஸ்துப்படி வீடு கட்டவேண்டும் இல்லையென்றால் நோய் வந்து விடும், கஷ்டம் வரும் என்று பயத்தை ஏற்படுத்துகிறார்கள். இப்படி மக்களைக் குழப்பிவிட்டு ஏமாற்றும் வேலைபுரோகிதர்களின் வேலை. நாம் ஏமாந்து போவது நம்மளுடைய தவறு. ஏமாறுகின்ற மக்கள் இருக்கின்றவரைக்கும் ஏமாற்றுகிறவன் இருந்தே தீருவான். நாம் தான் விழிப்புணர்வாக இருக்க வேண்டும்.

**வாஸ்துக்கு மாறாக நீங்கள் வீடு கட்டியதால் உங்களுடைய குடும்பத்திற்கோ (அல்லது) தொழிலுக்கோ ஏதாவது பாதிப்பு ஏற்பட்டதா?**
வாழ்க்கைமுறை என்பது அவங்க வாழ்கின்ற முறையைப் பொறுத்து. எந்த ஒரு ஜாதகமோ, வாஸ்தோ இவை எதுவுமே நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்வது இல்லை. நம்மளுடைய வாழ்க்கை முறையை நாம் நிர்ணயம் செய்யவேண்டும். நாம்தான் வாழ்கிறோம். நாம்தான் திட்டமிடவேண்டும் .நம்மளுடைய திட்டமிடுதல் சரியில்லை யென்றால் வாழ்க்கையும் சரியில்லா மல் போய்விடும். நாம் திட்டமிடு வது சரியானதாக இருந்தால் நாம் எப்படிப்பட்ட வீடுகளில் இருந் தாலும் ஏன் வாடகை வீட்டில் இருப்பவர்கள்கூட பல இலட்சக் கணக்கில் வருமானம் பெற்று நன்றாக இருக்கிறார்கள். வாஸ்து முறைக்கும், வாழ்க்கை முறைக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. வாஸ்துக்கு மாறாக வீடு கட்டிய தால்,என்னுடைய குடும்பத்திற்கோ, என்னுடைய தொழிலுக்கோ எந்த ஒரு பாதிப்பும் கிடையாது. நாங்கள் நன்றாக இருக்கிறோம்.



# தேவையற்ற 'தேசியஇனப் பாரம்பரியங்கள்'

அதி அசுரன்

உலகில் உள்ள அனைத்து மரபினங்களுக்கும், அனைத்து தேசிய இனங்களுக்கும் தனித்தனி அடையாளங்கள், தனித்தனிப் பண்பாடுகள், மரபுகள் இருக்கின்றன. அனைத்து இனங்களிலும் உள்ள முற்போக்காளர்கள், பகுத்தறிவாளர்கள் அவரவர் சார்ந்த இனங்களின் அடையாளங் களையும், பண்பாட்டு நடைமுறைகளையும் காலப் போக்கில், நடைமுறைக்கேற்றவாறு மறுசீரமைத் துள்ளனர். தேவையற்றவற்றைப் புறக்கணித் துள்ளனர்.

அப்படி காலத்துக்கு ஏற்றவாறு, அறிவியல் அடிப்படையில் பண்பாடு, பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டு, தம்மைத் தகவமைத்துக்கொண்ட இனங்களையே வளர்ந்த இனங்களாகக் கருத முடியும். நாகரீகம் பெற்ற மனிதசமுதாயமாகக் கருத முடியும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எனது முன்னோர் கடைப்பிடித்தது. இவைதான் எமது அடையாளம், இதுதான் எமது பாரம்பரியம் என்று அறிவுக்குப் பொருந்தாத எதையும் தூக்கிப் பிடித்துக்கொண்டு, அதற்காக போராடுவதும், அதற்கான போராட்டங்களை சட்ட ரீதியான உரிமை, தேசியஇன விடுதலை, மத விடுதலை ஆகிய வற்றுக்கான போராட்டங்களாகச் சித்தரிப்பதும் உலகெங்கிலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தியாவில் அதற்கு மிக முக்கியமான சான்று, ஜல்லிக்கட்டுக்கான போராட்டம். மற்றுமொரு சான்று நாகாலாந்து மகளிர் ஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டம்.

**நாகாலாந்தின் தனித்தன்மையைக் (?) காக்கும் போர்**

"இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் ஒன்றான நாகாலாந்து. பிப்ரவரி 1 ல் அங்கு நடைபெறுவதாக இருந்த, நகராட்சித் தேர்தல்களில் மகளிருக்கு 33 சதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மற்ற மாநிலங்களில் உள்ளது போலவே தங்கள் மாநிலத்திலும், மகளிருக்குத் தனி ஒதுக்கீடு வேண்டும் என்று, நாகாலாந்து அன்னையர் சங்கம், நீதிமன்றம் சென்று வாதிட்டது. 2012 ல் இருந்து 2016 வரை நான்கு ஆண்டுகள் போராடியதன் பலன் - இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உச்ச நீதிமன்றம், மகளிருக்கு 33 சதம் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், 16 ஆண்டுகளுக்குப் பின், நாகலாந்து மாநிலத்தில், நகராட்சி அமைப்புகளுக்கு பிப்ரவரி 1 அன்று தேர்தல்கள் நடைபெற இருந்தன.

நாகாலாந்து மாநில பழங்குடியினர் கூட்டு இயக்கம், இந்த ஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்த்து வருகிறது. "மகளிருக்கு அதிகாரம் வழங்குவது, நாகர் இனத்தில் இல்லை" என்பது அவர்களின் வாதம். நாகர் இனத்தின் தனித்தன்மையைக் குலைக்கிற செயலாகக் கூட்டியக்கம் பார்க்கிறது. எனவே, கிளர்ச்சி, கலவரம், துப்பாக்கிச் சூடு, இரு இளைஞர்கள் மரணம் என்று நீண்டுகொண்டே போகிறது.

பிப்ரவரி 2 இரவு நடந்த வன்முறையில் மாநிலத்தின் பழைய தலைமைச் செயலகம், முக்கியமான இயக்ககங்கள் செயல்பட்ட பழமையான கட்டிடங்கள் தீயிடப்பட்டு அடியோடு அழிந்து போனதாகவும், இவ்வகை வன்முறை செயல்கள் நாகர்களின் வழிமுறை அல்ல என்று பிப்ரவரி 4ஆம் தேதி, 'நாகலாந்து போஸ்ட்', தலையங்கம் தீட்டி, அமைதி வழிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டுள்ளது.( தமிழ் இந்து 07.02.2017 )



**நமது பாரம்பரியம் எதற்காக?**

ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் போது தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களும், இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் கூறியவை இவைதான். "ஜல்லிக்கட்டு எமது பாரம்பரியம். எமது அடையாளம். எமது பண்பாடு."நாம் முரண்படும் இடமும் இதுதான்.

நமக்குப் பண்பாடு, மரபு, பாரம்பரியம், அடையாளம் எதுவுமே வேண்டாம் என்று கூறவில்லை. இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அவை மனித இனத்தின் வளர்ச்சிப் போக்கிற்குப் பயன்பட வேண்டும். அடுத்தகட்டத்திற்கு மக்களை வழிநடத்துவதாக இருக்க வேண்டும். மீண்டும்

நம்மை 2000 ஆண்டுகளுக்குப் பின்னே தள்ளிவிடுவதாக இருந்தால் அந்தப் பண்பாடு, பாரம்பரியங்கள், அவை எவையானாலும் அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டுச் செல்லும் சமுதாயமே உலகில் நிலைத்து வாழும்.

நம்மை மீண்டும் ஜாதிக்காரனாகவும், ஆணாதிக்கவாதியாகவும் மதவாதியாகவும், காட்டு மிராண்டியாகவும்,முட்டாளாகவும் கட்டமைக்கும் ஜல்லிக்கட்டை மீட்க, பாரம்பரியத்தைக் காப்பது என்ற பெயரில் போராட்டங்கள் நடந்தன. அதேபோலத்தான் நாகாலாந்திலும் மகளிர் ஒதுக்கீட்டுக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்துள்ளன. ஜல்லிக்கட்டுக்கு எதிராக அறிவியல் அடிப்படையில் நாம் மாறுபட்ட கருத்துக்களை வைத்தபோது நமக்கு என்னமாதிரியான எதிர்வினைகள் வந்தனவோ, அதேபோன்று தான் நாகாலாந்து அன்னையர் முன்னணிக்கும் வந்துள்ளன.

**மரபுகள் அழியட்டும்!**

“மகளிருக்கு ஒதுக்கீடு வழங்குவது நாகர் இனப் பண்பாடு இல்லை. நாகர்களின் தனித்தன்மையைக் கெடுக்கும் நடவடிக்கை இது. நாகர்களின் மரபுகளுக்கு எதிரான செயல் இது” என்று நாகாலாந்தின் ஒட்டுமொத்த மக்களும், அனைத்து அமைப்புகளும் களத்தில் நிற்கின்றன.

நாம் கவனிக்க வேண்டிவை என்னவென்றால், நாகாலாந்தின் பெரும்பான்மை மக்கள் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள். கிறித்துவ மதத்திற்கு மாறினாலும், இந்து மதத்தின் அடையாளமான ‘பெண் உரிமை மறுப்பு’ என்பதையே தமது இனத்தின் அடையாளமாகக் கருதுகிறது நாகா இனம். இந்து மதத்தின் அடையாளத்தைத் தமது இனத்தின் அடையாளமாகக் கருதிக்கொண்டு, அதைக் காப்பாற்றுவதற்காகப் போராடுகிறது.

மனித இனத்தில் சரிபாதியாக உள்ள பெண் இனத்திற்கு வெறும் 33 சதம் ஒதுக்கீடு கொடுத்தாலே உங்கள் பண்பாடு, பாரம்பரியம், அடையாளம் எல்லாம் அழிந்துவிடும் என்றால், அவை அழிந்து தொலையட்டுமே! இத்தனை காலமாக உங்கள் தேசியஇனப்பண்பாடும், தேசிய இனப்பாரம் பரியமும், தேசிய இனஅடையாளமும் ஆண் ஆதிக்கத்தை வலுப்படுத்தவே பயன்பட்டுள்ளன. பெண் இனத்தை அடக்கி ஆளவே துணை நின்றுள்ளன என்றால் அந்தப் பாரம்பரியங்கள் அழிந்து போக வேண்டும் என நாம் விரும்புவது எந்த வகையில் தவறாகும்?

எந்த ஒரு காட்டுமிராண்டித்தனத்தையும் தேசிய இன அடையாளமாகக் கருதுவதும், அதைக் காப்பாற்றப் போராடுவதும் அந்தத் தேசிய இன மக்களுக்கு எந்த வகையில் விடுதலையைப் பெற்றுத் தரும்?

**ஜாதியும் தேசியஇன விடுதலையும்**

நாகாலாந்துக்கு அரசியல் சாசனப் பிரிவு 371 ஏ, படி, நாகாலாந்து மக்களின் பாரம்பரியம் தொடர்புடைய எந்தச் சட்டமும், நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டாலும் கூட, மாநில சட்டப் பேரவையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற சிறப்புரிமை உள்ளது. அதன்படி, நகராட்சி அமைப்புகளில் மகளிருக்கான ஒதுக்கீடு, தங்களின் பாரம்பரிய மரபுப்படி, ஏற்றுக்கொள்ள முடியாதது என்று, போராடும் ‘பழங்குடியினர் கூட்டு இயக்கம்’ கூறுகிறது. பிரிவு 371 ஏ வழங்கிய சிறப்பு அந்தஸ்துக்கு எதிராக உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்து இருப்பதாகவும் இவர்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

இந்தியா என்ற சிறைக்குள் இருந்து நாகர் தேசியஇனம் விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கில் இந்தச்சிறப்பு உரிமைகளை வரவேற்கிறோம். ஆனால் அந்தச் சிறப்பு உரிமைகளின் பெயராலேயே, அதே நாகர் இனத்தின் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுமானால், அந்த நாகா தேசிய இனத்திற்கு எதற்காக சிறப்பு உரிமைகள்? முதலில் அவற்றைத் திரும்பப்பெறவேண்டும் என்றே கூற வேண்டிய நிலையில் உள்ளோம்.

மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக கடவுளோ, மதமோ, சாஸ்திர, சம்பிரதாயங்களோ எவை வந்தாலும் அவற்றைத் தூக்கி எறிந்து முன்னேறச்சொல்வதே பகுத்தறிவு. அதுவே மக்கள் விடுதலைப்போர். அந்த வழியில் தேசிய இனப் பாரம்பரியம், தேசிய இன அடையாளம், தேசியஇன விடுதலை என்பவை மக்களின் முன்னேற்றத்தையும், வளர்ச்சி நோக்கிய மாற்றத்தையும் தடை செய்யுமானால், அந்தப் பாரம்பரியம், அடையாளம், தேசியஇன விடுதலை என அனைத்தையும் புறக்கணிக்கவேண்டியது மக்கள் விடுதலையில் அக்கறை உள்ளவர்களின் அடிப்படைக் கடமை.

நாகாலாந்து மக்களுக்கு இந்திய அரசில் எவ்வித உரிமையுமில்லை. வளர்ச்சித் திட்டங்கள் இல்லை. முன்னேற்ற நடவடிக்கைகள் எவையும் இல்லை. அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லை. ஒட்டு மொத்தமாக வடகிழக்கு மாநிலங்கள் அனைத்துமே இந்திய அரசால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றன. சுரண்டடப்பட்டு வருகின்றன. அவற்றை எதிர்த்து அந்த மக்கள் போராடுவதைவிட, தத்தமது அடையாளங்களைக் காக்கப் போராடுவதிலேயே அக்கறை காட்டுகின்றனர். தேசியஇனங்களுக் குள்ளேயே யார் பெரியவன் என்ற மோதல் போக்கு அதிகமாகி, அவற்றைக் கட்டுப்படுத்தும் போர் வையில் உளவுத்துறைகள் உள்ளே புகுந்து இன்று நிரந்தரக் குழுமோதல் களமாக வடகிழக்கு மாநிலங்கள் மாறியுள்ளன.

எதிரி யார்? என்று தெரியாமல் தங்களுக் குள்ளேயே மோதிக்கொள்வதும் - அடிமைத் தனத்தை உறுதிப்படுத்தக் கோரி எதிரியுடன் போரிடுவதும் ‘ஜாதி’ என்ற கருத்தியலின் சிறப்புக்கூறுகள். அந்த வகையான சிறப்புக்கூறுகள் ‘தேசியஇன விடுதலை’ என்ற கருத்தியலுக்கும் வரக்கூடாது. வந்தால் தேசியஇன விடுதலையையும் எதிர்ப்போம்.




# மாமிச உணவைப்பற்றிய தடைக்கு விடை

மயிலை.சீனி.வேங்கடசாமி

21.06.31-ல் வெளியான 'குடி அர'சில் நான் மாமிச உணவைப்பற்றிய சில குறிப்புகள்' என்ற தலையங்கத்துடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். எனது நண்பர் திரு.எ.சுப்பையா அவர்கள் நான் எழுதியதற்கு "மறுப்பு" ஒன்று 09.08.31-ல் வெளிவந்த 'குடி அர'சில் எழுதியிருப்பதை வாசகர்கள் படித்திருப்பார்கள். மறுப்புக்கு விடை எழுத வேண்டியது எனது கடமையாகையால் இங்கு இதனை எழுதுகிறேன்.

திரு.சுப்பையா அவர்கள் தக்க ஆதாரங்களோடு மறுப்பு எழுதுவாரானால் அதை ஒப்புக் கொள்ள நான் தயாராயிருக்கிறேன். உண்மை வெளி வரவேண்டும் என்பதுதான் எனது கொள்கையே தவிர ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் நியாயத்திற்கும் சயன்ஸீக்கும் (Science) பொருத்தமான உண்மைகளை மறுக்கவேண்டும் என்பது எனக்குக் கருத்துக் கிடையாது; மறுக்கவும் முடியாது.

இனி மறுப்பு என்றால் என்ன என்பதை விளக்கிட்டு தடைக்கு விடையெழுதுவோம். மறுப்பு என்றால் ஒருவர் உண்டு என்று சொல்லுவதை இல்லை என்று தக்க ஆதாரத்துடன் மறுக்க வேண்டும். நான் எழுதிய மாமிச உணவு என்னும் கட்டுரையில் வெண்ணெய், நெய், மீன்எண்ணெய், மாமிசக்கொழுப்பு, ஆடு முதலிய பிராணிகளின் ஈரல்,மூளை,மாமிசம் முதலியவைகளில் இரும்புச் சத்து ,தாமிரசத்து, துத்தநாகச்சத்து, வைட்டமின் என்னும் ஜீவசத்துக்கள் இருக்கின்றன என்றும் இவற்றையெல்லாம் கைதேர்ந்த டாக்டர்கள் (உணவைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள்) சயன்ஸ் ஆராய்ச்சி மூலமாகக் கண்டறிந்திருக்கிறார்கள் என்று எழுதியிருந்தேன்.

திரு.சுப்பையா அவர்கள் நான் எழுதியவற்றில் ஏதேனும் ஒன்றை மறுத்திருக்கிறாரா? அதாவது இந்த இந்த பொருளில் இந்த இந்த சத்துக்கள் இல்லை, அல்லது ஜீவசத்துக்கள் இல்லை என்று எழுதியிருந்தால் அதுதான் மறுப்பு என்று சொல்லப்படும்.இந்த விஷயத்தில் இது இது தவறு என்று எடுத்துக்காட்டாமல் மொத்தத்தில் ம்றுப்பு என்று பெயர் சொல்லி விட்டு புறம்பான விஷயங்களை எழுதியிருக்கிறார்.

அவர் எழுதிய மறுப்பில் இரண்டு விஷயங்கள் காணப்படுகின்றன.அதாவது மாமிச உணவு நோயை உண்டாக்கும் என்பதும் மரக்கறி உணவு ஆயுளை விருத்தி செய்யும் என்பதும் அவர் கருத்து.இவருடைய கருத்துக்கள் தவறு என்பதைப் பின்னால் விளக்குவோம். முதலில் வரிசைக்கிரமமாக மறுப்புக்கு மறுப்பு எழுதப்புகுவோம்.

"நம் பூர்வகுடிகளாகிய குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலமக்கள் மாமிச உணவு உபயோகித்து வந்ததாகத்தெரிய வில்லை.அவர்கள் யாதொரு ஆதிக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் அடிமைப்பட்டுக் கிடந்ததாகவு மில்லை. வீரமற்று, ரோஷமற்று மிருந்தாகவு மில்லை" என்று எழுதியிருக்கிறார்.

திரு.சுப்பையா அவர்கள் பழைய சங்க இலக்கியங்களைப் படித்துப்பார்த்தால் நம் பூர்வ குடிகளாகிய மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை நில மக்கள் எல்லோரும் மாமிச உணவை தாராளமாகச்சாப்பிட்டார்கள் என்பது விளங்கும். இதை அவர் தெரிந்து கொள்ளாமல் நமது பூர்வமக்கள் மாமிசம் சாப்பிடவில்லை என்று சொல்லுவது மிகவும் ஆச்சரியமாகயிருக்கிறது. திரு.சுப்பையா அவர்கள் பழைய இலக்கியங்களை ஊன்றிப்படித்து இந்த உண்மையை அறிவாராக. நமது பூர்வ தமிழர்கள் மாமிசம் சாப்பிட்டு வந்தபடியால்தான் அவர்கள் வீரதீரமும் சுயமரியாதையும் சுதந்திரமும் உடையவர் களாயிருந்தார்கள் என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லுகின்றேன்.

"ஆரிய மிலேச்சர்கள்" வந்து ஜாதிப் பிரிவுகளை உண்டாக்கிய படியால்தான் இந்தியா அன்னிய அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டது என்று சுப்பையா எழுதுகிறார்" இந்தியா அடிமைப் பட்டதற்குப் பல காரணங்களுண்டு ஜாதிப்பிரிவு ஒரு காரணமிருக்க மரக்கறி உணவும் இன்னொரு காரண மாகும்.இவையன்றி இன்னும் பல காரணங்களு முண்டு. அவற்றையெல்லாம் இங்கு எழுதுவதற்கு இது இடமல்ல.

"மனிதர்களைக்கொன்று அவர்களின் மாமிசத்தைப் புசிப்பதால் தேகத்திற்கு இன்னும் அநேக நன்மைகள் ஏற்படுமென்று பிரசாரம் செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதாயிருந்தால் மாமிச வெறி பிடித்த வலியார்கள் எழியார்களை வாட்டி வதைத்துத் தின்று கூடிய சீக்கிரத்தில் இந்தியாவை முன்னேற்றத்துக்குக் கொண்டு வந்து பழுக்கவைத்துவிடுவார்கள்" என்று திரு.சுப்பையா எழுதுகிறார்.

மனிதரைக் கொல்லவேண்டுமென்றும் மனித மாமிசம் சாப்பிடவேண்டுமென்றும் இதுவரையில் ஒருவரும் சொல்லவில்லை. ஆனால், சைவ சித்தாந்தியும் திருநெல்வேலிச் சைவருமாகிய திரு.சுப்பையா அவர்களால் குரு என்றும் தலைவ ரென்றும் வணங்கப்படுகிற சைவ மடாதி பதிகள் மனிதர்களைக் கொலை செய்து கொண்டு இந்தியா வையும் சைவ சமயத்தையும் நாளுக்கு நாள் பழுக்கவைத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அதையும் சுப்பையா வாய்திறவாமல் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்.

பிறகு "மரக்கறி" உணவை உண்டால் பலசாலிகளாயிருப்பார்கள்" என்றும் "மாமிச உணவில் கிருமிகள் இருக்கின்றன" என்றும் எழுதுகிறார்.மாமிசத்தில் கிருமிகள் உற்பத்தியாவது போலவே மரக்கறி உணவிலும் கோடிக்கணக்கான கிருமிகள் உற்பத்தியாகின்றன.உதாரணமாக,பருப்பு காய்கறிகளைச் சமைத்து இரண்டொருநாள் வைத்துப் பிறகு பார்த்தால் அவற்றில் கிருமிகள் உற்பத்தியாகியிருப்பதைக்காணலாம்.

அவ்வாறே மாமிசத்திலும் உற்பத்தி யாவதையுங்காணலாம். கிருமிகளில் இரண்டு விதம் உண்டு. ஒருவிதக் கிருமிகள் தேகசுகத்தைவிருத்தி பண்ணுகின்றன.இன்னொருவித கிருமிகள் தேக சுகத்தைக் கெடுக்கின்றன தயிரில் தேகத்துக்கு சுகத்தை உண்டு பண்ணுகிற கிருமிகள் ஏராள மாயிருக்கின்றன. தயிரைச் சாப்பிடும்போது அதனுடன் இந்தக் கிருமிகள் நமது தேகத்தில் சென்று விடுகின்றன. இவ்விதம் நன்மையும் தீமையும் செய்கிற கிருமிகள் எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கின்றன. ஆகவே 'மாமிசத்தில் தான் கிருமிகள் இருக்கின்றன' என்று சொல்லுவது தவறு. "மாமிசம் சீக்கிரம் கெட்டுப் போகிறது' என்றும் 'மரக்கறி உணவு கெடுவதற்குச் சிறிது நேரம் செல்கிறது" என்றும் திரு,சுப்பையா சொல்வதா யிருந்தால் அதை நாம் ஒப்புக்கொள்ளத் தயாரா யிருக்கிறோம்.

"மாமிசம் உண்பதால் ஆயிரக்கணக்கான வியாதிகள் உண்டாகிறது" என்பதாகச் சொல்லு கிறார்.மரக்கறி மாத்திரம் புசிக்கிறவர்களுக்கு ஆயிரக்கணக்கான வியாதிகள் உண்டாகிற தில்லையா? இதன் காரணமென்ன?

பழைய டாக்டர்கள் மரக்கறி உணவுதான் சிறந்தது என்றும் மாமிச உணவு சாப்பிடக் கூடா தென்றும் எழுதியிருப்பது உண்மைதான். ஆனால், உணவைப்பற்றி நன்கு ஆராய்ந்த தற்காலத்து டாக்டர்கள் மாமிச உணவையும் மரக்கறி உணவையும் இரண்டையும் கலந்து சாப்பிட வேண்டும் என்றும் இப்படிச் சாப்பிட்டால் தான் தேகசுகத்தோடிருக்க முடியும் என்றும் சொல்லு கிறார்கள்.

'உணவும், உடல் நலமும்' என்னும் புத்தகம் எழுதிய ஜான்சன் என்பவர் உணவு முறையை நன்காராய்ந்தவர். (Health and Diet by Cecil Webb Johnson M.D.) அவர் கீழ்வருமாறு எழுதுகிறார்.

*"A person would have to consume a vast amount of Vegetables in order to obtain the amount of Proteins contained in a few ounces of lean beef or mutton. Besides which, animal Proteins seems to develop mental and bodily energy to a much greater extent than do vegetable Proteins"*

என்று எழுதியிருக்கிறார்.இன்னும் அவர் அதே புத்தகத்தின் இன்னொரு இடத்தில் கீழ்வருமாறு எழுதுகிறார். *"Though we may also obtain proteins from certain Vegetables, they do not seem to produce mental and bodily energy to the same excent as animal proteins".*

இன்னும் பல ஆசிரியர்களின் கருத்துக்களை இங்கு எடுத்துக்காட்டக்கூடும். ஆனால், விரிவஞ்சி விடுகின்றோம்.

பின்னர் நமது நண்பர் திரு.சுப்பையா 100 வருஷங்களுக்கு மேல் உயிர் வாழ்ந்த நான்கு பேரைக் குறிப்பிட்டு அவர்கள் மரக்கறி உணவு சாப்பிட்ட தால் நெடுநாள் உயிர் வாழ்ந்ததாகச் சொல்லுகிறார். மாமிச ஆகாரத்தைத் தாராளமாகச் சாப்பிட்டவர் களிலும் 100 அல்லது 150 வருஷங்கள் உயிர் வாழ்ந்திருந்தோர் பலர் உளர். இதை நண்பர் அறியாமலிருப்பது விசனிக்கத்தக்கது.

இனி மாமிச ஆகாரம் புசிப்போர் தான் அதிக நாள் நோயின்றி உயிர் வாழ்கிறார்கள் என்பதை தக்க ஆதாரத்துடன் விளக்குவோம்.ஒருவர் இருவர் 100 அல்லது 150 வருஷம் உயிர் வாழ்ந்ததைக் கொண்டு இதை நிச்சயிக்கக்கூடாது. ஒரு சமூகம் அல்லது ஒரு தேசத்து ஜனங்கள் நெடுநாள் ஜீவித்திருந்தால் அதைக்கொண்டு நாம் நிர்ணயிக்கலாம். அவ்விதம் நிர்ணயிப்பதாயிருந்தால் மாமிச உணவு சாப்பிட்டவர்கள்தான் நெடுநாள் உயிர் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது.

மெச்சினிக்காப் என்னும் புகழ்பெற்ற வைத்தியர் "நீண்ட ஆயுள்" என்னும் புத்தகத்தில் (E.Metchnikoff's Prolongation of Life) நெடுநாள் உயிர் வாழ்ந்திருந்த தேசத்தாரைக் குறிப்பிட்டு அவர்கள் எல்லோரும் புளித்த தயிரைச்சாப்பிட்டு வந்ததால் நெடுநாள் ஜீவித்திருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். தயிர் என்பது மாமிச உணவு. மாமிச உணவாகிய தயிரைச்சாப்பிடுவோர் நெடுநாள் வாழ்கிறார்கள் என்று அவர் சொல்லியிருப்பதை நன்கு கவனிக்கவேண்டும்.

இனி திரு.சுப்பையாவும், அவரைப்போன்ற மரக்கறி வெறியர்களும் மாமிச உணவாகிய பால், தயிர், நெய்களைச் சாப்பிடுகிறார்களா? இல்லையா? என்று கேட்கிறோம். இவர்கள் சாப்பிடுவது போதாதென்று இவர்கள் கும்பிடுகிற சாமிகளின் பேரிலும் இந்த மாமிச உணவுகளாகிய பால், தயிர், நெய்களை ஊற்றி அபிஷேகம் செய்கிறார்களா? இல்லையா? மூட ஜனங்கள் மாமிசங்களைத் தங்கள் சாமிக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். நமது காருண்யம் மிக்க சைவர்கள் பால், தயிர், நெய், வெண்ணெய்களை மாமிச உணவு என்று கருதாமல் அவைகளைத் தங்கள் சாமிகளின் தலையில் ஊற்றுகிறார்கள். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

தியாபிஸ்ட் என்னும் சங்கத்தைச் சேர்ந்தோர் கோழி முட்டைகளை தாவர உணவு என்று சொல்லுகிறார்கள். நமது சுப்பையாவும் அவரைச் சேர்ந்த சைவர்களும் தினந்தோறும் சாப்பிடுகிற பால், தயிர், நெய்களும் மரக்கறி உணவுதானே? "சற்சூத்திரன்" என்பது போல இவைகளை சத்மாமிசம் (நல்ல மாமிசம்) என்று சொல்லுவார்களோ? மாமிச வெறியற்ற இவர் சத்மாமிசங்களை ஏன் புசிக்கிறார்? முதலில் இவர் பால், தயிர், நெய் சாப்பிடுவதை நிறுத்தி, பின்னர் சாமிகளின் தலையில் பால், தயிர் கொட்டுவதை நிறுத்தி பின்னர் இவர் மறுப்பெழுத வந்திருந்தால் நன்றாயிருக்கும்.

இந்தியா, இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய கண்டங்களில் ஜீவதயா சங்கங்களும், மரக்கறியுண்ணும் கட்டுப்பாடுள்ள சங்கங்களும், ஜீவன்களை வைத்து வளர்க்கும் இடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன" என்று எழுதுகிறார்.

புலால் மறுத்தல் சங்கங்கள் மேல்நாடுகளிலிருப்பது உண்மைதான்.அங்கு மாமிச உணவுகளை மிதமிஞ்சி புசிப்பதால் அதைத்தடுக்க அச்சங்கங்கள் அவசியம். ஆனால், அச்சங்கம் இந்தியாவுக்குத் தேவையில்லை. அதற்கு மாறாக புலால் உண்ணும் சங்கங்களை ஏற்படுத்துவது அவசியம் என்றும் சொல்லுவேன். இப்படிச் சொல்வதற்குக் காரணமில்லாமலில்லை.

முதலாவது, தென்னிந்திராகிய நாம் சாப்பாட்டு விஷயத்தில் கவனம் செலுத்தாமல், இப்போது சாப்பிட்டுவரும் ஆகாரத்தையே சாப்பிட்டு வருவோமானால் "ஒன்றிரண்டு நூற்றாண்டுக்குள்ளாக மிகவும் பலமற்ற ஜாதியாராகி விடுவோம்" என்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், தென்னிந்திய ஜனங்களாகிய நாம் உலகத்திலுள்ள ஜனங்களுக்கு மத்தியில் சம உரிமையடைய விரும்பினால் நாம் ஆகாரத்தைச் சீர்திருத்தி உடல் உறுதியும் மன உறுதியும் அடையவேண்டும். இதற்கு மரக்கறி உணவோடு மாமிச உணவுகளையும் தாராளமாய் உண்ணவேண்டும்.

இரண்டாவது, அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் இந்தியராகிய நம்மைக் குடியேற விடுகிறதில்லை. இந்தியர்கள் அங்கு போய்க் குடியேறி வகிக்கக்கூடாதென்று அத்தேசத்தில் சட்டம் செய்திருக்கிறார்கள். ஆனால் சீக்கியர் போன்ற உடல் பலமும் மனோ திடமும் உள்ள இந்திய ஜாதியாரை அங்கு குடியேற அனுமதிக்கிறார்கள். தென்னிந்தியாவிலிருந்து ஒருவரும் அங்கு குடியேற முடியாது. தென்னிந்தியர் உடல் பலமற்று, மனதிடமில்லாமல் இருப்பதால் அங்கே குடி ஏறக்கூடாதென்று அத்தேசத்துச் சட்டம் தடுக்கிறது.


அதாவது அத்தேசத்தோர் தென்னிந்திய ஜனங்களை மனோ பலத்திலும், தேக பலத்திலும் தாழ்ந்தவராக மதிக்கிறார்கள். இவ்விதம் அயல் நாட்டாரால் அவமதிக்கப்படுகிற நாம், நம்மை உயர்வு படுத்திக்கொள்ள முயற்சி செய்யவேண்டுமா? அல்லது இப்பொழுது இருக்கிற தாழ்ந்த நிலைமையிலேயே இருக்கவேண்டுமா? என்றுதான் கேட்கிறேன். இதை உத்தேசித்தாவது நாம் நமது ஆகாரத்தைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா? என்றும் கேட்கிறேன்.

திரு.சுப்பையா அவர்களின் போலி மறுப்புக்கு விடையிறுப்பதை இதனோடு நிறுத்திக்கொண்டு கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். அதாவது, காய்கனிகளைப் புசித்துக்கொண்டே பலவான்களாயும், வீரபுருஷராயும் ஆரோக்கியமாயும் இருக்கலாம் என்றாலும், மரக்கறி உணவோடு மாமிச உணவையும் புசிப்பதனால் அதைவிட பன்மடங்கு பலவான்களாயும், வீர புருஷர்களாயும், ஆரோக்கியமாயும் இருக்கலாம் என்பதோடு, தேகபலமும், மனோபலமும் அதிகரிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குடி அரசு** 13.09.1931

டாக்டர் **அருண்குமார்** MD
குழந்தை நல மருத்துவர், ஈரோடு.

# தடுப்பூசி மிக மிக அவசியம்



**மருத்துவர் புகழேந்தி அவர்கள் ‘தடுப்பூசி...நடுக்கமூட்டும் உண்மைகள்!’ என்ற தலைப்பில், ஜூனியர் விகடனில் கொடுத்த நேர்காணலுக்கு டாக்டர் அருண்குமார் அவர்களின் மறுப்பு மற்றும் விளக்கப்பதிவு.**

**டாக்டர் புகழேந்தி:** தட்டம்மைத் தடுப்பூசி விநியோகம் இந்தியா முழுவதும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் நிலையில், உண்மையில் இந்தத் தடுப்பூசிகள் நோயைத் தடுக்கின்றனவா..?இல்லை உண்டு பண்ணுகின்றனவா என்ற திடுக்கிடும் கேள்வி மக்களின் மனங்களை கலவரப்படுத்தி இருக்கிறது.

**டாக்டர் அருண்குமார்:** தட்டம்மைத் தடுப்பூசி நிறுத்தி வைக்கப்படவில்லை. வெறும் தட்டம்மை ஊசியாக 9 மாதங்களில் போடப்பட்டு வந்த தடுப்பூசி இப்போது ருபெல்லா நோயின் பாதுகாப்பையும் சேர்ந்து ‘தட்டம்மை ருபெல்லா’ தடுப்பூசியாக உருவெடுக் கிறது. இது 25 வருடங்களுக்கு மேலாக உங்கள் குழந்தை நல மருத்துவர் குழந்தைகளுக்குப் போட்டுக்கொண்டிருக்கும் தடுப்பூசி தான். ஏதோ புதிய ஆராய்ச்சித் தடுப்பூசி அல்ல. சந்தேகம் இருந்தால், உங்கள் குழந்தையின் தடுப்பூசி அட்டவனையில் Measles (தட்டம்மை) என்று 9 மாதங்களிலோ அல்லது MMR என்று 15 மாதங்களிலோ உங்கள் குழந்தைக்கு போடப்பட்டிருக்கிறதா என்று பாருங்கள்.

**டாக்டர் புகழேந்தி:** மக்களின் சந்தேகம் 100 சதம் நியாயமானது. இன்றைய சூழலில் தடுப்பூசிகள் நோயைத் தடுக்கும் என்பதே மாயை. அதற்கு உலக அளவிலான உதாரணங்களே சாட்சி. மருந்து சந்தையின் பணம் காய்க்கும் மரமாக இருக்கும் தடுப்பூசிகள் பற்றி இப்போதாவது மக்கள் விழிப்புணர்வு பெறவேண்டும்

**டாக்டர் அருண்குமார்:** தடுப்பூசிகள் நோயைத் தடுக்கவில்லை எனில் 2000 வருடங்களாக இயற்கையுடன் மனிதன் ஒன்றி இருந்த போது குறையாத தொற்று நோய்கள் எப்படி கடந்த 100 வருடங்களில் குறைந்தது?

**டாக்டர் புகழேந்தி:** தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதன் நோக்கம் நிச்சயம் தவறாக இருக்கப் போவ தில்லை. ஆனால், இப்போது தவறான நோக்கத்துடன் முன்னிலைப்படுத்தப்படுகிறது. தடுப்பூசி போட்டுக் கொள்வது ஒன்றுதான் இந்த பூமியில் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஒரே வழி என்ற எண்ணம் மக்கள் மனதில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தடுப்பூசிக்கான சந்தையை உலக அளவில் விஸ்தரித்துள்ளனர். சுகாதாரமான உணவு, வசிப்பிடம், தண்ணீர் போன்றவையும், நல்ல நோய் எதிர்ப்பு சக்தியும்தான் எந்த ஒரு நோயையும் தடுக்க முடியும். அதுதான் இயற்கையின் விதி. செயற்கையாக உருவாக்கப்படும் மருந்துகள் அதைச் செய்ய முடியாது.

**டாக்டர் அருண்குமார்:** நோய் தடுப்பில் 3 வகை உண்டு. Primary Prevention, Secondary Prevention, Tertiary Prevention இதில் Primary Prevention என்றால் நோய் வரும் முன்பு சில நடவடிக்கைகள் மூலம் நோய் வராமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்வது. நீர் அல்லது உணவுத் தொற்று மூலம் பரவும் நோய்களை வேண்டுமானால் சுத்தம் சுகாதாரம் மூலம் தடுக்கலாம். உதாரணம்: காலரா, டைபாய்டு, ஹெபாடிடிஸ் ய, ரோடா வைரஸ் போன்ற நோய்கள்.

காற்று மூலமும் மற்றவரின் மூச்சுக்காற்று அல்லது தும்மல் மூலமும் பரவும் நிமோனியா, பெரியம்மை, தட்டம்மை, ருபெல்லா, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களில் இருந்து தடுப்பூசி அல்லாமல் வேறு வழியில் பாதுகாப்பு பெறுவது எப்படி என்று நீங்கள் விளக்கி கூறினால் நன்றாக இருக்கும். (வேண்டுமானால் நாம் வேலைக்குப் போகாமல் குழந்தையைப் பள்ளிகூடத்திற்கு அனுப்பாமல் கண்ணாடி அறையில் ஆயுள் முழுக்க பூட்டி வைத்தால் வேண்டுமானால் இவற்றை தடுப்பூசி இல்லாமல் தடுக்கலாம்)

**டாக்டர் புகழேந்தி:** இதுவரைக்கும் தடுப்பூசிகள் எந்த நாட்டிலும், எந்தக் காலகட்டதிலும் முற்றுமுதலாக எந்த ஒரு நோயையும் தடுத்ததில்லை. உலக அளவில் அதிகமாகப் போடப்படும் போலியோ, அம்மை, மஞ்சள் காமாலைத் தடுப்பூசிகளிலும் இதுதான் உண்மை நிலவரம்.

**டாக்டர் அருண்குமார்:** உங்களைப் போன்றவர்கள் ஏன் 50 வருடம் முன்பு போலியோவால் ஆயிரக் கணக்கானவர் பலியாகி கொண்டிருக்கும் போது இந்த அறிய கருத்துக்களை முன்வைக்கவில்லை? மாற்று வழியை முன்வைக்கவில்லை?

**டாக்டர் புகழேந்தி:** அம்மைநோய்க்கான தடுப்பூசியை 1796 ல் எட்வர்ட் ஜென்னர் என்பவர் கண்டறிந்தார். அந்த ஊசியைத் தன்னுடைய மகனுக்கும், இன்னொருவருக்கும் கொடுத்து, சோதித்துப் பார்த்தார். தன் மகனென்றும் பாராமல் அந்தக் கொள்ளை நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற தியாக உணர்வில் அதைச் செய்தார். அந்த மருந்து, மருத்துவர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆனால் மருந்தின் வீரியத்தால் சில வருடங் களில் அவர் மகன் உள்பட இருவருமே இறந்து போனார்கள். இதனால் எட்வர்ட் ஜென்னர் தன்னுடைய இரண்டாவது மகனுக்கு அம்மைத் தடுப்பூசி போடவில்லை.. ஆரம்பம் மட்டுமில்ல.. அதன்பிறகான வரலாறும் இப்படித்தான் உள்ளது.

**டாக்டர் அருண்குமார்:** நீங்களும் இப்போது மற்றவர்கள் போல் தவறான தகவல் தர ஆரம்பித்து விட்டீர்களே! எட்வர்ட் ஜென்னர் எட்டு வயது ஜேம்ஸ் பிலிப்ஸ்க்கு 14 May 1796 அன்று பெரியம்மை தடுப்பூசி போட்டார். ஜேம்ஸ் பிலிப்ஸ் இறந்தது 25 April 1853. அதாவது அவரது 65 வயதில். ஜென்னர் மகன் 21 வயதில் டிபி நோயால் பலியானார். பார்க்க, https://en.wikipedia.org/wiki/Edward_Jenner மற்றும் https://en.wikipedia.org/wiki/James_Phipps

**டாக்டர் புகழேந்தி:** 1989 ம் ஆண்டில் அமெரிக்கப் பள்ளிக்குழந்தைகள் அனைவருக்கும் அம்மைத் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டு இருந்தது. ஊசி போட்ட பிறகு C.D.C ( Centre for Desease Control ) எனப்படும் அமெரிக்க அரசின் அதிகாரப்பூர்வ அமைப்பு நடத்திய ஆய்வில் 98 சதம் குழந்தைகளை அம்மை நோய் தாக்கியிருந்தது. இது, ஊசி போட்டதற்கு முன்பு இருந்த சதவிகிதத்தை விட மிக அதிகம். உலகின் பல நாடுகளில் இதே நிலைதான். அம்மைத் தடுப்பூசியால் அந்த நோய் வருவதைத் தடுக்க முடியவில்லை என்பது ஒரு பக்கம் இருக்க, அது மூட்டுவலி, வலிப்பு போன்ற வேறு சில நோய்களையும் தூண்டிவிடுகிறது என்ற தகவல் இன்னும் அதிர்ச்சியானது.

**டாக்டர் அருண்குமார்:** அமெரிக்காவில் தட்டம்மை தடுப்பூசி லைசென்ஸ் கொடுக்கப்பட்ட ஆண்டு 1963. அதற்கு முன்னர் ஆண்டுக்கு ஐந்து இலட்சம் பேருக்கு தட்டம்மை நோயும் 500 பேர் உயிரிழப்பும் இருந்தது. தட்டம்மைத் தடுப்பூசி ஆரம்பித்த 5 வருடங்களில் 95 சதவீதம் நோயின் தாக்கம் குறைந்தது. இதனால் தான் தட்டமையை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையே ஏற்பட்டது. தடுப்பூசி ஆரம்பித்து 5 வருடங்களில் 95 சதவீதம் ஒரு நோய் வருவது குறைகிறது என்றால் அதற்கு காரணம் தடுப்பூசியா? பில்லி சூனியமா? கடவுள் அருளா?

1989 ல் மறுபடியும் தட்டம்மை சற்று, தலைதூக்கியது. பல இறப்புகளும் நடந்தன. ஆராய்ந்து பார்த்ததில் 45 சதவீதம் பேர் தடுப்பூசி போடுவதில்லை என்று தெரியவந்தது. அந்த வருடங்களில் அமெரிக்காவில் 123 பேர் தட்டம்மை நோய்க்கு பலியாகினர். அதில் 90 சதவீதம் தடுப்பூசி போடாத வர்கள். மறுபடி 1997 இல் தட்டம்மைத் தடுப்பூசி 90 சதவீதம் மக்களுக்கு மேல் செலுத்தப்பட்டது. பிறகு வருடத்திற்கு வெறும் 50 நோயாளிகள் என்ற அளவிலேயே தட்டம்மை இருந்தது.

ரொம்ப நாள் கழித்து மறுபடி 2014 இல் 600 பேருக்கு மேல் தட்டம்மை தாக்கியது. அதற்குக் காரணம் யார் என்று படிக்கும் அன்பர்களுக்கு இந்நேரம் புரிந்திருக்கும். விவரங்களுக்கு கீழ்கண்ட இணையதளத்தை படிக்கவும். https://www.cdc.gov/vaccines/pubs/pinkbook/meas.html

**டாக்டர் புகழேந்தி:** இங்கிலாந்தில் வருடம் ஒன்றுக்கு 30 ஆயிரம் பேர் வலிப்பு நோயால் பாதிக்கப் படுகின்றனர். இதில், 10 ஆயிரம் பேர் அம்மைத்தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள். இதை நான் சொல்ல வில்லை, ‘பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல்’ சொல்கிறது.

**டாக்டர் அருண்குமார்:** கட்டுக்கதை. இதற்கு ஆதாரங்கள் தரவும்.

**டாக்டர் புகழேந்தி:** உடலுக்குள் இருக்கும் நோய்க்கிருமிகளுக்கு எதிரான புரதத்தைத் தூண்டி விடுவதற்காக, அதே கிருமியை அதன் நோய் தாக்கும் திறனைக் குறைத்து உடம்புக்குள் செலுத்துவது தான் அம்மைத்தடுப்பூசி. உடலுக்குள் செலுத்தப்படும் அந்தக் கிருமியை எல்லோருடைய உடலும் ஏற்றுக் கொள்வதில்லை. அது ஒவ்வொருவரின் உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்தது. இந்தியா போன்ற வளர்ந்துவரும் மற்றும் ஏழை நாடுகளின் சிறுவர்கள் சத்து குறைப்பாட்டுடன்தான் இருக்கிறார்கள். அவர்களின் உடம்பு இந்தத் தடுப்பூசியின் கிருமி களைத் தாங்கும் சக்தி படைத்ததாக இருப்பதில்லை. அத்தகைய சூழலில்தான் , தடுப்பூசி போடப்பட்ட நோக்கத்தின் எதிர்திசையில் அம்மை நோயும், வேறு நோய்களும் வருகின்றன.

**டாக்டர் அருண்குமார்:** நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருப்பவர்களுக்குத் தான் இந்தத் தடுப்பூசியே தேவை. நீங்கள் கூறுவது எயிட்ஸ் அல்லது Primary Immuno Deficiency எனப்படும் நோய்களில். இந்த நோய்களில் நோய் எதிர்ப்புச் சக்தி என்று ஒன்றே உடலில் இருக்காது. அப்போது தான் live Vaccines ஒத்துக் கொள்ளாது.

சத்துப் பற்றாக்குறையினால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கும் குழந்தைகளுக்குத் தடுப்பூசி முழுப்பாதுகாப்பு தராமல் போகலாம். ஆனால் அதுவும் இல்லை என்றால் அவர்கள் அந்த நோய்க்கிருமியை எதிர்கொள்ளும்போது அவர்கள் கதை காலி. இந்த இரண்டிற்கும் வித்தியாசம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**டாக்டர் புகழேந்தி:** அதேபோல மத்திய மற்றும் தமிழக அரசுகளால் மஞ்சள் காமாலைத் தடுப்பூசிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்த நோய் 100 பேரைத் தாக்குகிறது என்றால், அதில் 95 பேருக்கு நோய் தாக்கியிருப்பது உடனடியாகத் தெரிந்துவிடுகிறது. மீதி 5 பேருக்கு மட்டுமே தாமதமான அறிகுறிகள் தென்படுகிறது. அந்த 95 பேரிலும் 94 பேர், சராசரியான உணவுக் கட்டுப்பாடுகள் மூலமாகவே இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுகின்றனர். மீதமுள்ள ஒரு சதவிகிதம் பேருக்கு மட்டுமே இறப்பு ஏற்படுகிறது.

**டாக்டர் அருண்குமார்:** ‘ஹெபாடிடிஸ் பி’ உணவுக் கட்டுபாட்டால் சரி ஆகிவிடுமா!!!

1 சதவீதம் இறப்பு என்பது வருடத்திற்கு ஆறு இலட்சத்து எண்பதாயிரம் இறப்புகள். இதைத் தடுக்க தடுப்பூசி போடுவது குற்றமா? http://www.who.int/mediacentre/factsheets/fs204/en/

‘ஹெபாடிடிஸ் பி’ பெரியவர்களைத் தாக்கும்போது நீங்கள் கூறுவது பொருந்தலாம். ஆனால், அதே கிருமி குழந்தைகளைத் தாக்கினால் 90 சதவீதம் குழந்தைகளுக்கு Chronic இன்பெக்ஷன் வருகிறது. ஈரல் பாதிப்பும், ஈரல் புற்றுநோயும் வருகிறது. இதனாலேயே பிறக்கும் அனைத்துக்

குழந்தைகளுக்கும் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டது.

**டாக்டர் புகழேந்தி:** அரசே, இது ஒரு ஆட்கொல்லி நோய் என்ற தோற்றம் உருவாகும் வகையில் கோடிக் கணக்கான ரூபாய் நிதியை வாரி இறைக்கிறது. அமெரிக்காவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் மஞ்சள் காமாலைத் தடுப்பூசி போடுவது கட்டாயம் என்ற சட்டம் 1997-ல் நீக்கப்பட்டுவிட்டது. கர்ப்பிணிப் பெண்களுக்கு மஞ்சள் காமாலை இருந்தால் மட்டுமே, பிறக்கும் குழந்தைக்கு அந்தத் தடுப்பூசி போட வேண்டும் என்பதாக அது மாற்றியமைக்கப் பட்டது. தேவைக்கதிகமான உற்பத்தி செய்திருந்த மருந்துகளை என்ன செய்வது எனத் தெரியாமல், அந்நாட்டு மருந்துக் கம்பெனிகள் திணறி நின்ற சமயத்தில்தான், பில்கேட்ஸின் கரிசனம் இந்தியாவின் மீது திரும்பியது. ஆந்திர மாநிலத்தின் 4.5 இலட்சம் குழந்தைகளுக்கு, பில்கேட்ஸ் தனது ஃபவுண்டேஷன் மூலமாக மஞ்சள் காமாலை தடுப்பூசி போட்டார். அதற்கான மருந்து அமெரிக்காவில் இருந்து வரவழைக்கப்பட்டது.

உண்மையில் மஞ்சள் காமாலைக்கு அமெரிக்காவை விட தரமான, விலை குறைந்த மருந்து இந்தியாவிலேயே கிடைக்கிறது. மஞ்சள் காமாலை பற்றி இந்த அளவு பூதாகாரப்படுத்தி, ஏன் மக்களின் மனதில் பீதியை ஏற்படுத்த வேண்டும்.? அம்மைத் தடுப்பூசி போலவே மஞ்சள் காமாலைத் தடுப்பூசியையும் எல்லோருடைய உடல்நிலையும் ஏற்றுக் கொள்வதில்லை. அப்படித் தேவையில்லாமல் கொடுக்கப் படுவதால் வலிப்பு, ஜன்னி, கண்பார்வை பாதிப்பு, மூளைக்காய்ச்சல் உள்ளிட்ட 13 வகையான நோய்கள் வருகிறது என்கிறது 1997-ல் அமெரிக்க அரசால் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று.

முக்கியமாக குறைப்பிரசவத்தில் பிறக்கிற, சத்து மற்றும் எடைக் குறைவால் பாதிக்கப்பட்ட, ரத்த சோகை தாக்கிய, அதிக சளித்தொல்லை இருக்கிற குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலைத் தடுப்பூசி போடப்பட்டால்.. அது எதிரான விளைவுகளையே அதிகம் ஏற்ப்படுத்தும். ஆனால் நமது அரசோ, மஞ்சள் காமாலைத் தடுப்பூசியை ஏதோ காம்ப்ளான் கொடுப்பதுபோல எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்குப் பதிலாக கருவுற்ற அனைத்துப் பெண்களுக்கும் இலவச மஞ்சள் காமாலை சோதனையைச் செய்யலாம். அதில் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைக்கு மட்டுமே தடுப்பூசி போடலாம்.

**டாக்டர் அருண்குமார்:** 1.அமெரிக்காவில் 46 மாகாணங்களில் பிறந்த குழந்தைகளுக்கு ஹெபாடிடிஸ் பி தடுப்பூசி போடுவது கட்டாயம். நீங்கள் கூறுவது தவறான தகவல்.http://vaccines.procon.org/ view.resource.php

2. மேற்கூறிய எந்தப் பக்க விளைவுகளுக்கும் ஆதாரங்கள் இல்லை.

*i. World Health Organization. Expanded programme on immunization. Lack of evidence that hepatitis B vaccine causes multiple sclerosis. Weekly Epidemiological Record 72:149-152, 1997.*

*ii. National Multiple Sclerosis Society. Hepatitis B vaccine and multiple sclerosis.Press Release, Aug 21, 1998, reissued Jan 22, 1999.*

*iii. Shaw FE and others. Postmarketing surveillance for neurologic adverse events reported after hepatitis B vaccination. American Journal of Epidemiology 127:337-352, 1988*

*iv. http://www.ncbi.nlm.nih.gov/pubmed/15247605*

*v. http://www.ncbi.nlm.nih.gov/pubmed/16310295*

3. 'ஹெபாடிடிஸ் பி' தகாத உடலுறவு கொள்ளும் பெரியவர்களையும், போதை மருந்து ஊசி மூலம் செலுத்துபவர்களையும், மருத்துவப் பணியாளர்களையும் மட்டுமே தாக்கும் என்பது தவறு. தடுப்பூசிக்கு முன் வருடத்திற்கு 10,000 குழந்தைகளுக்கு மேல் தாக்கிவந்தது. மேலும், பெரியவராகும் போது எப்போது வேண்டுமானாலும் தாக்கும் அபாயம் உள்ளதால் குழந்தையிலேயே கொடுப்பதே சிறந்தது என்று எண்ணியே பிறந்தவுடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

*West DJ, Margolis HS. Prevention of hepatitis B virus infection in the United States: A pediatric perspective. Pediatric Infectious Disease Journal 11:866-874, 1992.*

இதனாலேயே 'ஹெபாடிடிஸ் பி' அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயம் ஆக்கப்பட்டது.

**டாக்டர் புகழேந்தி:** போலியோ தடுப்பு மருந்துக்கும் இதே போன்ற அதிர்ச்சி வரலாறு இருக்கிறது. இதில் ஊசி, சொட்டு மருந்து என இரு வகை உள்ளது. ஊசியில் உயிரற்ற கிருமிகள் இருக்கும். சொட்டு மருந்தில் உயிரோடு உள்ள கிருமிகள் இருக்கும். உயிரற்ற கிருமிகளைக் கொண்ட ஊசியால் பெரும்பாலும் பிரச்னை வருவதில்லை. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் இது தான் பயன்படுத்தப் படுகிறது. ஆனால் நம் ஊரில் அரசு முழுக்க முழுக்க சொட்டு மருந்தை மட்டுமே வழங்குகிறது. இது ஆபத்தானது. சம்பந்தப்பட்ட உடம்பு அந்த மருந்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அது போலியோவை ஏற்படுத்தும், உயிருக்கும் ஆபத்து ஏற்படுத்தும்.

போலியோ சொட்டு மருந்தைக் கண்டுபிடித்த ஜோனஸ் சால்க். "அமெரிக்காவில் 1961 க்குப் பிறகு ஏற்பட்ட அனைத்து போலியோவுக்கும் போலியோ சொட்டு மருந்துதான் காரணம்" என்று அமெரிக்க செனட் கமிட்டியில் வாக்குமூலம் அளித்திருப்பதே இதற்கு சாட்சி.

**டாக்டர் அருண்குமார்:** நீங்கள் பேசுவது பொதுமக்கள் பேசுவது போல் உள்ளது. போலியோ சொட்டு மருந்து என்பது live attenuated வைரஸ் உள்ள தடுப்பு மருந்து. அதாவது படிப்படியாக பலம் இழக்க வைக்கப்பட்ட வைரஸ் கொண்ட தடுப்பூசி. இதே வகை தான் MMR, BCG முதலியன. இதனால் நோய் எல்லாம் வருவதில்லை. இந்திய அரசாங்கம் ஏன் போலியோ ஊசியை விட்டு சொட்டு மருந்தைத் தேர்ந்தெடுத்தது என்று அறிய 'Park social and Preventive Medicine' மருத்துவ புத்தகத்தை படித்தால் தெரிந்து விடும்.

போலியோ சொட்டு மருந்து Herd Immunity கொடுக்கும். போலியோ ஊசி அதைக் கொடுக்காது. இதுதான் காரணம். மேலும், போலியோ சொட்டு மருந்தில் உள்ள வைரசால் போலியோ நோய் ஏற்படாது. அதன் வீரியம் குறைவு. அப்படிப் பார்த்தால், சொட்டு மருந்து எடுக்கும் கால் வாசி

பேருக்காவது போலியோ ஏற்பட வேண்டும் அல்லவா? அப்படி நடப்பதில்லை. ஏன்? சிந்தியுங்கள் மக்களே. Vaccine Derived போலியோ வைரஸ் - இதைத் தான் நீங்கள் குறிப்பிட வருகிறீர்கள்.

இது என்னவென்றால், Wild வகை எனப்படும் வீரியம் மிக்க இயற்கை போலியோ வைரஸ் குறைந்த பிறகு, சில சமயம் VDPV எனப்படும் Mutated வைரஸ் அரிதாக போலியோ நோய் பரப்பும். இதையும் முற்றிலும் ஒழிக்கவே சென்ற ஆண்டு முதல் படிப்படியாக இந்திய அரசு போலியோ சொட்டு மருந்தில் இருந்து போலியோத் தடுப்பூசிக்கு மாறி வருகிறது.

2018 ல் முற்றிலும் போலியோ ஊசி மட்டுமே போடப்படும். இத்தனை கவனமாக அரசு செயல் பட்டு வருகிறது. சரியாகப் புரியாமல், சகட்டு மேனிக்கு அபாண்ட பழி போடுவது அபத்தமாக உள்ளது. (இவ்வளவு அறிவியல் விளக்கம் குடுக்க கூட பயமாக இருக்கிறது. சில வாசகங்களை தப்பாக புரிந்து கொண்டு சிலர் பட்டிமன்றம் போல் ஒற்றை வரியை வைத்து கொண்டு வாக்குவாதம் நடத்துவார்கள்.)

**டாக்டர் புகழேந்தி:** 1995 ம் வருடம் அமெரிக்க அழகிப்பட்டம் வென்றவர் Heather Whitestone. சில ஆண்டுகளில் காது கேளாமை நோயால் பாதிக்கப் பட்டார். அதற்கு மருத்துவர்களால் சொல்லப்பட்ட காரணம் DPT எனப்படும் முத்தடுப்பூசி.

**டாக்டர் அருண்குமார்:** சுத்தப் பொய். அவர் காது கேளாமைக்குக் காரணம் ஒன்றரை வயதில் அவருக்கு ஏற்பட்ட Hemophilus Influenza எனப்படும் கொடிய பாக்டீரியா தாக்கம். இதை அவரே பேட்டிகளில் ஒப்புக்கொண்டுள்ளார். இதை உங்கள் தடுப்பூசி எதிர்ப்புக் கும்பல் தான் சகட்டு மேனிக்குத் திரித்து நெட்டில் உலாவ விடுகிறது. இதை நீங்களும் நம்பி விவாதங்களில் முன்வைக்கிறீர்கள்.

http://premierespeakers.com/christian/heather_whitestone/bio
http://www.nytimes.com/.../going-home-with-heather-whitestone... உண்மையில் அவருக்கு இப்போது உள்ளது போல் 1970 இல் HiB தடுப்பூசி போடப்பட்டிருந்தால், அவரின் கேட்கும் திறனை காப்பாற்றி இருக்கலாம்.

**டாக்டர் புகழேந்தி:** உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைப்படி, அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவை சேர்ந்த கறுப்பின மற்றும் இலத்தின் அமெரிக்கக் குழந்தைகள் 1500 பேருக்கு 1989 க் கும், 91 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் அம்மை நோய்த்தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதே ஊசி, இதே காலகட்டத்தில் பல ஆப்பிரிக்க நாட்டுக் குாந்தை களுக்கும் போடப்பட்டது. இது அந்தக் குாந்தை களின் பெற்றோருக்கே தெரியாமல் நடத்தப் பட்டது. அதுவரைக்கும் அம்மைத் தாக்குதலையே கண்டிராத அவர்கள், அந்த ஊசியின் விளைவால் பலவிதமான உடல் பாதிப்புக்கு உள்ளானார்கள். பலர் இறந்தும் போனார்கள். பலத்த எதிர்ப்புக்குப் பிறகு உலக சுகாதார நிறுவனம் அந்த மருந்தை சந்தையிலிருந்து விலக்கிக் கொண்டது.

**டாக்டர் அருண்குமார்:** இது ஒரு தவறான உதாரணம். விதிமுறைகளை மீறி, தவறாக நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியில், ஒரு Experimental மருந்தைப் பயன்படுத்தி, சில பாதிப்புகள் ஏற்பட்டன. அதற்காக அனைத்து Standard தடுப்பூசிகளையும் குறை கூறுவது முட்டாள்தனம்.

**டாக்டர் புகழேந்தி:** போலியோ சொட்டு மருந்தானது, குறிப்பிட்ட ஒரு வைரஸை குரங்கின் சிறுநீரகத்தில் வைத்து வளர்த்து எடுத்து, பின்னர் நோய்த் தடுப்பு மருந்தாக உருவாக்கப்படுகிறது. குரங்குகள் உரிய சோதனைகளுக்கு பிறகு தான் தேர்தெடுக்கப் படுகின்றன என்றாலும்., 1950 களில், இந்த மருந்துத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட குரங்குளை சிமியன் வைரஸ் 40 ( SV 40 ) என்ற வைரஸ் கிருமி பாதித்திருந்தது. இந்த வைரஸ், பல வருடங்கள் கழித்து மூளை, ஈரல், நுரையீரல் போன்ற இடங்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் திறன் கொண்டது. இதனால் இந்த மருந்து செலுத்தப் பட்டவர்கள் பெரியவர்களான போது அவர்களில் பலர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர்.

**டாக்டர் அருண்குமார்:** இது துரதிர்ஷ்டவசமானது. இது ஒரு விபத்து. நடந்தது 1950 ல். இது திருத்திக் கொள்ளப்பட்டு, நல்ல சொட்டு மருந்து வந்து, வருடத்திற்கு 60,000 பேருக்கு அமெரிக்காவில் போலியோ என்ற நிலை மாறி, போலியோ தடுப்பு மருந்து ஆரம்பித்த 6 வருடங்களில் வெறும் 61 பாதிப்புகள் வருடத்திற்கு என்று தலைகீழாக மாறியது - தடுக்கப்பட்டது தடுப்பூசியால் தான்.

https://www.cdc.gov/vaccines/pubs/pinkbook/polio.html
சிறு சிறு விபத்துக்களுக்காக தடுப்பூசி எல்லாம் வேண்டாம் என்பது தவறு. அறிவியலைப் பின் னோக்கி ஓட செய்யும் நடவடிக்கை.

இப்படித் தான் மனிதன் தோன்றியதில் இருந்து நூறு வருடங்களுக்கு முன்னால் வரை இருந்தான். இயற்கையோடு ஒன்றி. ஆனால் அவனது சராசரி ஆயுள் காலம் அப்போது வெறும் 23 வயது!!! கடந்த நூறு வருடங்களில் நவீன மருத்துவம், தடுப்பூசி, ஆண்டிபயாடிக் போன்றவை வந்த பிறகு தான் மனிதனின் சராசரி ஆயுள் காலம் கூடியது. இப்போது 67 ஆக இருக்கிறது. முன்பே சொன்னது போல சுகாதாரம் முக்கியம் தான். ஆனால் நீர் அல்லது உணவுத் தொற்று மூலம் பரவும் நோய்களை வேண்டுமானால் சுத்தம் சுகாதாரம் மூலம் தடுக்கலாம்.

தடுப்பூசி போடாமல் விட்டு, சமீபத்தில் கேரொளாவில் வந்தது போன்று டிப்தீரியா போன்ற கொடிய நோய்கள் மீண்டும் தலைதூக்கி உங்கள் பிஞ்சுக் குழந்தைகளைத் தாக்கினால், இந்த வாட்சாப் மக்களும் போராட்ட வீரர்களும் வந்து உங்களுக்குத் துணை நிற்கப் போவதில்லை. நீங்கள் தான் உங்களை நொந்து கொள்ள வேண்டும்.



- முன்அட்டை உள்பக்கத் தொடர்ச்சி

தேசீயவாதியும் வெட்கப்படுவது கூட கிடையாது. இந்த நிலையைப் போல ஒரு மானக்கேடான காரியம் இந்த நாட்டுக்கு வேறு ஒன்றுமே கிடையாது என்று சொல்லு வோம். அரசியல் சீர்திருத்தம் அதிகமாய் வழங்குவதற்காக என்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட சைமன் கமிஷனை, இந்த நாட்டில் 100க்கு 99 3/4பார்ப்பனரும் ஆட்சேபித்து பகிஷ்கரிக்க வேண்டுமென்றார்கள். சில பார்ப்பனரல்லாத சோணகிரிகளும் அவர்களைப் பின்பற்றினார்கள். ஆனால், தாழ்த்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டவர் களில் எல்லோருமே சைமன் கமிஷனை வரவேற்று, ஆதரித்து தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள். பகிஷ்கரித்தவர்கள் யோக்கியதையையும், ஆதரித்த வர்கள் அடைந்த பலனையும் இப்போது கவனித்துப் பார்த்தால், பகிஷ்காரக்கூச்சல் போட்டவர்கள் தங்கள் சமூக நலனுக்கும் ஆதரித்தவர்கள் தங்கள் விடுதலைக்குமாக நடந்து கொண்டார்கள் என்பது விளக்கமாகும்...

...ஆகவே இந்த ஜனநாயகம் மனித வர்க்கத்திற்கு நியாயமான சுதந்திரத்தையும், சுவாதீனத்தையும் கொடுக்கக் கூடியதா அல்லது அடிமைத் தனத்தையும், கெடுதியையும் கொடுக்கக்கூடியதா என்பதை யோசித்தாலும், ஜனநாயகத் தின் யோக்கியதை சுலபத்தில் விளங்காமால் போகாது. நமது மக்களின் ஜனநாயக உணர்ச்சியானது இன்று "நமது தேசம்" "நமது மதம்" "நமது ஜாதி" என்கின்ற தத்துவத்தின் மீதும் "முதலில் தேசம்" என்று பலரும் "முதலில் மதம்" என்று சிலரும் "முதலில் ஜாதி" என்று அநேகரும் கருதியே ஜனநாயகத் திட்டம் வகுப்பதில் முனைந்திருக் கின்றார்களே யொழிய, முதலில் மனித சமூகம் பிறகுதான் மற்றது என்கின்ற அறிவு இந்த நாட்டில், இன்றைய தினம், மகாத்மாக்கள் முதல் தேசிய வீரர்கள்-தொண்டர்கள் வரை, தேசாபிமானி முதல் தேசபக்தர் தேசியவாதிகள் வரை - ஆச்சாரியார், மடாதிபதி, சுவாமிகள் முதல் அடியார் கூட்டங்கள் வரை, ஆஸ்திக பண்டிதர்கள் முதல் அவர் களது மாணவர்கள் வரை யாராவது ஒருவருக்கு இருக்கின்றதா? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்தால் ஜனநாயகத் தத்துவத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது....

...ஆகவே மனித ஆட்சித்துவம் என்பது மனித தர்மத்துக்கும், மனிதத்துவத்திற்கும் பொதுவான நன்மை பயக்கும்படியானதாகவும் காப்பு அளிக்கும் படியானதா கவும் இருக்கவேண்டியதா? அல்லது "என் தேசம் காப்பாற்றப்பட்டபின்தான் மனித தர்மம், என் மதம் காப்பாற்றப்பட்ட பின்தான் மனித தர்மம், எனக்கு மோட்சத்தில் சரியான இடம் தேடிக் கொண்ட பின் தான் மனித தர்மம், எனக்கு நரகம் கிடைக்காமல் பார்த்துக் கொண்ட பின்தான் மனித தர்மம்" என்று பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்டு மனித பொது தர்மத்தையே கவலையற்றதாகக் கொண்டால் அந்த ஜனநாயகம் மனிதவர்க்க ஆட்சி ஆகுமா? அல்லது மத நாயகம், அல்லது தனிப்பட்ட மனிதனின் மோட்சநாயக ஆட்சியாகுமா என்று பார்த்தாலும், ஜனநாயக ஆட்சியின் போலித்தத்துவம் விளங்காமல் போகாது.

ஏனெனில் தேசநாயக ஆட்சியும், மதநாயக ஆட்சியும் மோட்ச நாயக ஆட்சியும், மற்ற பொதுக் காரியங்களும் ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு தனிமனிதனின் ஒவ்வொரு நிலைமைக்கும் ஒவ்வொருவிதமாகவும் இருந்துவருகின்றது. மேலும் இவைகளுக்கெல்லாம் பூரண சுதந்திரமும், பாதுகாப்பும் அளிப்பது தான் ஜனநாயக தத்துவம் என்பதாக மகாத்மாக்களால் பூரண சுயேச்சை வீரர்களால் தேசீய வாதிகளால் உறுதிவாக்களிக்கப் பட்டாய் விட்டது. ஆகவே, இந்த ஜனநாயகம் மனித சமூகத்திற்கு ஆபத்தானதா அல்லது அனுகூலமானதா என்பது அறிவாளிகளுக்கு விளங்காமல் போகாது....

...ஆகவே, லெனின் ஆட்சியா, கமால்பாஷா ஆட்சியோதான் மனிதத் தர்ம - மனித நாயக ஆட்சியாக இருக்க முடியுமே அல்லாமல் மற்றபடி எந்த சீர்திருத்தம் கொடுத்து, எந்த ஜனநாயக ஆட்சி கொடுத்து, அதை எந்த மகாத்மா ஒப்புக்கொண்டு அதை எந்த வெள்ளைப் பார்ப்பானோ, கருப்புப் பார்ப்பானோ மொட்டைப் பார்ப்பானோ மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டு நடத்திக் கொடுப்பதாயிருந்தாலும் அது ஒரு நாளும் மனித தர்ம ஆட்சியாயிருக்க முடியவே முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

மேலும் மனிதனுக்கு ஒரு நாயகம் வேண்டி இருந்ததின் காரணமே மனிதசமூகம் நாயகமில்லாமல் வாழ்க்கை நடத்தமுடியாமல் போனதினாலேயேயாகும். அந்தப்படி முடியாமல் போனதற்குக் காரணம், மனிதனுக்கு அறிவில்லாத தன்மையும் சுயநலத்தடிப்புமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் மேல்கண்ட இரண்டும் மக்களுடன் மக்கள் கலந்து ஒற்றுமையாயும் நம்பிக்கை யாயும் வாழச்செய்ய முடியாது.

ஆகவே மக்கள் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டியது என்பதற்கு ஆதாரமான காரணங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு அரசன் இல்லாமல் வாழலாம் என்கின்ற தன்மை அடையும் வரை தங்கள் பொது வாழ்வில் தங்க ளுக்கு தாங்களே நாயகர்களாயிருந்து கொள்வது என்பது சாத்தியமான காரியமாகுமா என்பதை கவனித்துப் பார்த்தாலும் ஜனநாயகத்தின் முட்டாள்தனம் விளங்காமல் போகாது. அந்தக் காரணங்கள் சரிபடுத்தப் படாத ஜனங் கள் மறுபடியும் தங்களைத் தாங்களே தங்கள் பொதுவாழ்வுக்கு நாயகர்களாய் இருந்து கொள்ளுவது என்பது சாத்தியமான காரியமாகுமா? என்பதை கவனித்துப் பார்த்தால் ஜனநாயத்தின் முட்டாள்தனம் விளங்காமல் போகாது. ஆகவே இப்போது ஜனநாயக ஆட்சி என்று நாம் சொல்லுவதெல்லாம் ஒருக்காலும் மனித தர்ம ஆட்சியாகவே ஆகாது. முதலில் நான் மனிதன். பிறகு தான் இந்தியனோ, எவனோ ஆவேன்.

தோழர் பெரியார், குடி அரசு - 08.02.1931
(தொகுக்கப்பட்டது)




Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com